# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 044 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 25, வியாழன் 09.01.2014

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30


09 JAN 2014



மப்பான வானிலை

29 C 24 C




பக்கம் 03

தொடர்கின்றது பணிப்புறக்கணிப்பு



பக்கம் 06

எச்சரிக்கையின் எதிரொலி



பக்கம் 07

அழகி சுட்டுக் கொலை



பக்கம் 23

இலங்கையுடனான ஆட்டத்தை இலகுவாக நினைத்தது பாகிஸ்தான்


# வடக்கு மாகாண அலுவலகங்கள் அனைத்திலும் வைக்கப்படவேண்டும் முதல்வரின் உருவப்படம்

## *இன்றைய அமர்வில் இதற்கும் வருகிறது பிரேரணை*

யாழ்ப்பாணம், ஜன. 09
வடக்கு மாகாண முதலமைச்சரின் உருவப்படத்தை மாகாண சபை அலுவலகங்கள் அனைத்திலும் வைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் பிரேரணை முன்வைத்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் அமர்வு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. இந்த அமர்வில் 7 பிரேரணைகள் சமர்ப்பிக்கப் படவுள்ளன.

**செங்கோல் தயார்**

வடக்கு மாகாணசபையின் அமர்வு இதுவரை காலமும் செங்கோல் இன்றியே நடைபெற்று வந்தது. இந்த நிலையில் வடக்கு மாகாண சபைக்குப் புதியதோர் செங்கோல் மற்றும் மாகாணக் கொடி, மாகாண இலச்சினை என்பன தயாரிக்கப்பட்டுள்ளன. இவை இன்றையதினம் உறுப்பினர்களின் அங்கீகாரத்துக்காகச் சபையில் சமர்ப்பிக்கப் படவுள்ளன.

**பிரேரணைகள்**

கொக்குத் தொடுவாய் மக்க

21 ஆம் பக்கம் பார்க்க

## தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜன. 09
நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 40ஆவதுஆண்டு நினைவு தினம் நாளை வெள்ளிக்கிழமை யாழ்.முற்றவெளியில் நினைவு கூரப்படவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணம் முற்றவெளியில் இடம்பெற்றது. இதன் போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் மின்சாரத்தில் சிக்குண்டு 9 பேர் உயிரிழந்தனர்.

இவர்கள் அனைவரது நினைவாகவும் யாழ்.முற்றவெளியில் 9 நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நினைவுத் தூபியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நாளை காலை 9.30 மணிக்கு நினைவஞ்சலி இடம்பெறவுள்ளது.(த-5)

# போர்க்குற்ற ஆதாரங்களை அடுக்கினார் மன்னார் ஆயர்

## *அமெரிக்க அதிகாரி ஸ்ரீபன் ராப்பை நேற்றுச் சந்தித்தவேளை*

யாழ்ப்பாணம், ஜன. 09
இலங்கை அரசின் மீதான போர்க் குற்றச்சாட்டுக்களை அமெரிக்காவின் போர்க்குற்ற நிபுணரிடம் ஆதாரங்களுடன் அடுக்கினார் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று மதியம் வருகை தந்த அமெரிக்காவின் போர்க்குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்செல் ஜே. சிசன் ஆகியோர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்தனர். நேற்று மாலை யாழ்.ஆயர் இல்லத்தில் வைத்து யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை ஆகியோரையும் இந்தக் குழுவினர் சந்தித்தனர்.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் முடிவில் இரு ஆயர்களும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டியிருப்பதால் அது தொடர்

21 ஆம் பக்கம் பார்க்க

> "போரின் இறுதிக்கட்டத்தில் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள், இரசாயன ஆயுதம் என்பவற்றைப் படைகள் பயன்படுத்தியுள்ளன. இவர்கள் இதனைச் சண்டையில் எப்போது, எங்கே பாவித்தார்கள் என்பதையும் மக்கள் எங்களுக்கு விவரமாகத் தந்துள்ளனர். அதனை அமெரிக்க தூதுவரிடம் கையளித்துள்ளோம் என்றார் மன்னார் ஆயர்.

## 64 ஏக்கரில் படைமுகாம் கோத்தாவால் திறந்து வைப்பு

*மிருசுவிலில் தனியார் காணிகள் மீது நிறுவப்பட்டது*



யாழ்ப்பாணம்.ஜன.9
மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 64 ஏக்கர் காணியைக் கையகப்படுத்திய பாதுகாப்பு அமைச்சு, 52 ஆவது படைத் தலைமையகத்தை அங்கு நிறுவியுள்ளது. இதனைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்றுத் திறந்து வைத்தார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணை கோருவதில் சவால்கள்

*யாழ்ப்பாணத்தில் கூறினார் ஸ்ரீபன் ராப்*

யாழ்ப்பாணம், ஜன. 09
சர்வதேச விசாரணையைக் கோருவதில் சில சவால்கள் இருப்பதாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அமெரிக்காவின் போர்க்குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப் சிவில் சமூகப்பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்காவின் போர்க் குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப் நேற்று மதியம் ஏ-9 பாதை வழியாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். அவருடன் இலங்கைக்கான அமெரிக்க

21 ஆம் பக்கம் பார்க்க

## நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீது இதுவரை நடவடிக்கை எதுவுமில்லை

*வடக்கு மாகாண சபை எதிர்நோக்கும் சிக்கலிது*

யாழ்ப்பாணம், ஜன. 09
வடக்கு மாகாணசபை அமர்வுகளில் இதுவரை நிறைவேற்றப்பட்ட எந்தவொரு தீர்மானங்களுக்கும், நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பிய கடிதங்களுக்கும் இதுவரை பதில் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் முதன் முறையாக நடத்தப்பட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தச்

21 ஆம் பக்கம் பார்க்க

## பூஸா தமிழ்க் கைதிகளையும் போர்க் குற்ற நிபுணர் பார்வை

யாழ்ப்பாணம், ஜன. 09
பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களை, இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்கப் போர்க் குற்ற நிபுணர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்காவின் போர்க் குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப்

21 ஆம் பக்கம் பார்க்க



*போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்க நிபுணர் ஸ்ரீபன் ராப் நேற்று 'உதயன்' பத்திரிகை அலுவலகத்துக்கும் வருகை தந்தார். உதயனின் நிர்வாக இயக்குநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசினார். கடந்த 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி இனந்தெரியாத ஆயுததாரிகளால் எரியூட்டப்பட்ட அச்சு இயந்திரத்தையும் அவர் பார்வையிட்டார். அவருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே. சிசனும் உடனிருந்தார். (த-21)*

## மக்களுக்கு ஏமாற்றம்

யாழ்ப்பாணம்.ஜன.9
வரணியில் 52 ஆவது படைப் பிரிவு இயங்கி வந்த வீடுகள், காணிகளை நேற்று ஒப்படைப்பதாகக் கூறி உரிமையாளர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும், நேற்று அங்கு சென்ற அவர்கள் வீடுகள், காணிகள் எதுவும் ஒப்படைக்கப்படாதமையால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

வரணியில் பல ஏக்கர் காணியில் இராணுவ முகாம் பல வருடங்களாக இயங்கி வந்

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கையகப்படுத்திய காணிகளிலேயே இராணுவ முகாம்கள் அமைப்பு

### ஹத்துரு சிங்க நேற்றுக் கூறினார்

யாழ்ப்பாணம்.ஜன.9

யாழ்.மாவட்டத்தில் பிரிகேட் தலைமையகங்களுக்கும் 39 பற்றாலியன்களுக்கும் அரச காணிகள்மற்றும்கையகப்படுத்தப்பட்ட காணிகளிலேயே கட்டங்கள் அமைக் கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றப் பகுதியில் 52 ஆவது படைத் தலைமையகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:- 1995 ஆம் ஆண்டு 'ரிவிரச' நடவடிக்கையின் போது நாம் படை முகாம்களை உருவாக்க வேண்டிய நிலை இருந்தது. தமிழீழ விடுதலைப் புலி களின் காலமாக அது இருந்தமையால் நாம் பொதுமக்களின் வீடுகளிலும் தங்கிஇருந்தோம்.

புலிகளிடமிருந்து பல இடங்களை விடுவித்து பல முகாம்களை அமைத்தோம். 2009 மே 19 ஆம் திகதிக்குப் பின்னர் நாம் விரைவாக நிலங்களை மீட்கக்கூடியதாக இருந்தது. அன்று தொடக்கம் நாம் தங்கியிருந்த பொதுமக்களின் வீடுகள், காணிகளை சிறிது சிறிதாக விடுவித்து வருகிறோம். விரைவில் பொதுமக்களின் வீடுகள், காணிகள் என்பவற்றிலிருந்து விலகி விடுவோம்.



யாழ்ப்பாணத்தில் படையினருக்கு முகாம்களை அமைப்பதற்கென 432 இடங்களைத் தந்துதவிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு நன்றி கூறுகிறேன் - என்றார். (த-4)

# யாழ்ப்பாணத்தை விட்டு போவதற்கு மனமில்லை

### ஹத்துருசிங்க சொல்கிறார்

யாழ்ப்பாணம்.ஜன.9

யாழ்ப்பாணம்தான் எனக்குப் பிடித்திருக்கிறது. யாழ்ப்பாணத்தை விட்டுப் போக விருப்பமில்லை. என்றாலும் யாழ்ப்பாணத்தை விட்டுப் போய்த்தான் ஆக வேண்டும் என்று தெரிவித்தார். யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

வரணியில் பொதுமக்களின் வீடுகள், காணிகளைச் சேர்த்து இயங்கி வந்த 52 ஆவது படைத் தலைமையகம் மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியை அண்மித்து நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பல வருடங்களாக இங்கு பணியாற்றியுள்ளேன். இங்கு தொடர்ந்து இருப்பதற்கு விருப்பமாக உள்ளது - என்று அவர் கூறினார். (த-4)

# திருவுருவ மந்திர பூசை இன்று சித்தங்கேணியில்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் இந்து ஆயலங்களின் புனிதத் தன்மையை பேண வலியுறுத்தி நடத்தப் படவுள்ள ஊர்வலத்தில் கொண்டு செல்வதற்கான ஓம் நமசிவாய பிரார்த்தனை சிவலிங்க திருவுருவ மந்திர பத்திர வெளியீட்டு வைபவமும் பிரார்த்தனையும் இன்று வியாழக் கிழமை நண்பகல் 12.30 மணிக்கு சித்தங்கேணி ஸ்ரீ சிவ சிதம்ப ரேஸ்வரர் ஆலய மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ.சா. வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-14)

# இராணுவ வாகனம் மோதி நேற்று வயோதிபர் காயம்

கிளிநொச்சி,ஜன.9

கிளிநொச்சி ஏ-9 வீதியில் பாதசாரிகள் கடவையில் வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபர் ஒருவரை இராணுவ ஜீப் வாகனம் மோதித் தள்ளியதில் வயோதிபர் காயமடைந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி ஏ-9 வீதியின் பௌத்த விகாரைக்கு முன்பாகவுள்ள மஞ்சள் கோட்டுக் கடவையில்வீதியைக்கடக்கமுயன்ற வயோதிபர் ஒருவரைக் கிளிநொச்சி நகரில் இருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த இராணுவ 'ஜீப்' வாகனம் மோதியது.

இச் சம்பவம் நேற்று புதன் கிழமை நண்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த வயோதிபர் காயமடைந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-6)

# இரு வருட கால வரவு-செலவை வழங்காத வடக்கு மாகாண சபை

### ஆளும் கட்சி உறுப்பினரின் கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 09

வடக்கு மாகாண சபையின் கடந்த இரு வருடங்களுக்கான வரவு செலவு அறிக்கைகள், இன் றைய அமர்வுக்கு முன்னதாக வழங்கப்படவேண்டும் என்று ஆளுங்கட்சி உறுப்பினர் முன்வைத்த கோரிக்கையையும் வடக்கு மாகாண சபை நிறை வேற்றவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் க.சர்வேஸ்வரனால் கடந்தவரவு செலவுத்திட்ட விவாதத்தில் முன்வைக்கப்பட்ட மேற்படி கோரிக்கையே நிறைவேற்றப்படவில்லை.

கடந்த மாதம் இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றிய அவர், தற்போது தரப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் எந்த விவரங்களும் இல்லை. அதனை விட கடந்த வரவு செலவுத் திட்டத்தில் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக 80 மில்லியன் ரூபாவு க்கும் அதிகமான நிதிக்குக் கல்வி அமைச்சின் செயலாளரி னால் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளமையால் இந்த வரவுசெலவுத் திட்டத்திலிருந்தே அந்த ஒப்பந் தத்துக்குரிய நிதி செல்லவுள்ளது.

எனவே கடந்த இரண்டு வருடத்துக்குரிய பூரண கணக்கு அறிக்கைகள் வழங்கப்பட வேண்டும். அதுவும் அடுத்த அமர்வுக்கு விவாதிப்பதற்குரிய போதிய கால அவகாசம் வழங்கிக் கணக்கறிக்கைகள் தரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். இந்தக் கோரிக்கைக்கு அமை வாக இதுவரை எந்தவொரு அறிக்கையும் கிடைக்க வில்லை என்று மாகாணசபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

இன்று அடுத்த மாகாணசபை அமர்வு இடம்பெறவுள்ள நிலையில் ஆளுங்கட்சி உறுப்பினர் முன்வைத்த கோரிக்கையைக் கூடச் சபை நிறைவேற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# பட்டதாரி பயிலுநருக்கு நியமனக் கடிதம் சிங்களத்தில்

வரணிப் பகுதியைச் சேர்ந்த பட்டதாரிப் பயிலுநர் ஒருவருக்கு தனிச் சிங்களத்தில் நியமனக் கடிதமும், கடமை தொடர்பான விளக்கமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் உள்வாங்கப்பட்ட பயிலுநருக்கே இவ்வாறு சிங்கள மொழியில் மட்டும், அதன் பிரதிப் பணிப்பாளர் ஒருவரால் ஒப்ப மிடப்பட்டே இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் தமிழர் என்றும், மும்மொழிக்கொள்கை தொடர்பில் அரசு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாகத் தெரிவித்த போதும் தனிச் சிங்களத்தி லேயே பல கடிதங்கள் பரிமாறப்படுவதாகவும் அரச மட்ட அதிகாரிகள் சிலர் கவலை தெரிவித்தனர். (ஐ-122)

# காட்டு மரம் கடத்திய மூவர் நேற்றுக் கைது


கிளிநொச்சி, ஜன. 9

கிளிநொச்சி புதுமுறிப்புப் பகுதியில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான காட்டு மரங்களைக் கடத்திச் சென்ற மூவரை கிளிநொச்சி மாவட்ட வனவள திணைக்கள அதிகாரிகள் நேற்றுப் புதன்கிழமை கைது செய்தனர்.

ஸ்கந்தபுரம் முட் கொம்பன் காட்டுப் பகுதியில் இருந்து முதிரை மற்றும் பாலை மரங்களைச் சட்ட விரோதமான முறையில் எடுத்துச் சென்ற வாகனம் ஒன்றையும் மரக் குற்றிகளையும் கிளிநொச்சி மாவட்ட வனத்துறை அதிகாரிகள் கைப்பற்றினர்.

அத்துடன் இதனை எடுத்துச் சென்ற சாரதி உட்பட மூவரைக் கைது செய்து விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர்.

இதே வேளை குறித்த மூவரையும் வாகனத்தையும் இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ள தாக வட்டார வன உத்தி யோகத்தர் எஸ். பிரபாகரன் தெரிவித்தார். (த-6)



*நீண்ட நாள்களின் பின் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இரவு கடும் மழை பெய்தது. இதனால் ஊற்றுப்புலம் கோணாவில் வீதியில் வெள்ள நீர் பாய்வதைக் காணலாம். (ஐ-18)*

# காவலரணை அகற்றுமாறு கோரிக்கை

வவுனியா, ஜன. 9

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவ காவலரணையும், பொலிஸ் சோதனை நிலையத்தையும் அகற்றி உதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போர் முடிவடைந்து நீண்ட காலமாகி விட்டநிலையிலும் குறித்த காவலரண்கள் அகற்றப் படாது காணப்படுகின்றன.

தனியார் காணிகளில் இவை அமைந்துள்ளமையால் காணி உரிமையாளர்கள் தமது காணிகளை துப்புரவு செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். (ஐ-402)

# தனிச் சிங்களத்தில் அழைப்பாணை எழுதுமட்டுவாள் வாசி அந்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

எழுதுமட்டுவாள் வாசி ஒருவருக்கு கொழும்பு அளுத்கடை நீதிமன்று தனிச் சிங்களத்தில் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் வெள்ளவத்தைப் பகுதியில் வீதியைக் குறுக்கறுத்து சென்றவேளை அங்கு கடமையில் இருந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்து விசாரணைக்கு வருமாறு சுட்டுத் துண்டொன்றைக் கொடுத்துள்ளனர்.

சுட்டுத் துண்டு சிங்களத்தில் எழுதப்பட்டிருந்ததால் அதனை வாசித்து விளங்கிக் கொள்ள முடியாது விசாரணைக்கு செல்லாது விட்டுவிட்டார் அவர்.

இதனால் பொலிஸார் குறித்த நபருக்கு எதிராக அளுத்கடை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நிலையில் நீதிமன்றப் பதிவாளரினால்சந்தேகநபருக்கு தனிச் சிங்களத்தில் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளவற்றை விளங்கிக் கொள்வதற்காக அவர் பலரிடம் அலைந்து, பின்னர் தான் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருக்கும் விடயத்தைத் தெரிந்துகொண்டுள்ளார். (ஐ-122)

# இனந்தெரியாதோரின் தாக்குதலுக்குள்ளானவர் வைத்தியசாலையில்

புது வருடத்தினத்துக்கு மறுநாள் யாழ். கொய்யாத் தோட்டம் பகுதியில் இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில்யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

புதுறோட், கொய்யாத் தோட்டத்தைச்சேர்ந்தவேதநாயகம்பிரதீஸ் குமாரன் (வயது -32) என்பவரே இவ்வாறு இனந் தெரியாதவர்களால் தாக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் தொடர்பில் வைத்தியசாலைப் பொலிஸார் ஊடாக விசாரணை நடை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# அரச ஊழியருக்கான சலுகையை எங்களுக்கும் வழங்குங்கள்

### வன்னி உதவி ஆசிரியர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம்.ஜன.9

தமக்கு வாழ்க்கைப்படி, கஷ்ட மற்றும் அதி கஷ்ட பிரதேசக் கொடுப்பனவுகளை வழங்குமாறு கடந்த வருடம் நியமனம் பெற்ற உதவி ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான கோரிக்கை அடங்கிய மனுவொன்றை வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவிற்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஊடாக அனுப்பி வைத்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட நாம் குறைந்த சம்பளத்தில் சேவையாற்றி வருகின்றோம்.

எமக்கு அரச நியமனம் கிடைப்பதற்கு முன் வழங்கப்பட்ட சமுர்த்தி உதவிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் என்பன தற்போது இடைநிறுத்தப் பட்டு விட்டன.

இதனால் நாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

எமது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு ஏனைய ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி, கஷ்ட பிரதேசத்துக்கான கொடுப்பனவுகளை எமக்கும் வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றும் உள்ளது. (ஐ-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கின்றது பணிப்புறக்கணிப்பு

## வவுனியாவில் இரண்டாவது நாளாகவும் போராட்டம்

வவுனியா. ஜன.9

இரண்டாவது நாளாகவும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உட்பட பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களில் அமைய அடிப்படையில் பணிபுரியும் சுகாதார தொழிலாளர்கள் உட்பட ஏனைய பணிபுரியும் ஊழியர்கள் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி தொடர் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையைச் சேர்ந்த ஊழியர்கள் தமது அலுவலகத்தின் முன்பாக உணர்ச்சி பூர்வமாக கோஷங்களை எழுப்பியவாறும், பதாகைகளையும் தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா நகரசபை செட்டிகுளம், நெடுங்கேணி பிரதேச சபைகளைச் சேர்ந்த மேற்படி ஊழியர்களும் இரண்டாவது நாளாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட் டுள்ளனர்.

வவுனியாவில் கடும் மழை பெய்துள்ள நிலையில் துப்புரவுப் பணிகளும் முன்னெடுக்கப்படாததால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வரையில் தாம் தொடர்ந்து தமது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பாக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைவர் க.சிவலிங்கத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது;

உரிய கல்வித் தகைமைகளின் அடிப்படையில் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். தற்போது பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். குப்பை கூளங்களை அகற்ற வேண்டும். எமது பணியாளர்கள் நிரந்தர நியமனம் கோரி நடத்தும் போராட்டம் நியாயமானது- என்றார்.

(க-402-421)

## கால்நடைகளுக்கு தீவனமாக மாறிய நெற்பயிர்கள்

யாழ்ப்பாணம்,ஜன.9

வலி.தென்மேற்கில் உள்ள நெற்காணிகளில் பெரும்பாலானவை கால்நடை மேய்ச்சல் நிலமாக மாறியுள்ளன.

உரிய காலங்களில் மழை பெய்யாததாலும், வறட்சியாலும் நெற்செய்கை பாதிப்படைந்தது.

இவ்வாறு பாதித்த நெற்காணிகளே தற்போது வலி. தென்மேற்கில் கால்நடை மேய்ச்சல் நிலமாக மாறியுள்ளன.

குறித்த காணிகளுக்கு ஒரு ஏக்கருக்கு களை பிடுங்குதல், விதைநெல், களைநாசினி, அடியுரம், உரம் மற்றும் வேறு செலவுகள் என 21 ஆயிரம் ரூபா வரை செலவு செய்தும் இறுதியாக இன்று கால்நடை தீவனமாக மாறியுள்ளன நெற்பயிர்கள். (வ-50)



## நிலக்கீழ் மின் இணைப்பில் வீதி விளக்குகள் அமைப்பு

கொழும்புத்துறை.ஜன.9

யாழ்.நகர வீதிகளுக்கு நிலக்கீழ் மின்சார இணைப்புடனான வீதி மின் விளக்குகள் அமைக்கும் பணிகள் மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக காங்கேசன்துறை வீதியின் இரு மருங்கிலும் நிலக்கீழ் மின்சார குழாய்கள் பொருத்தப்பட்டு மின் விளக்கு கம்பங்கள் நிறுத்தும் பணிகள் இடம்பெறுகின்றன.

யாழ்.நகரை அழகுபடுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வேலைத் திட்டம்நகரின்ஏனையவீதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-135)

# 75 ஏக்கர் நிலத்தில் பாதீனியம் அழிப்பு

## யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கூறினார்

யாழ்ப்பாணம், ஜன.9

கடந்த டிசெம்பர் மாதத்தில் இடம்பெற்ற பாதீனியம் அழிப்பில் குடாநாட்டில்75ஏக்கர்வரை பாதீனியம் அழித்துக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்தார்.

குடாநாட்டில் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கை வெற்றியளித் துள்ளதா, என்று கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

குடாநாட்டில்பாதீனியம்760ஏக்கர் வரை பரந்து காணப்பட் டது. இதை அழிப்பதற்கான முயற்சிகளில் வடமாகாண விவசாய அமைச்சு, யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து பிரதேச செயலகங்கள் , பிரதேச சபைகள், பாடசாலைகள், கிராமிய மட்ட நிறுவனங்கள், விவசாய சம்மேளனம் என்பன செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளன. அதனால் ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தது. மீதமுள்ள 685 ஏக்கர் நிலங்களிலும் இந்த நடவடிக்கை தொடர வேண்டும். பாதீனியம் தொற்றுக்கான ஒன்று. அதனால் ஒவ்வொரு பிரதேசங்களிலும் தொடர்ச்சியாகக் கண்காணிப்புச் செய்து அவற்றை அழித்துக் கொண்டிருக்க வேண்டும்.

15 வருடங்களுக்கு விதைகள் நிலைத்து நிற்கக் கூடியவை என்பதால் பூப்பதற்கு முன்னதாகவே அவை அழிக்கப்பட வேண்டும். எனினும் பாதீனியத்தை அழிப்பதில் எவரும் அக்கறை காண்பிப்பதாக இல்லை.

பொதுமக்களது காணி மற்றும் பராமரிப்பில் உள்ள காணிகளில் இதனை அழிக்கும் நடவடிக்கைகளில் உரிமையாளர்கள், பாதுகாவலர்கள் ஈடுபடாவிடில் எதிர்பார்க்கும் வெற்றி பெரியளவில் கிடைக்காது. எனவே அனைவரும் இதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (வ-7)

## சாவகச்சேரி மருத்துவமனை விசேட சிகிச்சைப் பிரிவில் வெள்ளம்

தென்மராட்சி,ஜன.9

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மேல் மாடியில் உள்ள விசேட சிகிச்சை அறை விறாந்தையில் மழை வெள்ளம் ஒழுகுவதால் நோயாளர்கள் இருக்கைகளில் அமர்ந்திருக்க முடியாத நிலை காணப்படுகிறது.

குரங்குகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் கட்டடத்தின் கூரை ஓடுகள் உடைந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கூரைக்கு ஏறுவதற்கு வசதிகள் இல்லாததால் திருத்தம் செய்ய முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் பல்வேறு நோய்கள் காரணமாக கிளினிக்குக்கு வரும் நோயாளர்கள் மழை பெய்யும் வேளைகளில் மணிக்கணக்கில் ஒழுக்குகளின் மத்தியில் நிற்க வேண்டி யுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ)

## ஆரியம்பிட்டி மயானத்தை புனித பிரதேசமாக்குக

யாழ்ப்பாணம்,ஜன.9

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தி சுற்றுமதில் அமைத்து வழங்க பிரதேச சபை தவிசாளர் முன்வர வேண்டும்.

இவ்வாறு நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையம் கோரிக்கை விடுத்துள் ளது.

நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்குச் சுற்றுமதில் அமைத்து புனிதம் பேணல் எனும் தலைப்பில் தவிசாளருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நவாலி, ஆரியம்பிட்டி இந்து மயானம் பல வருடங்களாக துப்புரவு பணி இன்றி பற்றைக் காடாகக் காட்சியளிக்கின்றது.

நூற்றாண்டு பழைமை வாய்ந்த

**நவாலி, ஆரியம்பிட்டி இந்து மயானம் பல வருடங்களாக துப்புரவுப் பணி இன்றி பற்றைக் காடாகக் காட்சியளிக் கின்றது.**

குறித்த மயானத்தை சுற்றுமதில் அமைத்து புனரமைப்பு செய்ய வேண்டும். மேலும் மயான சுற்றுமதில் அமைப்பதற்கு முன்பாக நில அளவை செய்யப்பட வேண்டும்.

அத்துடன் எரிகொட்டகை, சிறிய ஆலயம், மண்டபம், உள்ளக வீதி என்பனவற்றை மீளப் புனரமைக்க தவிசாளர் முன்வர வேண்டும் - என்றுள்ளது. (வ-50)

# உணவு நிலையங்களில் சுகாதாரம் பேணல் அவசியம்

## மருத்துவர் நித்தி கனகரத்தினம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.9

நோய்த் தாக்கங்களில் இருந்து மக்களைப் பாதுகாக்கக் கூடியதாக உணவு நிலையங்கள் சுகாதார நட்வடிக்கைகளைக் கையாள்வது கட்டாயம் என்று உணவுப் பராமரிப்பும் பாதுகாப்பும் என்ற கருத்தரங்கில் வளவாளர் மருத்துவர் நித்தி கனகரத்தினம் தெரிவித்தார்.

யாழ்.பொது நூலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உணவகங்களின் உரிமையாளர்களுக்கான உணவு பாதுகாப்புத் தொடர்பான பயிற்சிப் பட்டறை இடம்பெற் றது. இதன் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:-

உணவைப் பொறுத்தவரை மிகவும் பாதுகாப்பாக இருத்தல் வேண்டும். அத்துடன் உணவகங்களில் பணியாற்றும் ஒவ்வொருவரும் மக்களின் நலன்களைக் கவனத்தில் எடுத்து செயற்படக்கூடியதாகத் தாமும் சுத்தமாக இருப்பதுடன் உணவையும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். நான் சில வைபவங்களுக்குச் சென்றபோது அங்கு உணவு வழங்குவோர்களின் நடவடிக்கைகளை அவதானித்துள்ளேன். திருப்திகரமான செயற்பாடுகள் இல்லாததால் உணவை எடுக்காமலே திரும்பியதும் உண்டு. வடைகளுக்கு பழைய சோற்றைப் பயன்படுத்தும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இவற்றால் நோய்த் தாக்கங்கள் அதிகரிக்கக்கூடிய நிலை ஏற்படுகின்றது. இங்கு மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. உணவுப் பழக்கவழக்கம் தொடர்பில் விழிப்புணர்வு தேவை என்று மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி எஸ்.பாலகுமார், பொது சுகாதார பரிசோதகர்கள், உணவு கையாளும் நிலையங்களைச் சேர்ந்த உரிமையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-7)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாஸ் குணவர்தனவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

## சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்காததால்

கோடீஸ்வரவர்த்தகரானமொஹமட் சியாமின் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன உட்பட எட்டு சந்தேகநபர்களையும் இம்மாதம் 20ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கு சம்பந்தமாக எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் பற்றிய சட்ட மா அதிபரின் அறிவுறுத் தல்கள் தமக்கு இன்னும் கிடைக்கவில்லையென புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து சந்தேக நபர்களின் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

வாஸ்குணவர்தன,அவரது மகன் ரவிந்து வாஸ் குணவர்தன, சப் இன்ஸ் பெக்டர் லக்மினி இந்திக்க பமுனுசிங்க, பொலிஸ் கான்ஸ்டபிள்களான காமினி சனத் சந்திர, பிரியந்த சஞ்சீவ, கெலும் ரங்கன திசாநாயக்க, திமுது ஶ்ரீலால், திசாநாயக்க ஆகியோருக்கே இவ்வாறு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. இந்த வழக்கின் ஏனைய சந்தேகநபர்களாக விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த பிரிஷாந்த கோரலகே மற் றும் மொஹமட் பவுஸ்டீன் ஆகிய இரு வரும் அரசதரப்பு சாட்சிகளாக மாற சம்மதம் தெரிவித்ததையடுத்து அவர்கள் இருவரும் ஏற்கனவே பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

புலனாய்வுப் பொலிஸாரின் சார்பில் நீதிமன்றில் ஆஜரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபே சேகர இவ் வழக்கு சம்பந்தமாக மேலும் நால்வரின் சாட்சியங்கள் பெற்றுக்கொள்ளப் பட்டிருப்பதாகவும் முழு விவரங்களும் சட்டமா அதிபரின் அலுவலகத்துக்கு சமர்ப்பிக் கப்பட்டிருப்பதாகவும் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் இன்னும் தமக்குக் கிடைக்கவில்லையென்றும் தெரிவித்ததையடுத்து நீதிவான் சந்தேக நபர்களை இம் மாதம் 20ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.



# வவுனியாவில் வீழ்ந்தது பழைமை வாய்ந்த மரம்

வவுனியா, ஜன.9

வவுனியாவில் நேற்றுமுன்தினம் அதிகாலை வீசியகாற்றில் வவுனியா தெற்கு கல்வி வலய வளாகத்தில் நின்ற பழைமை வாய்ந்த மரமொன்று வீழ்ந்ததில் சைக்கிள், மோட்டார் தரிப்பிடத்தின் மேற் கூரை என்பன சேதமடைந்தன.


நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக வவுனியாவிலும் கடந்த மூன்று தினங்களாக சிறு மழையுடன் காற்றும் வீசி வருகின்றது.

நேற்றுமுன்தினம் அதிகாலை காற்று சற்றுப் பலமாக வீசியதால் வாழை மரங்கள் உட்பட வேறு சில பெரிய மரங்களும் வீழ்ந்துள்ளன. வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் உள்ள அரச ஊழியர்களின் வாகனத் தரிப்பிடத்தில் பகல் வேளையில் சைக்கிள்கள், மோட் டார் சைக்கிள்கள் தரித்து நிற்பது வழக்கமாகும். ஆனால் அதிகாலை வேளையில் அங்கு நின்ற மரமொன்று அந்த நிலையத்தின் மீது வீழ்ந்த போதிலும், வாகனங்கள் சிக்கிக் கொள்ளாது தப்பித்துவிட்டன. அந்த மரத்தை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக வவுனியா தெற்கு கல்வி வலய ஊழியர்கள் தெரிவித்தனர். (க-402)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 9

தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தர்மகர்த்தா சபையினால் உருவாக்கப் பட்ட "தும்பளை முத்துமாரி" எனும் நூல் வெளியீடு எதிர் வரும் 15 ஆம் திகதி மாலை 5 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.



(த-400)

# இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்குங்கள்

## கோருகின்றார் ஶ்ரீ ஶ்ரீ ரவிசங்கர்

சென்னை, ஜன.9



இந்தியாவில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்கு இந்திய மத்திய அரசு குடியுரிமை வழங்குவதற்கு முன் வரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் வாழும் கலை அமைப்பின் நிறுவுநர் ஶ்ரீ ஶ்ரீ ரவிசங்கர்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியாவில் 12 கோடி இளைஞர்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முதன் முறையாக வாக்களிக்க உள்ளனர்.

அதேசமயம் நாட்டில் 10 கோடி பேர் போலி வாக்காளர்களாக உள்ளனர். அவற்றைக் களைந்து18வயதுக்குமேல் உள்ள அனைவரும் கட்டாயம் வாக்களித்து, 100 சதவீத வாக்குப் பதிவை சாத்தியமாக்க வேண் டும். அதற்காக இளைஞர்களிடம் விழிப்பு ணர்வு ஏற்படுத்தும் முயற்சிகளில் எங்கள் அமைப்பு ஈடுபட்டுள்ளது.

அண்மையில் இலங்கை சென்ற போது தமிழர்கள் வசிக்கும் பகுதிகளைப் பார்வையிட்டேன். இந்தியா அளித்த உதவிகள் அங்கு முழுமையாகச் சென்றடையவில்லை.

அங்குள்ள மக்கள் இன்னமும் அச்சத்துடனும், இறுக்கத்து டனும் வாழ்கின்றனர்.

அங்குள்ள மக்களுக்கு நன்மை ஏற்படும் விதமாக தமிழகத்தில் வாழும் 1.5 லட்சம் இலங்கை மக்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று கோருகின்றேன்.

என்று தெரிவித்தார்.

(ற)

# மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு சிறை

## கிளிநொச்சி நீதிமன்றம் விதித்தது

கிளிநொச்சி நகரில் மது போதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவருக்கு 14 நாள்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் 7,500 ரூபா தண்டமும் விதித்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி கிளிநொச்சி ஏ-9 வீதியில் மது போதையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற ஒருவரைக் கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் அவரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

சந்தேக நபரை 14 நாள்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் 7,500 ரூபா தண்டம் செலுத்துமாறும் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங் கப்பட்டது.

மது போதையில் வாகனம் செலுத்துபவர்களால் அதிகளவு விபத்துக்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் அதிக பட்சத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-55)

**பணியாளர் தேவை**

*யாழ். நகர எல்லைக்குள் அச்சகத்துக்கு Page maker, Coral draw, இல் வேகமாக Typing, செய்யக்கூடிய வரும் Photo shopம், தெரிந்த பெண் பணியாளர் தேவை. (அச்சகத்தில் பணியாற்றிய அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது)*

*தொடர்புகளுக்கு 0776109454*

ZOA

RELIEF | HOPE | RECOVERY

40 years

**Consultancy opportunity for Final Evaluation**

ZOA Sri Lanka is looking for individual or institution to undertake final evaluation of "Shelter, Livelihood and WASH Assistance Project" implemented in Mullaitievu District.

Terms of reference for this exercise shall be shred on request.

For further information please contact;

e mail thileepan@zoasrilanka.org

Phone 0772 930 760

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி கௌரி சுரேசன் அவர்களின் அன்புத் தந்தை

***ஆறுமுகம் கந்தையா துரைசிங்கம்***

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சோமாஸ் கந்தப் பெருமானை வேண்டுகின்றோம்.



*யா/ ஶ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.*
*புத்தூர்*

*ஆசிரியர் கழகம்*

**31ஆம் நாள் நினைவலைகள்**



மண்ணில் 04.08.1984

விண்ணில் 10.12.2013

**தர்மகுலசிங்கம் பிரகாஸ்**

அன்பின் சிகரமே பிரகாஸ்
ஐயா! சோதரர்கள் நாம் சேர்ந்திருந்த
நாள்களை மறந்துவிடமுடியுமா?
ஆசை அக்கா என்று எனை அழைக்க யார் உளர்.
சாவு உன்னைக் காவு கொண்டுவிட்டது.
விதி என்று ஆறுவதோ? சதி என்று வாடுவதோ!
உன் பிரிவால் அனல்பட்ட புழுவாய்த் துடிக்கும்

சிலாவத்தை, முல்லைத்தீவு. (42099)(10.6)

உன் ஆசை அக்கா, பிள்ளைகள்.

NALIN Information Technologies(Pvt)Ltd.

**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**

09-13 வரை

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு

Mega Offer

விசேட சலுகை

கணனிகள், மடிக் கணனிகள்
HSPA Dongle (E-173), Pen drive,
Memory chip(Micro SD), External HDD,
Printer, Headphone அனைத்திற்கும்
விசேட விலைக்கழிவுகள் ! விபரங்கள் நேரில்.

இலவசம் Anti Virus (1y), Mouse, Head Phone
கணனிகள், மடிக் கணனிகள் கொள்வனவு செய்பவர்களுக்கு

12.01.2014 ஞாயிற்றுக்கிழமை நிறுவனம் விசேடமாக திறந்திருக்கும்


No. 195/4, Parameswara Junction, Palaly Road.

021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin_it

Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு adv@uthayan.com 0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாவற்குழியில் ரயில் நிலையம் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (வ-51)

## மூவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஜன.9

உரிய ஆவணங்களின்றியும் மதுபோதையுடனும் வாகனம் செலுத்திய மூவருக்கு 48 ஆயிரத்து 500 ரூபா அபராதம் சாவகச்சேரி நீதிமன்றில் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அவ்வேளையில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து சாவகச்சேரி பெரியமாவடி வாசிக்கு 21 ஆயிரம் ரூபாவும், நுணாவில் மேற்கு வாசிக்கு 19 ஆயிரம் ரூபாவும், அல்லாரை தெற்கு வாசிக்கு 8 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டன. (வ-9)

## பனம் கிழங்கு செய்கையாளர் பாதிப்பு

வரணி, ஜன.9

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த முறை பனம் கிழங்குச் செய்கையாளர்கள் உரிய விளைச்சலைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்பார்க்காத மழை காரணமாக பனம் கிழங்குப் பாத்திகள் அமைப்பதில் கால தாமதம் ஏற்பட்டது. இடைக்கிடையே மழை பெய்ததை நம்பி பனம் பாத்திகள் போடப்பட்டன. அதன் பின்பு பனம் விதைகள் முறையாக முளைத்து கிழங்குப்பருவம்அடைவதற்குபோதிய மழை இருக்கவில்லை. இதனால் மழையை நம்பி போடப்பட்ட பனம் பாத்திகள் கிழங்கு முளைக் காத நிலையில் வெறிச்சோடிக் கிடக்கின்றன. (வ-122)

# வெங்காய பயிர் நாசம்

## தொடர் மழை காரணமாக

அச்சுவேலி,ஜன.9

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட காலபோக வெங்காயப் பயிர்ச் செய்கை ஆரம்பத்திலேயேதொடர்மழையால்அழுகிச் சேதமடைந்துள்ளது. அளவுக்கதிகமாகச் செலவு செய்து வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் கைப்பொருளையும் இழந்து கவலைக்குஉள்ளாகியுள்ளனர்.

காலபோக வெங்காயப் பயிர்ச் செய்கை இந்த வருட ஆரம்பத்திலேயே ஆரம்பமாகியது. மாரி மழை உரியகாலத்தில் பெய்யும் என்று எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகள் மழை காலம் கடத்தி வந்தமையால் வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர்.



விதை வெங்காயத்துக்கு பெரும் தட்டுப்பாடும் அளவுக்கு அதிகமான விலை அதிகரிப்பும் நிலவியது. 50 கிலோ விதை வெங்காயம் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் 13 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் ஆண்டுதோறும் செய்கை பண்ணும் பயிரை கைவிட விரும்பாது வெங்காயம் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த ஆறு தினங்களாக தொடர்ந்து வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்படுவதோடு மழையும் தொடர்ந்து பெய்து வருகின்றது. இதனால் நடுகை செய்யப்பட்ட வெங்காயம் முளை கொள்ளாமல் குமிழ் அழுகி சேதமடைந்திருப்பதோடு முளைத்த பயிரின் தாள்களும் அழுகிச் சேதமடைந்துள்ளன.

இந்த வகையில் அச்சுவேலி, இடைக்காடு, வளலாய், தம்பாலை, குட்டியப்புலம், புத்தூர், ஆவரங்கால், ஈவினை, உரும்பிராய், ஊரெழு மற்றும் வடமராட்சி வலிகாமம் பகுதிகளில் நடுகை செய்யப்பட்ட வெங்காயப் பயிர்கள் ஆரம்ப நிலையிலேயே சேதமடைந்துள்ளன. இதனால் வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பொருளா தார ரீதியில் நிலைகுலைந்து தளர்வடைந்த நிலையில் உள்ளனர்.

உரிய காலப் பகுதியில் மழை பெய்யாமையால் நெற்பயிர்ச் செய்கை பெருமளவில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. அத்துடன் பெரும் முதலீட்டில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயப் பயிர்ச் செய்கையும் தொடர் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ். மாவட்ட விவசாயிகள் செய்வ தறியாது நிலைகுலைந்து அடுத்து என்ன செய்வது எனத் தெரியாத நிலையில் உள்ளனர். (வ-11-86)

## காப்புறுதி வழங்குமாறு கோரி மறியலில் ஈடுபட்ட வர்த்தகர்கள்



தென்மராட்சி,ஜன.9

இழப்பீடு வழங்கக் கோரி காப்புறுதி அலுவலகம் முன்பாக கொட்டும் மழையில் மறியலில் ஈடுபட்ட வர்த்தகர்கள் பொலிஸாரின் தலையீட்டின் பின்னர் கலைந்து சென்றனர். அதன் பின்னர் குறித்த அலுவலகம் திறக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள போன் விற்பனை நிலையத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டுப்போயின. கடை உடைமைகளுக்கு காப்புறுதி செய்யப்பட்டதால் இழப்பீடு கோரி அதன் உரிமையாளர் விண்ணப்பித்திருந்தார். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் இரண்டு மாதங்களுக்கு முன்பாக இருவரைக் கைது செய்து நீதிமன்றில்முற்படுத்தியிருந்தனர். பொருள் இழப்புக்கான நட்ட ஈடு கோரி மாதங்கள் கடந்தும் வழங்கப்படாததால் கடை உரிமையாளரும், பணியாளர்களும் சாவகச்சேரியில் உள்ள காப்புறுதி அலுவலகத்தைத் திறக்கவிடாமல் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் அங்கு வந்து மறியலில் ஈடுபட்டோரை அப்புறப்படுத்தி அலுவலகத்தைத் திறக்கச் செய்தனர். (வ-9)

## புனரமைப்பதெனத் திட்டமிட்ட வீதிப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை

தென்மராட்சி,ஜன.9

சாவகச்சேரி பிரதேச சபையால் மீள் எழுச்சித் திட்டத்தில் கடந்த வருடம் "புனரமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட சரசாலை ஐயனார் வீதி வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையென அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் பிரதேச சபையினால் மீள் எழுச்சித் திட்டத்தில் புனரமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட கைதடி நவபுரம் - மட்டுவில் இணைப்பு வீதி, மந்துவில் குடியேற்றத் திட்ட வீதி ஆகியவை கடந்த வருடம் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்ட போதிலும் அவற்றுடன் அறிவிக்கப்பட்ட சரசாலை ஐயனார் வீதி வேலைகள் ஆரம்பிக்கப்படாதது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## தண்ணீர் என்று நினைத்து பெற்றோலால் முகம் கழுவிய சாரதி

போத்தலுக்குள் இருந்த பெற்றோலை தண்ணீரென நினைத்து முகம் கழுவிய வாகனச் சாரதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை சாவகச்சேரியில் இடம்பெற்றது. தென்னிலங்கையிலிருந்து வந்த வாகனத்தை அதன் சாரதி காலை உணவுக் காக சாவகச்சேரியில் நிறுத்திவிட்டு வாகனத்தினுள் காணப்பட்ட போத் தலில் உள்ள நீரை எடுத்து முகத்தைக் கழுவிய போதே அது பெற்றோல் எனத் தெரியவந்தது. (வ-9)

# தனிப்பட்ட தேவைக்காக நிறுத்தப்படும் வாகனங்களுக்கு வரி

## அச்சுவேலி பஸ் நிலையத்துடன் இணைந்த நகர்ப் பகுதியில்

அச்சுவேலி,ஜன.9

அச்சுவேலி பஸ் நிலையத்தோடு இணைந்த நகர்ப் பகுதியில் தனிப்பட்ட தேவையின் நிமித்தம் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு வரி அறவிடப்படுகின்றது. கடந்த முதலாம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்படும் இந்த நடைமுறை தொடர்பாக வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின் றனர்.

10 ரூபா தொடக்கம் 50 ரூபா வரையும் வரி அறவிடப்படும் நடைமுறை தொடர்பாக எந்த விதமான பகிரங்க அறிவித்தலோ வெளிப்படுத்தல்களோ இன்றி திடீரென வரி அறவிடப்படுகின்றது. வரி அறவீடு தொடர்பாக வாகன உரிமையாளர்களும், வரி அறவீடு செய்பவர்களும் சர்ச்சையில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.


> வியாபார நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்யவருவோர் மற்றும் பொருள்களை விற்பனை செய்ய வரும் வாகனங்கள் மட்டு மல்ல வாகனங்களை நிறுத்தி விட்டு உணவகங்களுக்கு உணவு உண்பதற்கு செல்லும் வாகனங்களின் உரிமையாளர்களிடமும் வரி அறவிடப்படுகின்றது.

வியாபார நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்யவருவோரின் மற்றும் பொருள்களை விற்பனை செய்ய வருவோரின் வாகனங்கள் மட்டு மன்றி உணவகங்களுக்கு உணவு உண்பதற்கு செல்லும் வாகனங்களின் உரிமையாளர்களிடமும் வரி அறவிடப்படுகின்றது. அச்சுவேலி பொதுச் சந்தையின் மேல்மாடியில் செயற்படும் மக்கள் வங்கி மற்றும் பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள ஹற்றன்நஷனல்வங்கிகளுக்கு வரும் வாடிக்கை யாளர்களிடம் இருந்து வரி அறவிட முற்படுவதாகக் கூறப்படுகின்றது.

இதுவரை காலமும் பொதுச் சந்தைக்கு உள்ளே பொருள்களை விற்க - வாங்கச் செல்லும் வாகனங்களுக்கு மட்டும் வரி அறவீடு செய்யப்பட்டு வந்தது. இந்த வருடத்தில் இருந்து சந்தைக்கு வெளியே வர்த்தக நிலையங்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்படுவது மக்களை குழப்பத்துக்கு உள்ளாக் கியுள்ளது. இந்த வருடம் வரி அறவீடு செய் வதற்கான புதிய நடைமுறையை வலி.கிழக்கு பிரதேச சபை குத்தகைக்கு வழங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் வரி அறவீட்டு நடைமுறை விவரம் மற்றும் வானங்களுக்கான வரி அளவு எந்த இடங்களில் நிறுத்தப் படும் வாகனங்களுக்கு வரி அறவிடப்பட வேண்டும் என் பது தொடர்பான அறிவித் தலை வலி.கிழக்கு பிரதேச நிர்வாகம் வெளியிடவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (வ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகாராஷ்டிரா ரயிலில் தீ விபத்து: 9 பேர் சாவு

மகாராஷ்டிரா மாநிலம் கோல்வாட் ரயில் நிலையம் அருகே மும்பை-டேராடூன் எக்ஸ்பிரஸ் ரயிலில் தீ பிடித்ததில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்தத் தீ விபத்து இடம்பெற்றது. விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.
கடந்த டிசம்பர் மாதம் 28ஆம் திகதி ஆந்திர மாநிலம் அனந்தபூர் மாவட்டம், புட்டபர்த்தி அருகே சென்றுகொண்டிருந்த பெங்களூர்-நண்டெட் எக்ஸ்பிரஸ் ரயிலில் அதிகாலை நேரிட்ட தீ விபத்தில் 26 பயணிகள் உயிரிழந்தனர். 13 பேர் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகினர். (ற)

## பிரியங்காவால் பரபரப்பானது காங்கிரஸ் கூட்டம்

புதுடில்லியில் நடந்த காங்கிரஸ் கட்சியின் உயர்நிலைத் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் பிரியங்கா காந்தி பங்கேற்றமை அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் காங்கிரஸ் அரசியலில் அவர் முக்கிய பங்கு வகிப்பாரோ என்ற எண்ணத்தை இது ஏற்படுத்தியுள்ளது.
குறித்த கூட்டத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியின் அரசியல் ஆலோசகர் அகமது படேல், மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர்கள் ஜனார்த்தன் துவிவேதி, அம்பிகா சோனி, அஜய் மாக்கன் ஆகியோர் கலந்துகொண்டனர். எனினும் அந்தக் கூட்டத்தில் ராகுல் காந்தி பங்கேற்றாரா என்பது குறித்து தெளிவான தகவல் இல்லை. இதுபற்றி உறுதிப் படுத்தவும் காங்கிரஸ் வட்டா ரங்கள் மறுத்துவிட்டன.
காங்கிரஸ் உயர்நிலைத் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் பிரியங்கா காந்தி கலந்துகொண்டமை அவர் தீவிர அரசியலில் ஈடுபடுவாரோ என்ற சந்தேகத்தை இந்திய அரசியல் வட்டாரத்தில் ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் நான்கு மாநிலங் களில் நடைபெற்ற சட்டப்பேர வைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தது. இதையடுத்து வரும் மக்களவைத் தேர்தலில் பிரியங்கா களத்தில் இறங்கி தீவிர பிரசாரத்தில் ஈடுபடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

# எச்சரிக்கையின் எதிரொலி

## *கருணாநிதியைச் சந்தித்தார் அழகிரி*

சென்னை, ஜன.9
தி.மு.கழகதின் தென்மண்டல அமைப்புச் செயலாளர் மு.க.அழகிரி அந்தக் கட்சியின் தலைவர் மு.கருணாநிதியுடன் அவசர சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.
கட்சியின் கட்டுப்பாடுகளை மீறுவோர் கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி விடுத்திருந்த கடுந்தொனியிலான எச்சரிக்கையின் எதிரொலியாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது.
கடந்த சில தினாங்களுக்கு முன்னர் மதுரை தி.மு.க அமைப்புகள் அனைத்தும் கலைக்கப் படுகின்றன என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அன்பழகன் அறிவித்திருந் தார். அதையடுத்து மதுரையில் முடிசூடா மன்னராக தனி ஆட்சிநடத்திவரும் மு.க.அழகிரியின் ஆதரவாளர்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது.

> “ கடந்த சில தினங்களுக்கு முன்னர் மதுரை தி.மு.க அமைப்புகள் அனைத்தும் கலைக்கப் படுகின்றன என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அன்பழகன் அறிவித்திருந் தார். அதையடுத்து மதுரையில் முடிசூடா மன்னராக தனி ஆட்சி நடத்திவரும் மு.க.அழகிரி ஆதரவாளர்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது.



கட்சியின் அறிவிப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த அழகிரி, “ தி.மு.க. அமைப்புகள் கலைக்கப்பட்டமைஎனக்குதெரியாது. தே.மு.தி.கவுடான கூட்டணி தேவையற்றது" என்று தெரிவித்திருந்தார்.
அதையடுத்து கூட்டணி குறித்து அழகிரி கூறிய கருத்துக்குக் கடும் கண்டனம் தெரிவித்த கருணாநிதி, கழகத்தின் கட்டுப்பாட்டைக் குலைக்க முயற்சிப்பவர்கள் யாராக இருந்தாலும் கழகத்தின் உறுப்பினர் பொறுப்பிலிருந்தே ஒதுக்கி வைக்கப் படுவார்கள் என்று எச்சரித்திருந்தார்.
இந்த நிலையில், தி.மு.க. தலைவர் கருணாநிதியை அவரது கோபாலபுரம் இல்லத்தில் அழகிரி நேற்றுத் திடீரெனச் சந்தித்துப் பேசினார். எனினும் அவர்களிடையே கலந்துரையாடப் பட்ட விடயங்கள் எவை என்பது குறித்து எதுவும் வெளியாகவில்லை. (ற)

## நாசிக்கில் நிலநடுக்கம் சேதங்கள் குறித்து தகவல் இல்லை

நாசிக், ஜன.9
மகாராஷ்டிர மாநிலம் நாசிக் பகுதியில் நேற்றுக் காலை மிதமான நிலஅதிர்வு ஏற்பட்டுள் ளது. ரிச்டர் அளவுகோலில் 3.2 ஆக பதிவாகியுள்ள இந்த நில நடுக் கம் சுர்குனா, கல்வான், தெல்வா உள்ளிட்ட பகுதிகளிலும் உணரப்பட்டது. எனினும் பெரியளவில் சேதங் கள் எதுவும் ஏற்படவில்லை. (ற)

## ஆம் ஆத்மி அலுவலகம் மீது தாக்குதல்



புதுடில்லி, ஜன.9
புதுடில்லியில் உள்ள ஆம்ஆத்மி கட்சியின் அலுவலகம் நேற்று இனந்தெரியாத நபர் களால் தாக்கப்பட்டுள்ளது. தாக்குதலில் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. காஷ்மீர் விவகாரம் குறித்து ஆம்ஆத்மி கட்சித்தலைவர் பிரசாந்த் பூஷன் கூறிய கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்ரீராம் சேனா அமைப்பினர் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ல)

## அமெ. தூதரகங்களுக்கு இந்தியா புதிய கட்டுப்பாடு

புதுடில்லி, ஜன.9
அமெரிக்க தூதரகங்களுக்குள் ஜனவரி 16ஆம் திகதி முதல் வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று இந்தியா கட்டுப்பாடு விதித்துள்ளது. இந்திய தூதரக அதிகாரி தேவ்யானி கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையே இராஜதந்திர ரீதியாக முறுகல் நிலைகாணப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாகவே இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களுக்கு பல கட்டுப்பாட்டுகளை விதித்து வருகின்றது இந்திய அரசு.
"அமெரிக்கத் தூதரகங்களுக்குள் வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். அமெரிக்கத் தூதரக வாகனங்கள் விதி மீறல் குற்றங்களில் ஈடுபட்டால் அபராதம் விதிக்கப்படும்." என்று அறிவித்துள்ளது இந்திய மத்திய அரசு.
விஸா முறைகேட்டில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரி தேவ்யானிக்கு சட்ட நடவடிக்கைகளில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று இந்தியா அமெரிக்காவை வலியுறுத்தி வருகின்றது. அதன் பின்னணியிலேயே அமெரிக்கத் தூதரங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது. (ற)

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned post up to 24.01.2014.

FACULTY OF AGRICULTURE

Temporary Lecturer in
Agronomy/ Agricultural Biology/ Agricultural Chemistry/ Agricultural Economics
Temporary Demonstrator in
Agronomy/ Agricultural Biology/ Agricultural Chemistry/ Animal Science/ Agricultural Economics/ Agricultural Engineering

| Post | Salary |
|---|---|
| Temporary Lecturer | Rs.26020/- p.m. (fixed) |
| Temporary Demonstrator | Rs.21370/- p.m. (fixed) |

Other allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self –addressed stamped envelope** 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the downloaded application forms through the University website should be attached a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Application for the above posts should be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.


Those who wish to apply **for more than one post** should make **separate applications.**

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
2014.01.08

(C/10994)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சவுத்வேல்ஸ் பகுதியில் உள்ள பார்த்கோவல் துறைமுகத்தில் எழும் இராட்சத அலைகளைப் பார்வையிடும் மக்கள்

## பிரிட்டனில் வெள்ள அபாயம்

பிரிட்டனின் தெற்கு பகுதிகளிலும், தென்கிழக்கு பகுதிகளிலும் பெய்து வரும் தொடர் கனமழையால் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. அதையடுத்து பல்வேறு பகுதிகளிலும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடற்கரைப் பகுதிகளில் கடும் காற்றின் காரணமாக அலையின் சீற்றம் அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே மக்கள் கூடுதல் பாதுகாப்புடன் இருக்கவேண்டும் என்று பிரிட்டனின் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கடந்த சில நாள்களாக வீசிய புயலின் தாக்கத்தாலும் விடாமால் பெய்து வரும் மழையாலும் பிரிட்டன் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர். (ற)

## வடகொரிய நாடாளுமன்ற தேர்தல் மார்ச் மாதம்

பியாங்யான், ஜன.9

வடகொரியாவின் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டின் இறுதியில் ஜனாதிபதியாகப் பதவி வகித்தகிம்ஜோங்-2சாவடைந்து. அவரது மகன் கிம் ஜோங் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

அதேவேளை, ஜனாதிபதியின் ஆணைகளுக்கு ஒப்புதல் வழங்கும் ஓர் அமைப்பாகவே வடகொரிய நாடாளுமன்றம் செயற்படுகின்றது. அதனால் தேர்தல் என்பது அந்த நாட்டில் ஒரு சம்பிரதாய நிகழ்வாகவே பார்க்கப்படுகின்றது.தேர்தலின் பின்னர் கிம் ஜோங் வயதான உறுப்பினர்களை நீக்கி விட்டு இளைஞர்களைத் தனது நாடாளுமன்ற அமைச்சரவையில் இணைத்துக்குக் கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (ற)

# ஈராக் படைப்பலத்தை அதிகரிக்கிறது அமெ.

## நவீன ஆயுதங்களை வழங்க முடிவு



**தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கம். ஈரானும் இதுவிடயத்தில் ஈராக்குக்கு உதவத் தயாராக உள்ளது என்று அறிவித்துள்ளது.**

நியூயோர்க், ஜன.9

ஈராக் இராணுவத்தை பலப்படுத்தும் வகையில் நவீன ஆயுதங்களை அந்த நாட்டுக்கு வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. அந்தநாட்டில் தீவிரவாதச் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஈராக்கில் அல்-குவைதா அமைப்பின் செயற்பாடுகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. அந்த நாட்டின் முக்கிய நகரங்கள் சில அல்-குவைதா அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. அந்த நகரங்களை மீட்பதற்கு ஈராக் அரசு இராணுவ நடவடிக்கைக்குத் தயாராகிவரும் நிலையில், அந்த நாட்டின் இராணுவத்தினரைப் பலப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளது அமெரிக்க அரசு.


ஆயுதம் வழங்கும் திட்டத்தை துரிதகதியில் நடைமுறைப் படுத்துமாறு அமெரிக்க இராணுவத் தலைமையகத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதையடுத்து இன்னும் ஓரிரு தினங்களில் இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் நவீன ரக ஆயுதங்கள் ஈராக்குக்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறப் படுகின்றது.

அதேவேளை, முக்கிய நகரான பலுஜாவை அல்-குவைதா அமைப்பினர் கடந்தவாரம் கைப்பற்றியிருந்த நிலையில், அந்தப் பகுதிக்கு அருகே உள்ள அன்பர் பகுதியிலும் மோதல்கள் தீவிரமாகியுள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## பேரழிவின் விளிம்பில் மத்திய ஆபிரிக்கா

நியூயோர்க், ஜன.9

மத்திய ஆபிரிக்க குடியரசு நாட்டில் ஏற்பட்டுள்ள வன்முறைகளால் அந்த நாடு பேரழிவின் விளிம்பில் உள்ளது என்று எச்சரித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.



இதுகுறித்து ஐ.நா. சபை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், "மத்திய ஆபிரிக்க குடியரசு நாட்டின் தலைநகர் பாங்கீயில் மட்டும் 5 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் தமது வீடுகளையும் உடைமைகளையும் இழந்துள்ளனர். 20 லட்சத்துக்கும் அதிகமானோர் மனிதாபிமான உதவிகளுக்காகக் காத்திருக்கின்றனர். ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் தங்களின் சொந்த நாடுகளுக்குத் திரும்பியுள்ளனர். வன்முறைகள் தொடருமானால் அந்த நாடு பேரழிவைச் சந்திக்கும்" என்று கூறப்பட்டுள்ளது.

மத்திய ஆபிரிக்கக் குடியரசில் கடந்த மார்ச் மாதம் மிஷெல் ஜோடோடியா ஜனாதிபதியாகப் பதவியேற்றதைத் தொடர்ந்து இரு பிரிவினரிடையே வன்முறைகள் வெடித்தன. (ற)

**தொடரும் வன்முறைகளால் 20 லட்சம் மக்கள் பாதிப்பு**

## 60 மணி நேரப் போராட்டம்; உயிரைக் காத்த சவப் பெட்டி

லண்டன், ஜன.9

தைவானில் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட ஒருவர் நீச்சல் தெரியாத நிலையில் 60 மணி நேரமாகப் போராடி உயிர் பிழைத்துள்ளார்.

தைவான் நாட்டை சேர்ந்தவர் செங்லியேன். அவர் கடந்த 3 ஆம் திகதி கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தார். அப்போது மிகப்பெரும் அலைஒன்று எழுந்து அவரை உள்ளே இழுத்துச் சென்றது.

அவருக்கு நீச்சல் தெரியாத நிலையில் திக்கு முக்காடிப் போனவரின் கைகளில் சிக்கியது ஒரு சவப் பெட்டி. அந்தச் சவப் பெட்டியைக் இறுகப் பிடித்துக் கொண்டு 60 மணி நேரமாக **உயிருக்குப் போராடினார் லியேன்.**



60 மணி நேரம் கழித்து அந்தப் பகுதியால் பயணித்த கப்பல் ஒன்றால் மீட்கப்பட்டார் லியோன். தற்போது மருத்துவக் கண்காணிப்பில் நலமாக உள்ளார்.

லியோனின் கைகளில் சிக்கிய சவப்பெட்டி குறித்த தகவல்களை வழங்க மறுத்துவிட்டனர் தைவான் பொலிஸார். (ற)

## ஒலிம்பிக் போட்டிகளுக்கு இடையூறுகள் ஏற்படலாம்

### ரஷ்ய புலனாய்வுத்துறை எச்சரிக்கை

மொஸ்கோ, ஜன.9

ரஷ்யாவில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கு தீவிரவாதிகள் இடையூறுகள் விளைவிக்கலாம் என்று தெரிவித்துள்ளனர் அந்த நாட்டு புலனாய்வுத்துறையினர்.

கடந்த மாத இறுதியில் இரு தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ள நிலையிலேயே அந்த நாட்டு புலனாய்வுத் துறை இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

புலனாய்வுத்துறையினரின் எச்சரிக்கையை அடுத்து ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. 30 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் குறித்த பகுதிகளில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ரஷ்ய அரசுக்கு எதிராகச் செயற்பட்டுவரும் செச்னிய போராளிகளின் அமைப்பின் தலைவர் டொக்கு உமாரோவ், குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின்போது ரஷ்யாவில் தாக்குதல்களைத் நடத்துவதற்கு தயாராக இருக்குமாறு தமது அமைப்பின் போராளிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)



## அழகி சுட்டுக் கொலை

2004ஆம் ஆண்டு வெனிசுலா நாட்டின் அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 29 வயதுடைய மோனிகா ஸ்பியர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். குடும்பமாக அவர் மத்திய வெனிசுலாவில் உள்ள பியூர்ட்டோ காபெல்லோ மற்றும் வேலன்சியா நகருக்கிடையே நெடுஞ்சாலையில் காரில் வந்த போது அவர்களைப் பின் தொடர்ந்து வந்த குழுவொன்றே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளது. சம்பவ இடத்திலேயே மோனிகாவும் அவரது கணவரும் உயிரிழந்தனர். அவர்களுடைய 5 வயதுக் குழந்தை காலில் காயத்துடன் தப்பிக் கொண்டது. வெனிசுலாவின் அதிர்ச்சியூட்டும் சம்பவமாகக் கருதப்படும் இந்தக் கொலைச் சம்பவம் தென் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி நோயல் அரசரட்ணம் விமலேந்திரன் (J.P) அவர்களின்

## (இளைப்பாறிய அதிபர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி)

# மணிவிழா வாழ்த்தும்

# சேவை நலன் பாராட்டும் – 09.01.2014




Dr. NOEL ARASARATNAM VIMALENDRAN (J.P.)

## Education & Service Details of

### Dr. NOEL ARASARATNAM VIMALENDRAN (J.P.)

(Principal Grade 1 special post)
Middle School Supervisor - 1995
Vice Principal - 2000
Principal - 2003

**Educational Qualifications:**
* B. Sc. (Double Maths Statistics) Peradeniya – 1984
* M. A. Computer Education London – 1988
* P. G. Certificate in Ecumenical studies – Switzerland 1988
* Doctor of Professional Studies (Social Development),GULL,USA - 2013

**Professional Qualifications:**
* P.G. Diploma in Education (Merit Pass) - Jaffna 1985
* Certificate in Counseling Association of Health & Counseling

**Teaching Experiences:**
* Teacher of Mathematics – Jaffna College - 1976
* Visiting Lecturer Jaffna Technical College 1993 – 1995
* Visiting Lecturer Jaffna College Undergraduate Department in Business Communication.
* Business Mathematics & Management Information Studies for Banking CIMA and AAT course 2003-2011

**Positions held:**

*Treasure:*
- Jaffna Diocese of the Church of South India – (1986 – 1992)
- American Ceylon Mission – (1986 – 1992)
- Jaffna Christian Union – (2000 – 2003)
- Staff Benefit Fund

*Secretary:*
- Jaffna Diocese of the Church of South India – (1995 – 1996)
- Medical Board of the JDCSI - (1986-1992)
- Administrative Committee of the JDCSI appointed by the Synod.
- Round Table
- Jaffna College Y.M.C.A

*Chairman:*
- Christian Institute for the Studies of Religion and Society
- Medical Board JDCSI – (1998 – 2005)
- Management Council of JCIT & JCIA – (1998 – 2012)

*President:*
- Jaffna Schools Basket Ball Association
- Jaffna Schools Cricket Association
- Jaffna Schools Hockey Association
- Jaffna Inter Collegiate Christian Federation
- Staff Benefit Fund of Jaffna College
- Round Table

*Member:*
- Science Faculty of the University of Jaffna
- Synod Executive of the Church of South India
- Vellore Medical College council
- Staff Representative to the Jaffna College Board of Trustees in USA.

*His Initiatives:*
- Organized the Dr. Holms Basket ball tournament
- Organized the K. A. Selliah Futsal
- Organized the Mary Elias Under 14 Net Ball Tournament
- Organized Anantharatnam Memorial Hockey Tournament
- Organized Twenty 20 Cricket Tournament

*Buildings:*
- Renovated old Principal's Bungalow
- Renovated the "C" Block
- Renovated the Physics Lab
- Renovated the Home Science Block
- Renovated the Hunt Hall
- Renovated the Ottley Hall
- Renovated Computer Lab and equipments
- Renovated the Bunker Hall
- Renovated the Sanders Hostel
- Newly built Principal's Bungalow
- Newly Built Rajakone's Canteen Block
- Newly Built Middle School Building
- Newly Built Score Board ☞ Basket Ball Court
- Cricket Side Nets
- Purchase of two lands with house for the staff quarters

*Countries visited:*
☞ India ☞ United kingdom ☞ USA ☞ Singapore ☞ Germany ☞ Switzerland ☞ France ☞ Canada ☞ Italy

### TREMENDOUS ACHIEVER



Our College has been truly blessed with succession of illustrious personalities who have graced the office of principal Dr .Noel .A. Vimalendran is one such individual who has made an indelible mark in the history of Jaffna College. His tenure of principal has been one of tremendous achievement for the school in terms of academic excellence, as well as responding success in many spheres.Dr .A. Noel.A.Vimalendran beings a new life of contented retirement, I am sure he will have a many happy memories of his achievement at Jaffna College. I am confident that a person of his capabilities will continue to be an asset to our community.

On behalf of the staff and students of Jaffna College I take this opportunity to wish him well.

May God bless you

**- Rev.Dr.D.S.Solomon, Principal. Jaffna College.**

### MAN OF DEVOTEE



Dr. Noel Arasaratnam Vimalendran served Jaffna College as principal with devotion and loyalty from 2003 to 2013. He was called upon to take up the reins of Jaffna College during a difficult period. Knowing the need of his Alma Mater, he willingly took up this position and served the school with devotion, always ensuring that the College focused on the worthy vision of its founders.

Dr. Vimalendran was an asset to his College and also to his church. He made a valuable contribution to the diocese as its treasurer and as a member of its various Boards and Committees. With a feeling of immense satisfaction in all the tasks that he has accomplished, Noel Vimalendran, has handed over the reins of the College.

*"From our watch-tower we can but vaguely see what the morrow will bring forth – but we know that the foundations of the College have been securely laid, and it can go on fulfilling its ideal."* So ends J. V. Chelliah, his record of A Century of English Education. On this secure foundation has Mr. Noel Vimalendran built with loyalty and commitment. May he continue his service to the community.

**- Shiranee Mills Principal, Uduvil Girls' College.**

### சேவை தொடர வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணக் கல்லூரி அதிபராகக் கடந்த பத்து ஆண்டுகளை நிறைவு செய்ததுடன் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனாக ஆசிரியராக உப அதிபராக உயர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் கல்விச் சமூகத்துக்கும் பெரும் வழிகாட்டியாகவும் சேவையாளனாகவும் உழைத்து இளைப்பாறிய எங்கள் அதிபர் கலாநிதி நோயல் விமலேந்திரன் அவர்களை வட்டமேசை சார்பில் வரும் காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ்வதற்கும் மேற்கொண்டு கல்வி சமூகப் பணிகளைத் தொடரவேண்டும் என்றும் கடவுளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**தி.சிவசண்முகநாதன், வட்டமேசைத் தலைவர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.**

### தற் துணிவும் சிறந்த ஆளுமையும் கொண்ட அதிபர்



யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராக கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேல் பணிபுரிந்து, அரிய பல வரலாற்றுப் பதிவுகளைத் தடம்பதித்து விடைபெறும் கலாநிதி.நோயல் விமலேந்திரன் அவர்களுக்கு இந்நாளில் நன்றி யுடன் வாழ்த்துக்கூறுவதில் பேருவகையடைகின்றேன். அவரது சிறந்த ஆளுமையும், ஆற்றல்களும், திறன்களும் யாழ்ப்பாணத்தில் அனைத்து மாணவ சமூகத்தினதும் கல்விக்கும் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியுள்ளன. தேசிய ரீதியிலான Srilanka Unites- மாணவ ஒன்றுகூடல், சமாதானம், நல்லெண்ணம் மேம்படுத்தும் வகையிலான விளையாட்டுப்போட்டிகள் (Soccer, Cricket, Hockey) பலவற்றை ஒழுங்குபடுத்தி யாழ்ப்பாண மாணவர்களுடைய ஆளுமை மேம்பாட்டுக்கு வழி சமைத்தவர் கலாநிதி நோயல் விமலேந்திரன் அவர்கள். புனித பத்திரிசியார் கல்லூரியுடனான நீண்ட பாரம்பரியங்கொண்ட விளையாட்டுப் போட்டித் தொடரினை பல நெருக் கடிகள் மத்தியிலும் பேணிக்காத்து மெருகூட்டியவர் அவர்.யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்க தலைவராக பல வருடங்கள் பணி புரிந்து, துடுப்பாட்டத்தில் ஈடுபடும் அனைத்துப் பாடசாலைகளும் வேண்டிய உபகரணங்களைப் பெற முன்னின்று உழைத்தவர். யாழ்ப்பாண மாணவ சமூகத்திற்கு அவர் உவந் தளித்த சேவைக்காக அன்புடனும், நன்றியுடனும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருட்திரு.ம.ஜெறோ செல்வநாயகம் அதிபர், புனிதபத்திரிசியார் கல்லூரியாழ்ப்பாணம்.**

### MESSAGE FROM THE PRINCIPAL, ST JOHN'S COLLEGE, JAFFNA



Having served at one of the age-old educational institutions of the country – Jaffna College – for more than thirty-five years, Mr Noel A. Vimalendran has contributed significantly to the advancement of the students in Jaffna and in the North in their academic and co-curricular enhancement.

For Sports, his contribution to the Jaffna District and the Northern Province is remarkable. As President of the Jaffna Schools' Cricket Association he worked hard for the development of cricket in the region. He also worked for the development of Hockey.

He was actively involved in the activities of the Jaffna Inter-Collegiate Christian Forum, and in the organizing of the Festival of Carols in Jaffna. May the Almighty God bless Mr Noel Vimalendran and his family, and I wish him a happy and peaceful retired life to continue to serve the people in Jaffna with varied responsibilities.

**- Rev.N.J.Gnanaponrajah.**


### மனதில் மலர்ந்த வரிகள்



புன்னகைக்கும் புது மலராக இந்த பூமியிலே பிறந்து பல மனிதர் தம்
மனங்களிலே புதைந்து வைத்து புகழப்படும் நாயகனாய்
வாழும் காலமதில் இறை ஆசிகள் பின் தொடர
பட்டங்கள் சான்றிதழ்கள் பலபெற்று
பண்புடையாளனாய் யாழ்ப்பாணக்
கல்லூரியை தெரிந்தெடுத்து
தம்முள் உறங்கிய திறமைகளை வெளிப்படுத்தி
மாபெரும் சாதனையாளராய் பணிபுரிந்து
கணினிக் கற்கையில் ஆங்கோர் சிறப்புரிமை உடையவராய்
உடல் வலிமைகாண் போட்டிகளில் என்றென்றும் இன்றுவரை
இளம் துடிப்புடனே சுழல் பந்து வீசிடுவார்
உறங்கும் நீதியினை மக்களுக்காய் மக்களோடு
மனமுவந்து ஆற்றும் தொண்டுதான் ஆனதை
அளவிடவும் முடியாது காலங்களும் தடையில்லை
உலக கோலங்களும் தம் பணிதனை தடுத்திடா என்றும்
பல சேவைகளுடன் புகழ் ஓங்க மனதார
வாழ்துகிறேன் மனதில் மலர்ந்த வரிகளுடன்.

அதிபர், யா/நவில் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி.

### நன்றி கலந்த வாழ்த்துக்கள்



கடந்த 10 ஆண்டுகளாக எமது யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றித் தற்போது ஓய்வுநிலையை அடைந்திருக்கும் N.A. விமலேந்திரன் அவர்களை மனமாரவாழ்த்துகிறோம். அவர்களது பணிக்காலத்தில் எமது பாடசாலையின் உயர்விற்காக அரும்பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. எம் கல்லூரியினைக் கல்வித்துறை, விளையாட்டுத்துறை என்பவற்றில் ஒரு வெற்றிப்பாதையில் நடத்தி எமை மேன்மையுற வைத்ததற்கு கல்லூரி மாணவ ஆளுநர் சபைத் தலைவன் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப் பட்[illegible] வாழ்க்கைப் பாதையில் கடவுள் அவரை மேன் மேலும் ஆசீர்வதிப்பார் என நம்புகிறேன்.

**து.நிமலேந்திரா, ஆளுநர் சபைத் தலைவர், யாழ்ப்பாணக் கல்லூரி.**

(C/10988)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் மழை காரணமாக மாணவர் வரவில் வீழ்ச்சி

*வவுனியா பாடசாலை அதிபர்கள் தெரிவிப்பு*

வவுனியா, ஜன.9
வவுனியாவில் பெய்துவரும் கடும் மழையைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் வரவு குறைவாக உள்ளதாகப் பாடசாலை அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கு பெய்த கடும் மழை காரணமாக சில பாடசாலைகளின் வகுப்பறைகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. மாணவர்களும் குறைந்த அளவிலேயே சமுகமளித்துள்ளனர். வவுனியா தமிழ் மகா வித்தி யாலயத்தின் ஆரம்பப் பாடசாலைக்கு நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. வகுப்பறைக்குள் வெள்ள நீர் உட்புகுந்ததால் ஒன்று தொடக்கம் ஐந்தாம் தரம் வரையான மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர். இதேவேளை தற்காலிகக் கொட்டகைகளுக்குள் நடத்தப்படும் வகுப்பறைகளைக் கொண்ட பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர் வரவுகுறைவாக இருந்தமையை அவதானிக்க முடிந் தது.

இதேவேளை பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மழை பெய்வதுடன் உரிய துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்படாததாலும் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் சில பாடசாலைகளில் காணப்படுகின்றமைகுறிப்பிடத்தக்கது. (க-402)

# தொழிலுக்குச் செல்லாத மீனவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவும்

*மன்னார் மீனவ கூட்டுறவுச் சமாசத் தலைவர் கோரிக்கை*



மன்னார், ஜன.9
சீரற்ற காலநிலை காரணமாகத் தொழிலுக்குச் செல்லாத நிலையில் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கும் மன்னார் மீனவர்களுக்குரிய நிவாரணங்களை உடனடியாக வழங்குமாறு மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என்.எம்.ஆலம் அரச அதிபரிடம் எழுத்து மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சில நாள்களாக மன்னாரில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மீனவர்கள் கடலில் இறங்கவில்லை. இதனால் வருமானம் எதுவும் இல்லாத நிலையில் அவர்களது குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன. இந்த நிலையில் இவர்களுக்குரிய நிவாரணங்களை வழங்குமாறு மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரால் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக எமது மன்னார் மாவட்ட மீனவர்கள் ஒரு வார காலமாக தொழிலுக்குச் செல்லமுடியாது வீடுகளில் முடங்கிய நிலையில் உள்ளனர்.

இவர்கள் தமது நாளாந்த வாழ்வாதாரத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாழ்கின்றனர்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான தொழில் பாதிப்புக்களை இந்த மீனவர்கள் எதிர்கொண்டனர்.

தற்போது மாவட்டத்தில் உள்ள அனைத்து மீனவர்களும் தொழில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில் காணப்படுகின்றனர். எனவே அனைத்து மீனவர்களுக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதி மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் இணைப்பாளர் எம்.ஏ.சி.முஹமட் றியாஸ், மன்னார்மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் எம்.மொறண்டா, மன்னார் பிரதேச செயலர் எஸ்.தயானந்தா ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (க-56)

# வவுனியா பூவரசம்குளத்தில் வர்த்தகர் வீட்டில் திருட்டு

நேற்றுமுன்தினம் வவுனியா பூவரசங்குளம் 8 ஆம் கட்டை பகுதியில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் வாள் மற்றும் தடிகளுடன் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான நகைகள், 20 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளார்கள்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

வர்த்தகரான எஸ்.சிவகுமாரன் என்பவரின் வீட்டில் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு வாள் மற்றும் கட்டைகளுடன் புகுந்த திருடர்கள் அங்கிருந்தவர்களை அச்சுறுத்திவிட்டு அவர்களின் கையில் மற்றும் கழுத்தில் இருந்த தங்க நகைகளையும், ரூபா20ஆயிரம்பணத்தையும் திருடிச் சென்றுள் ளார்கள்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக உடனடியாக வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள் ளனர். இந்தத் திருட்டுச் சம்பவத்தில் 7 பவுண் நிறையுடைய மோதிரங்கள், சங்கிலி, காப்பு என்பன திருடப்பட்டதாகவும் வீட்டின் உரிமையாளரான வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்வம் இடம்பெறும் போது கணவன், மனைவி இருவருமே வீட்டில் இருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-421,56)

# பூநகரி கல்விக் கோட்டத்தில் திறக்கப்படாத பாடசாலைகள்

அக்கராயன், ஜன.9
கிளிநொச்சி பூநகரி கல்விக் கோட்டத்தில் ஆறு பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

பொன்னாவெளி சைவப் பிரகாச வித்தியாலயம், பல்லவராயன்கட்டு இந்து ஆரம்ப வித்தியாலயம், அத்தாய் முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம், செட்டியகுறிச்சி அ.த.க. பாடசாலை, தம்பிராய் அ.த.க. பாடசாலை, கௌதாரிமுனை அ.த.க.பாடசாலை என்பனவே மூடப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றன.

1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாகவும் இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைச் சூழலில் மீளக்குடியமராமை காரணமாகவும் இந்தப் பாடசாலைகள் இயங்க முடியாத நிலையில் மூடப்பட் டுள்ளன.

இந்த நிலையில் பல்லவராயன்கட்டுப் பாடசாலை அமைந்துள்ள முக்கிய பகுதிகள் உவரடைந்த நிலையில் உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிக் கல்விக் கோட்டத்தில் 6,250 மாணவர்களுக்கு 250 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் போக்குவரத்துப் பிரச்சினைகள் மிகுந்த பகுதியாகப் பூநகரி விளங்குவது குறிப்பிடத்தக்கது. (க-18)

# போக்குவரத்து நெருக்கடியில் கிராமப்புற மாணவர்கள்

அக்கராயன், ஜன.9
கிளிநொச்சி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த கிராமப்புற மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி நகரிலும், நகரை அண்மித்த பகுதிகளிலும் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்களே பாடசாலைகளுக்கு வந்து செல்வதில் தொடர்ந்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பூநகரி, பளை, கண்டாவளை, கரைச்சி ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களில் பலரும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சிறிய பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அது இன்னமும் சாத்தியமாகாத நிலை காணப்படுகின்றது. (க-18)

# அடிக்கடி இடைநடுவில் நிற்கும் பஸ்; அவதிப்படும் பயணிகள்

மன்னார், ஜன.9
மன்னாரில் இருந்து நானாட்டான் நோக்கிச் செல்லும் அரச பஸ் அடிக்கடி வீதியின் இடை நடுவில் நின்று விடுவதால் பொதுமக்களும், அரச உத்தியோகத்தர்களும் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மன்னார் அரச பஸ் தரிப் பிடத்தில் இருந்து தினமும் காலை 7.40 மணிக்குப் புறப்படும் இந்த பஸ் வங்காலையூடாக நானாட்டான் செல்கின்றமை வழமையாகும். ஆனால் இந்த பஸ் அடிக்கடி இடை நடுவில் பழுதாகி நிற்பதைக் காண முடிகின்றது.

இதனால் மன்னார் மற்றும் வங்காலையில் இருந்து நானாட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச, தனியார் திணைக்களங்களுக்கு கடமைக்கெனச் செல்வோர் தாமதங்களுக்கு உள்ளாகின்றனர்.

“ ‑ ”

**மன்னார் மற்றும் வங்காலையில் இருந்து நானாட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச, தனியார் திணைக்களங்களுக்கு கடமைக்கெனச் செல்வோர் தாமதங்களுக்கு உள்ளாகின்றனர்.**

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பழுது காரணமாக தள்ளாடி வீதியில் இந்த பஸ் நின்று விட்டது. பின்னர் நீண்ட நேர தாமதத்தின் பின்னர் பஸ் நானாட்டான் சென்றது. இதனால் அரச, தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுகின் றவர்கள் தாமதத்தை எதிர்கொண்டனர்.

மன்னார் டிப்போவிலிருந்து சேவையிலீடுபடும் பஸ்களில் பெரும்பாலானவை மோசமான நிலையில் உள்ளன. பல பஸ் களை பயணிகள் தள்ளி இயங் கச் செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே மன்னார் டிப்போ அதிகாரிகள், இலங்கை அரச போக்குவரத்துச் சேவையின் வடமாகாண முகாமையாளர் ஆகியோர் இதில் கவனம் செலுத்தி பழுதடையும் பஸ்களைப் புனரமைத்து சிறந்த சேவையை வழங்குமாறு பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-56)

# முன்பள்ளி சிறார்களுக்குக் கௌரவம்



நெடுங்கேணி வடக்கு கிராம முன்பள்ளியிலிருந்து பாடசாலை களில் தரம் 1 வகுப்பில் இணைந்து கொண்ட சிறார்களைக் கௌரவிக்கும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

கடந்த 6 ஆம் திகதி முன்பள்ளி ஆசிரியை இ.சுலோசனா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றன. வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் இதில் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களைவழங்கினார். வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் முன்பள்ளிக்கான உதவிப் பணிப்பாளரும் இதில் கலந்து சிறப்பித்தார். (க-435)

## பணியிடங்களில் தரித்து நிற்குமாறு வெளிக்கள பணியாளர்களுக்கு அறிவிப்பு

*வவுனியா பிரதேச செயலர் விடுத்தார்*

வவுனியா, ஜன.9
வெளிக்களப் பணியாளர்களைத் தமது பணியிடங்களில் தரித்து நிற்குமாறு வவுனியா பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வவுனியாவில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு நிலையில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள நிலையில் அவர் இந்த வேண் டுகோளை விடுத்தார்.

பெருமழை காரணமாக இங்குள்ள வீதிகள் பல வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றன. தாழ்ந்த பிரதேசங்களிலுள்ள வீடுகளில் வெள்ள நீர் புகுந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் மக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

“ ‑ ”

**தாழ்ந்த பிரதேசங்களிலுள்ள வீடுகளில் வெள்ள நீர் புகுந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் மக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.**

மேலும், சில வயல் பகுதிகளில் வெள்ள நீர் நிரம்பி பாய்ந்து செல்வதையும், கால் வாய்கள் நிரம்பியுள்ளதையும் காண முடிகின்றது. மேலும், கால்நடைகளும் மேய்ச்சல் இன்றிப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இந்த நிலையில் பிரதேச செயலரின்அறிவிப்புவெளியானதைத் தொடர்ந்து வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமக் குரிய பணியிடங்களில் தரித்து நிற் பதைக் காண முடிகின்றது. (க-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபையின் 'பட்ஜெட்' தோல்விக்கு பொறுப்பானோர் அதனால் வரும் எதிர் விளைவுகளுக்கு பதில் கூறவேண்டும்

## காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

அம்பாறை,ஜன.9

"காரைதீவு பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் முதற் தடவையாகத் தோற்கடிக்கப்பட்டு நெருக்கடிநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதன் எதிர்கால விளைவுகளுக்கு கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்களும், அவர்களுக்குப் பின்னணியில் நின்று செயற்படும் சக்திகளுமே பொறுப்பேற்க வேண்டும்."

இவ்வாறு, காரைதீவு பிரதேச சபைத் தவிசாளரும், காரைதீவு புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளருமான செல்லையா இராசையா தெரிவித்தார்.

காரைதீவு பீ.எஸ்.சர்வதேச ஆங்கிலக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரியின் பணிப்பாளர் திருமதி எஸ்.பார்த்தீபன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் விழா நடைபெற்றது.

தவிசாளர் செல்லையா இராசையா தொடர்ந்து உரையாற்றுகையில்:-

"இந்தக் கல்லூரியின் வருடாந்த விழாவில் இன்று மூன்றாவது தடவையாக (வருடமாக) நான் கலந்து கொள்கின்றேன்.

எனது இந்த மூன்று வருட கால அவதானிப்பின்படி இந்தக் கல்லூரி ஆற்றும் பணி மேலோங்கி வருவதுடன் முன்னுதாரணமான, முதன்மையான கல்லூரியாகவும் திகழ்கின்றமை கண்டு எனது மகிழ்வையும் பாராட்டுதலையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எதிர்காலத்தில் ஆங்கில வல்லமையுடன், நல்லொழுக்க சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு இந்தக் கல்லூரியின் பணிகள் ஊன்று சக்தியாகவே அமைந்துள்ளன.

காரைதீவு மண், கல்வி கற்ற ஊர், பண்பாடான ஊர், நம்பகத்தன்மையான ஊர் என்றெல்லாம் போற்றப்படும் வகையில் திகழ்கின்றது.


கற்றவர்கள் வாழும் காரைதீவு, மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழும் எம்மூர், இன்று பிரதேச சபை வரவு-செலவுத் திட்ட தோற்கடிப்பு மூலம் துர்ப்பாக்கிய நிலையைச் சந்தித்துள்ளது.

2010 பொதுத் தேர்தலில் மக்கள் சேவை என்ற நோக்குடன் குதித்த நான் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் அதில் பின்னடைவைக் கண்டேன்.

எனினும் பிரதேச சபைத் தேர்தலில் நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட போது காரைதீவு மக்கள் எனக்கு பெருவெற்றியையும் தலைமைத்துவத்தையும் தந்தனர்.

இந்த மக்கள் ஆணையைப் பொறுப்பேற்ற நான் நீதி நேர்மையுடன் ஊழலற்ற சிறந்த நிர்வாகத்தை பிரதேசசபை மூலம் மேற்கொண்டு வருகின்றேன். இதனை எமது கிராம மக்கள் நன்கறிவர்- என்றார். (வ-30)

## காட்டு யானைகளால் தொல்லை



மட்டக்களப்பு, ஜன.9

வடமுனை, ஊத்துச்சேனை, தரவை, வாகனேரி, போன்ற பிரதேசங்களில் காலை வேளை களில் யானைகளின் தொல்லைகள் அதிகமாகக் காணப்படுவதால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு அச்சமடைகின்றனர்.

இதனால் மாணவர் வரவு குறைவடைவதாகவும் அவர்களின் கல்வி நடவடிக்கை அன்றாடம் பாதிக்கப்படுவதாகவும் அந்தப்பகுதி அதிபர்களினால் தெரிவிக்கப்பட்டது.

இதனை நிவர்த்தி செய்வதற்காக மக்கள் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் உதவியை நாடுவதாக தெரிவிக்கப்பட்டது. (வ)

## சட்டவிரோத கஞ்சா செடிகள் மட்டக்களப்பில் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு, ஜன.9

மட்டக்களப்பு மாவட்டத்தின் யானைகள் உள்ள வட்டவான் மற்றும் சிறுதேன்கல் ஆகிய காட்டுப்பகுதிகளில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலையிலிருந்து மேற் கொண்ட சோதனை யின் போது சோளச் சேனையினுள் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்டிருந்த 4 மற்றும் 5 அடி உயரமான 70 கஞ்சாச் செடிகள் கைப்பற்றப்பட்டன.

இதுதொடர்பில் சந்தேகத்தின் பேரில் 6 பேரை கைது செய்துள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

இந்த கஞ்சாச் செடிகள் சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியானவை என்று அவர் கூறினார்.

காட்டில் யானைகளின் நடமாட்டத்தால் முழுச் செடிகளையும் கண்டுபிடிக்க முடியாமல் போனது.



சந்தேக நபர்களை வாழைச்சேனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதுதொடர்பில் கிடைத்த தகவலைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் கே.ஜி.எம். பண்டார, திணைக்கள பொறுப்பதிகாரி எஸ்.தங்கராசா ஆகியோரின் வழிகாட்டலில் பரிசோதகர்களான ஆர்.எஸ்.கே.ரண சிங்க, டி.பி.அலவத்தகமகே, ஏ.ஆனந்தநாயகம், அதிகாரிகளான கே.ரமேஸ்குமார், எஸ்.செல்வராசா, எஸ்.ஜெயக்குமார், எம்.ஐ.அன்வர், டபிள்யூ.எம்.கே. வர்ணசூரிய, கே.செந்தில் வண்ணன் ஆகியோர் இந்தச் சோதனையில் ஈடுபட்டனர். (வ)

## வீட்டு அறைக்குள் சாராயம் மீட்பு


மட்டக்களப்பு, ஜன.9

பட்டிப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்கட்டிச் சோலையில் வீட்டு அறை நிலத்தின் கீழ் பதுக்கிவைத்திருந்த ஒரு தொகுதி சாராயப் போத்தல்கள் மற்றும் பியர் டின்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அது தொடர்பில் சந்தேகத் தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளார்.

கொக்கட்டிச்சோலை திருத் தான் தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீடு ஒன்றில் சுரங்கம் அமைத்து அங்கு மறைத்து வைத்திருந்த நிலையிலேயே பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட மதுபானங்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரையும் நேற்று முன்தினம் களுவாஞ் சிகுடி நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்திய போது 45 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டு விடு விக்கப்பட்டதாக பட்டிப்பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (வ)

## லொறியில் அடைத்து சென்ற மாடுகளுடன் இருவர் கைது



திருகோணமலை, ஜன.9

மிருகபாதுகாப்புச் சட்டத்தை மீறி திருகோணமலையி லிருந்து கல்முனைக்கு லொறி ஒன்றில் 14 எருமை மாடு களை அடைத்துக்கொண்டு சென்றதாகக் கூறப்படும் லொறியின் சாரதியையும் நடத்துநரையும் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கைதுசெய்துள் ளதுடன், மேற்படி மாடுகளையும் மீட்டுள்ளதாகவும் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி என்.ரி.அபூபக்கர் தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

லொறியில் அதிகளவான எருமை மாடுகளை அடைத்துக் கொண்டு சென்றதன் காரணமாக சிலமாடுகள் காயமடைந்துள்ளன. சந்தேக நபர்கள் இருவரும் வெலிசறைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறு 14 மாடுகளை லொறி ஒன்றில் அடைத்துக் கொண்டு செல்லப்பட்டமை யானது மிருகங்களை பாதுகாப்பாக கொண்டு செல்லும் சட்டத்தை மீறியுள்ளது. இதன் காரணமாக மிரு கவதைச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. (வ)

## மட்டக்களப்பு மக்களுக்கு மலேரியா விழிப்புணர்வு

மட்டக்களப்பு,ஜன.9

மலேயரியாவை இல்லாதொழிக்கும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மலேரியா தடுப்புப்பிரிவுடன் இணைந்து சர்வோதயம் அமைப் பினால் மலேரியா விழிப்புணர் வுக் கருத்துப்பகிர்வும் நுளம்பு வலைகள் வழங்கும் நிகழ்வும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன.

மட்டக்களப்பு வலையிறவு மெதடித்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் பொதுச் சுகாதாரப் பரி சோதகர் வ.ரமேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக பிராந்தியத்துக்கான மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் திருமதி மேகலா ரவிச்சந்திரன், கௌரவ அதிதியாக சர்வோத யத்தின் கிழக்குப் பிராந்திய இணைப்பாளர் இ.எல்.ஏ.கரம், உள்ளிட்டோரும், கிராம அபிவிருத்திச் சங்கம், முதியோர் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பின் வலையிறவு பிரதேசத்திலுள்ள 900 வரையானோருக்கு இந்த நுளம்பு வலை கள் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் மலேரியாவைத் தடுக்கும் நோக்கில் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பின் பேரில் சர்வோதயத்துடன் இணைந்து மலேரியா தடுப்புப் பிரி வினரால் இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (வ)

## சமுர்த்தி அலுவலர்களுக்கு தரம் உயர்வு

மட்டக்களப்பு,ஜன.9

சமுர்த்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றியவர்கள் தற்போது வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் கீழ் உள்ளீர்க்கப்பட்டு முகாமைத்துவ உதவியாளர் தரம் - 1, தரம் - 2, தரம் - 3 எனும் தரங்களுக்குள் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

கோறளைப்பற்று பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கடமையாற்றிய சுமார் 21 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் தொடக்கம் முகாமைத்துவ உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான நியமனக் கடிதங்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதியின் ஆலோசகர் சிவநேசதுரை சந்திரகாந்தன், நியமனக் கடிதங்களை வழங்கினார். (வ)

## மாற்றுத் திறனாளிகளை வலுவூட்டும் செயற்றிட்டம்

மட்டக்களப்பு, ஜன.9

மாற்றுத்திறனாளிகளை வலுவூட்டும் செயற்றிட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரச உத்தியோகத்தர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்குமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடை பெற்றது.

மண்முனை வடக்கு மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் முதலில் இந்தத் திட்டம் நடை முறைப் படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ள விதம் உட்பட குறைபாடுகள் தொடர்பில் கருத் தரங்கில் கலந்து ரையாடியதாக நவஜீவன நிறுவகத்தின் ஸ்தாபகத் தலைவர் குமாரினி விக்கிரமசூரிய தெரிவித்தார்.




அமெரிக்க உதவித்திட்டத்தின் நிதியுதவியில் கிழக்கு மற்றும் தெற்கில் உள்ள மாற்றுத் திறனாளிகளைப் பலப்படுத்தும் திட்டம் 2013ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், 2016ஆம் ஆண்டிலேயே முடிவடையவுள்ளது.

கிழக்குமாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்.ஓ.எச். நிறுவனமும் திருகோணமலையில் லீட்ஸ் நிறுவனமும் அம்பாறையில் டியஸ் லிங் நிறுவனமும் பங் காளிகளாகச் செயற்படுகின் றன.

மாவட்டச் செயலகத்தின் 2012 ஆம் ஆண்டுகணக்கெடுப்புப்படி மட்டக்களப்பு மாவட்டத் தில் 6,392 மாற்றுத் திறனா ளிகள் இருந்தமை குறிப்பிடத் தக்கது.

இந்தக் கருத்தரங்கில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நவஜீவன நிறுவகத்தின்தாபகத் தலைவர் குமாரினி விக்கிரமசூரிய. நவஜீவன நிறுவக திட்ட முகாமையாளர் எஸ்.எம்.கே.பி.நந்தரெட்ண, எல்.ஓ.எச். திட்ட முகாமை யாளர் ஏ.சௌந்தரராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 212 இலங்கை மீனவர் இந்தியச் சிறைகளில்

## மாத இறுதியில் இருதரப்புப் பேச்சுகள் சாத்தியம்

கொழும்பு.ஜன.9

இந்தியக் கடற்பரப்புக்குள் நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள 212 இலங்கை மீனவர்களில் 18 பேர் சென்னையிலும் 31 பேர் விசாகப்பட்டினத்திலும் சிறை வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்றொழில் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் செப்ரெம்பர் முதல் டிசெம்பர் வரையிலான நான்கு மாதக் காலப்பகுதியிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் இவர்களது 40 மீன்பிடிப் படகுகளும் இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைவைக்கப்பட்டுள்ள மீனவர்களுக்குத் தேவையான உணவு, நீர் போன்ற அடிப்படைத் தேவைகளை தமிழ் நாடு அரசும், ஆந்திரப் பிரதேச அரசும் வழங்கி வருவதாகவும் உடைகள், பற்பசை, பற்தூரிகை (பிரஷ்) போன்றவை இந்திய கடற்றொழில் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாத இறுதியில் சென்னையில் நடக்கவுள்ள இந்திய - இலங்கை கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இரு தரப்பினரும் பேச்சு நடத்தி சிறைவைக்கப்பட்டுள்ள மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என இலங்கைக் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 212 இலங்கை மீனவர்கள் நீர் கொழும்பு, நாத்தாண்டியா, களுத்துறை, பேருவளை, திருகோணமலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகின்றது.

# கொதித்தாறிய தண்ணீரை பருகுமாறு அறிவுறுத்தல்

கொழும்பு.ஜன.9

பல்வேறு நீரேந்து பகுதிகளில் இருந்து பெற்றுக்கொள்ளும் குடி தண்ணீரைக் கொதிக்க வைத்துப் பயன்படுத்துமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

பல்வேறு காரணங்களால் நிலக்கீழ் நீர் அசுத்தமடைந்துள்ளமை ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது என்று அதிகார சபையின் தலைவர் விமல் ரூபசிங்க தெரிவித்தார்.

கிணற்று நீர், ஊற்று நீர் மற்றும் குழாய் நீர் என அனைத்தையும் நன்கு கொதிக்க வைத்து, ஆறவிட்டு அருந்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**" - "**

**கொதித்தாறிய நீரைப் பருகுவதன் மூலம் நோய்த் தொற்றுக்களில் இருந்து பாது காத்துக் கொள்ள முடியும்.**

இதன்மூலம், நோய்த்தொற்றுக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியுமெனவும் மத்திய சுற்றாடல் அதிகார சபை சுட்டிக் காட்டியுள்ளது.

# உலமா சபையை உடன் தடை செய்க

## பொதுபல சேனா போர்க்கொடி

"ஹலால் சான்றிதழ் வழங்கும் உரிமை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டமையை எம்மால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையை முற்றாக தடை செய்ய வேண்டும்."

இவ்வாறு பொது பலசேனா அமைப்பு தெரிவித்துள்ளது.


மேலும், ஹலால் ஒழிப்புப் போராட்டம் புதிய வழியில் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அது சூளுரைத்துள்ளது.

அத்தோடு, வி.ஐ.பி, வி.வி. ஐ.பி ஸ்டிக்கர்களை நாட்டில் தடை செய்ய முடியுமானால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் ஹிஜாப்பை ஏன் தடை செய்ய முடியாது என்றும் அவ்வமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பு, கிருலப்பனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பொது பலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது.

பல போராட்டங்களின் பிறகு ஹலால் சான்றிதழை நாட்டிலிருந்தே முற்றாகத் தடைசெய்வதாக நாட்டிலுள்ள அனைத்துத் தேரர்களிடமும் ஜம்இய்யத்துல் உலமா சபை வாக்குறுதி அளித்தது.

ஆனால், தற்போது சான்றிதழ் உரிமையை தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கி தேரர்களை மட்டுமன்றி பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் ஏமாற்றியுள்ளது. இதை நாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை. - என்றார். (சி-வ)



பலஸ்தீனத்திற்கு இரண்டு நாள் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பலஸ்தீனத்தின் பெட்டுனியா நகரத்தில் 'மஹிந்த ராஜபக்ஷ தொழிற்பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்தார்.

# வலம்புரிச் சங்குகளுடன் மூவர் மாட்டினர்

கொழும்பு.ஜன.9



சிலாபம் - முன்னேஸ்வரம் பகுதியில் பெறுமதி வாய்ந்த வலம்புரிச் சங்கு களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டனர் என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 6 வலம்புரிச் சங்குகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

காலி - கிந்தோட்டை பகுதியைச் சேர்ந்த தம்பதியர் மற்றும் அவர்கள் பயணித்த காரின் சாரதி ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் விஷம் சம்பந்தமான தகவல் மையம்

## 24 மணித்தியாலங்களும் சேவையில்

கொழும்பு.ஜன.9



கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள விஷங்கள் சம்பந்தமான தகவல் மையம் 24 மணித்தியாலங்களும் சேவை செய்யுமென அவ் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதுவரை பகல் நேரங்களில் மட்டுமே இயங்கி வந்த இந்தச் சேவை இனிமேல் 24 மணித்தியாலங்களும் இயங்குமென அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த விவரங்கள் வருமாறு:-

உலகிலுள்ள எல்லாவிதமான விஷங்கள் சம்பந்தமாகவும் அவற்றில் ஏதாவதொன்று உடலில் சேரும்போது ஏற்படக் கூடிய குணங்குறிகள், அவற்றுக்கான நிவாரணிகள் போன்றவை பற்றிய சகல விவரங்களையும் இந்த நிலையத்தில் பொதுமக்கள் 24 மணித்தியாலமும் பெற்றுக்கொள்ளலாம். உதவி தேவைப்படுபவர்கள் திங்கட்கிழமை காலை முதல் சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை 011- 268 6143 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் வார இறுதி நாள்களிலும் வாரத் தின் இரவு நேரங்களிலும் 011 - 269 1111 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளலாம்.

உடலுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய விஷங்கள் பற்றிய போதுமான அறிவு இலங்கையர்களிடம் கிடையாது என்பதாலேயே அவர்களுக்கு உதவும் வகையில் இந்த நிலையம் நிறுவப்பட்டுள்ளது- என்றார்.

# அரச கூட்டுக்குள் பெரிய தீ கொழுந்துவிட்டு எரிகிறது

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு.ஜன.9

மேல், தென்மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், ஆளுந்தரப்பினர் யுத்த மனோநிலையோடு செயற்படுகின்றனர். இதனால் அரசுக்குள் பெரிய தீ கொழுந்துவிட்டு எரிகிறது. தீயணைப்புப் படையினரால் கூட இந்தத் தீயை அணைக்கமுடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க கிண்டலடித்தார்.

**அரசின் தேர்தல் மாபியாவின் அடுத்த கட்டமாகத் தேர்தல்கள்** ஆணையாளரின் பணிகளையும் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையாள்கின்றனர். இதுவும் ஆசியாவின் ஆச்சரியங்களில் ஒன்றுதான் என்றும் தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமது தேர்தல் மாபியாவின் அடுத்த கட்டமாக மேல், தென் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. இதில் தேர்தல்கள் ஆணையாளரின் பணிகளையும் ஆளுந்தரப்பு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களே கையாள்கின்றனர்.

மாகாணசபைகள் கலைப்புக்கு முன்னரே தேர்தல் நடத்தப்படும் திகதியையும், தேர்தல் முடிவையும் விவசாயத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார். இதுவும் ஆசியாவின் ஆச்சரியங்களில் ஒன்றுதான்.

மாகாணசபைத் தேர்தல்கள் குறித்து அறிவிப்புகள் விடுக்கப்படும் நிலையில், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. இந்த முரண்பாடுகள் வெளிப்படையாகவே தெரிகின்றன. உதாரணமாக காலி மாவட்டத்தில் அரச சேவையாளர்களின் அமைப்பாளர்களின் கூட்டத்தைக் கூட நடத்த முடியாத நிலையில் அரசு இருக்கிறது.

ஆளுந் தரப்பினர்கள் ஒரு யுத்த மனோநிலையோடு செயற்படுகின்றனர். இதனால் அரசுக்குள் பெரிய தீ கொழுந்து விட்டு எரிகிறது. இந்தத் தீயை தீயணைப்புப் படையினரால் கூட அணைக்க முடியாது.

**பிரதான இறக்குமதி போதைப் பொருளா?**

**இன்று முழு நாடும் போதைப்** பொருள்மயமாகியுள்ளது. வெவ்வேறு வகையான போதைப் பொருள்களும் நாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றன. இவை கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டுவரப்படவில்லை. கொள்கலன் கணக்கில் கொண்டுவரப்படுகின்றன. இந்நிலை நீடித்தால், நாட்டின் பிரதான இறக்குமதிப் பொருள் போதைப் பொருளா என மக்கள் கேள்வியெழுப்பும் காலம் வெகு தொலைவில் இல்லை.

எனவே, இந்தப் போதைப் பொருளை நாட்டிலிருந்து இல்லாதொழிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாநாட்டுக்கான செலவை அரசு வெளிப்படுத்த வேண்டும்**

பொதுநலவாய மாநாடு முடிவடைந்து ஒன்றரை மாதங்கள் கடந்துள் என. இந்நிலையில், மாநாட்டுக்கான செலவுகளை அரசு இதுவரையில் நாட்டுக்கு அறிவிக்கவில்லை. அத்துடன், மாநாட்டுக்காக 54 சொகுசுக் கார்களும், பஸ்களும், வான்களும் இறக்குமதி செய்யப்பட்டன. அவை எங்கே? இவை தொடர்பான தகவல்களை அரசு வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (சி-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சாணேற முழம் சறுக்கும் மின்சார உற்பத்தி விவகாரம்

வட - கிழக்குப் பருவமழை வீழ்ச்சி, எதிர்பார்த்த அளவு இல்லாததால், காசல்றீ, விக்ரோறியா மற்றும் மவுசகல நீர்த் தேக்கங்களில் நீர்மட்டங்கள் குறைந்துள்ளன. அதனால் நாடளாவிய ரீதியில், எதிர்வரும் மாதங்களில் மின்வெட்டு உண்டாகலாம் என்று எதிர்வு கூறப்படுகிறது.

அடுத்த மாதத்தில் - பெப்ரவரியில் - மழை பெய்யாவிடில் மார்ச் மாதமளவில் மின்வெட்டு கட்டாயம் ஆகலாம் என்று அஞ்சப்படுகிறது.

நீர் ஏந்து பகுதிகளில் நீர் மட்டம் குறைந்ததால், ஏற்கனவே நீர் மின்சார உற்பத்தி குறைந்து விட்டதாக, இலங்கை மின்சார சபையின் இணைந்த தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளர் சுட்டிக்காட்டி உள்ளார்.

நீர் மின்சாரம் நாட்டின் மின் தேவையில் நாற்பது முதல் 45 சதவீத தேவையை வழங்கி வருகின்றது. ஆனால் தற்போது அது 28 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

இதேவேளை-

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையம் கடந்த டிசெம்பர் மாதத்தில் மீளச் செயற்படத் தொடங்கி இரண்டு வாரங்களில் மீண்டும் செயலிழந்துள்ளது.

கடந்த (ஜனவரி) 5 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் அதன் கொதிகலன் குழாய் ஒன்று வெடித்துள்ளது.

அதனால் மின் உற்பத்தி நிலையம் மீண்டும் மூடப்பட்டுள்ளது.

கொதிகலன் வெடிப்பின் மூலம் 300 மெகாவாட் மின் இழப்பு ஏற்பட்டுள்ளது. 2013 இல் மின்சாரசபை 21 பில்லியன் ரூபா இலாபமீட்டியது. அந்த இலாபம் இப்போது அர்த்தமற்றது ஆகியுள்ளது. மின் கட்டணம் நிச்சயம் உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இருபத்தியோராம் நூற்றாண்டின் முதலாவது தசாப்தம் வரை இலங்கையின் தேசிய மின் தேவையின் பெரும் பகுதியை நீர்மின் வலுவே நிறைவேற்றி வந்தது. இருப்பினும், இடைக்கிடையே ஏற்படும் வறட்சியான காலநிலை காரணமாக அடிக்கடி மின்வெட்டு தவிர்க்க முடியாததாக ஆகியது. அது தேசிய பொருளாதாரத்தையும் பெருமளவு பாதித்தது.

நீர்மின் வலுவுக்குப் பதிலாக மாற்று மின்வலு ஒன்றின் தேவை நீண்ட காலமாக உணரப்பட்டு வந்தது. அனல்மின் நிலையம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று 1970களில் தீர்மானிக்கப்பட்ட போதிலும், இத்திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. பல தரப்புகளில் இருந்தும் போராட்டங்கள், ஊர்வலங்கள், எதிர்ப்புக்கூட்டங்கள் என எதிர்வு அலைகள் எழுந்தன. எனினும் அவற்றையும் பொருட்படுத்தாமல் அமைக்கப்பட்டதே நுரைச்சோலை அனல்மின் நிலையம்.

பாலாவி சந்தியிலிருந்து கற்பிட்டி பிரதான பாதையில் பன்னிரண்டாவது கிலோ மீற்றரில் உள்ள நுரைச்சோலை அனல்மின்நிலையம், அதன் ஆரம்ப நாள் முதலே தொடர்ந்து சிக்கல்களை எதிர்நோக்கி வருவது துரதிர்ஷ்டமாகும்.

சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் போதியளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடி யாததால் அரசுக்குப் பெரும் இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

300 மெகாவாற்ஸ் உற்பத்தித் திறன் கொண்ட நுரைச்சோலை அனல் மின் நிலையம் முழுமையாக இயங்கினால் நாளொன்றுக்கு அறுபது இலட்சம் அலகுகளுக்கும் அதிகமான மின்சாரத்தை உற்பத்திசெய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் 2011 ஆம் ஆண்டின் பெரும்பாலான காலத்தில் இந்த மின்நிலையம் பாதியளவிலேயே இயங்கியுள்ளது. கடந்த ஆண்டு இறுதியிலும், இந்த ஆண்டு ஆரம்பத்திலும் அனல் மின்நிலையம் பழுதடைந்ததால் மின்சார சபை பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது.

இத்தகைய நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் கொதிகலன் குழாய் ஒன்றில் ஏற்பட்ட உடைவு காரணமாக உற்பத்தியில் மீண்டும் ஸ்தம்பித நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கு மூன்று வாரத்துக்கு முன் டேர்பைன் குழாய் ஒன்றில் வெடிப்பு ஏற்பட்டது.

கடந்த ஆண்டு இலங்கை மின்சார சபைக்கு 21 பில்லியன் வருமானம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்து நீர்மின் உற்பத்தி பாதிக்கப்பட்டதாலும், அனல்மின் நிலையம் இயங்காமல் இருப்பதாலும் ஏற்பட்டுள்ள நஷ்டம் கடந்த வருட இலாபத்தை பயனற்றதாக்கிவிட்டது.

நுரைச்சோலை அனல்மின் நிலையம் முழுமையாக இயங்க ஆரம்பிக்கும்போது, மின்சாரக் கட்டணம் குறையும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு, இப்போது இடம்பெறும் சம்பவங்கள் பெரும் ஏமாற்றமாகும்.

# இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கினால் என்ன?



ராஜசேகர்

இலங்கையில் வாழும் தமிழர்களுக்காகப் பாடுபடுவதாக தமிழகத்தின் பல்வேறு கட்சிகள் அவ்வப்போது கூறிக்கொள்கின்றன. போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் மேற்கொள்ளப்படுவதோடு அறிக்கைகளும் விடுக்கப்படுகின்றன.

எங்கோ கண்காணாத இடத்தில் இருக்கும் தமிழர்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகளும் அமைப்புகளும் இங்கே நமது தமிழகத்திலேயே அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்கள் குறித்து அக்கறைப்படுகிறார்களா என்றால் அதற்குச் சரியான பதில் கிடைப்பதில்லை.

1983இல் இலங்கை வாழ் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம் வெடித்ததில் இருந்து 2009இல் படுபயங்கர இனப் படுகொலைகள் அரங்கேறியதுவரை பல்வேறு கட்டங்களில் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக இந்தியாவில் - குறிப்பாக தமிழகத்தில் - தஞ்சமடைந்தனர்.

ஏறக்குறைய ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் இவ்விதம் அகதிகளாக வந்துள்ளனர். அரசின் மேற்பார்வையில் இயங்கும் 112 முகாம்களில் 68 ஆயிரம் பேரும், முகாம்களுக்கு வெளியே 32 ஆயிரம் பேரும் அகதிகளாக உள்ளனர் என்று தெரி கிறது.

தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் உட்பட தமிழக மக்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து நலத் திட்டங்களையும் அகதிகள் முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் வழங்க ஆணையிட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### மானிய உதவிகள் வாழ்வாதாரத்துக்குப் போதுமானதில்லை

அகதிகள் முகாமில் வசிப்போரின் கருத்தோ மாறுபட்டு இருக்கிறது. மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் வழங்கப்படுவது உண்மைதான். ஆனால் தமிழக மக்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும் தமக்கு வழங்கப்படுவதில்லை என்கிறார்கள்.

அடிப்படை வசதிகளுக்காக ஒதுக்கப்படும் நிதி முழுமையாகவும், பயனுள்ளதாகவும் செலவு செய்யப்படுவதில்லை. அரசால் வழங்கப்படும் கல்வி உதவித் தொகைகள் குறித்துப் பெரும்பாலான மாணவர்களுக்கு தெரியவே இல்லை என்கின்றனர். முகாம்களில் இருக்கும் குடும்பத்தலைவருக்கு ரூ.1,000, ஏனைய உறுப்பினர்களுக்கு ரூ.720, சிறார்களுக்கு ரூ.500 என மாதந்தோறும் மானியமாக வழங்கப்படுகிறது.

மாநில அரசு அளிக்கும் இந்த மானியங்கள், சொற்ப உதவிகள், சலுகைகளை வைத்து அவர்கள் நிம்மதியாக வாழ முடிவதில்லை என்பதுதான் உண்மை. குடியுரிமை வழங்கப்படாததால் அவர்களது எதிர்காலமே கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது.

### இலங்கை அகதிகளைச் சமூகத்துடன் இணைக்க அரசு விரும்பவில்லை

இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் மட்டுமன்றி கேரளம், கர்நாடகம், புதுச்சேரி, ஒரிசா ஆகிய இடங்களிலும் உள்ளனர். தமிழகத்தில் திருச்சியில் கே.கே. நகர், துவாக்குடி, சென்னையில் நீலாங்கரை, வளசரவாக்கம், நாகர்கோவில், கோவையில் ஆர்.எஸ்.புரம், வால்பாறை ஆகிய இடங்களில் அதிக அளவில் இலங்கைத் தமிழ் குடும்பங்கள் உள்ளன.

திருச்சி மாவட்டம் கொட்டப்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் உள்ள முகாம்கள் மட்டுமே ஐ.நா. வகுத்துள்ள விதிகளின் படி தரமான முகாம்களாகக் கண்டறியப்பட் டுள்ளன.

கனடா, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளில் அகதிகள் சமுதாயத்தோடு இணைந்து வாழ்கின்றனர். ஆனால் இந்தியாவில் அகதிகள் சமுதாயத்தோடு இணைந்து வாழ்வதை மத்திய அரசு விரும்பவில்லை எனத் தெரிகிறது.

இந்த நிலையில், அகதிகளில் பெரும்பாலானோர் இலங்கைக்குத் திரும்பிச் செல்வதா, வேண்டாமா என்று முடிவு எடுக்க முடியாமல் திணறி வருகின் றனர்.

### இந்தியக் குடியுரிமை பிறக்கும் குழந்தைகளுக்கு இல்லை

அகதிகள் முகாம்களில் வசித்து வருபவர்கள், இங்கு அகதிகளாக வசித்து வரும் எங்களுக்கும், இம்மண்ணில் பிறந்த எங்கள் குழந்தைகளுக்கும் இன்று வரை இலங்கை குடியுரிமையாகத்தான் பதிந்து வருகின்றனர். நாங்கள் இலங்கைக்குச் செல்ல விரும்பவில்லை. எங்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும், என்று வலியுறுத்துகின்ற னர். தமிழ்நாட்டுக்கு முக்கிய பிரமுகர்கள் பய ணம் செய்யும் போது எங்களை மூன்று நாள்களுக்கு வெளியே விட மாட்டார்கள் . ஓர் அவசரம் என்றால் கூட வெளியே போகமுடியாது. சிறை வாழ்க்கைதான்.

காசுள்ள எங்கள் ஆள்கள் எப்போதோ வெளிநாடுகளுக்குப் போய்விட்டார்கள். தொப்புள் கொடி உறவென்று தமிழகம் வந் தோம். சொல்ல முடியாத துயரத்தில் வாழ்கிறோம். இங்குள்ள அதிகாரிகள் எங்களைக் கேவலமாகத்தான் பார்க்கிறார்கள். என்று மண்டபம் அகதிகள் முகாமில் உள்ள ஒரு பெண் அண்மையில் புலம்பித் தள்ளியுள்ளார்.

### இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் மத்திய அரசு வஞ்சனை

ஐ.நா-வின் அகதிகள் மறுவாழ்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டாலே போதும். அத்தனை உதவிகளையும் அவர்களே செய்துவிடுவார்கள். நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்று இருப்பதால்தான் ஈழத் தமிழர்களுக்கு இந்த நிலை.

திபெத் அகதிகள் மற்றும் வங்கதேச அகதிகளுக்கு எல்லாம் நிறையச் சலுகைகள் கொடுக்கும் மத்திய அரசு, ஈழத் தமிழர்கள் விடயத்தில் மட்டும் வஞ்சனை செய்கிறது என்று தனியார் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் வேதனையோடு கூறுகின்றனர்.

வங்க தேசத்திலிருந்து ஏராளமானோர் ஊடுருவி மேற்கு வங்கத்தில் குடியேறியுள்ளனர். அரசியல்வாதிகள் அவர்களுக்கு குடியுரிமை வழங்கி ஏனைய சலுகைகளையும் தந்து வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்து தாங்கள் சார்ந்த கட்சிகளுக்கு வாக்கு அறுவடையையும் நடத்தி வருகின்றனர். இந்தநிலையில் தமிழ் அகதிகளுக்கு மட்டும் குடியுரிமை மறுக்கப்படுவதேன்?

மற்றுமொரு முக்கியமான தகவல். இப்போது இந்தியாவில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களில் இருப்பவர்களில்அரைவாசிக்கும் மேற்பட்டோர் இந்தியாவில் பிறந்து வளர்ந்து வருபவர்கள். குறைந்தபட்சம் அவர்களுக்காவது இந்தியக் குடியுரிமை வழங்கினால் என்ன, குடியா முழுகிப் போய்விடும்?



**ஐ.நா-வின் அகதிகள் மறுவாழ்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டாலே போதும். அத்தனை உதவிகளையும் அவர்களே செய்துவிடுவார்கள். நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்று இருப்பதால்தான் ஈழத்தமிழர்களுக்கு இந்த நிலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் கூட்டத் தொடரும் இலங்கையின் எதிர்காலமும்




**2014** ஆம் ஆண்டு இலங்கைக்கு மிகமுக்கியமான ஆண்டாகும். இவ்வாண்டு மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் இலங்கை மீதான மனித உரிமைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இதில் கலந்துரையாடப்படவுள்ளதால் தற்போது பிறந்துள்ள புதிய ஆண்டு இலங்கைக்கு மிகமுக்கியமான ஓர் ஆண்டாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள், செயற்பாடுகள் தொடர்பில் அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜெனீவாவில் அழுத்தம் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைத் தாம் முன்னெடுக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மார்ச்சில் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள கூட்டத்தொடரை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கையில் நிலவும் மிக மோசமான மனித உரிமைச் சூழல் தொடர்பாக அனைத்துலக இராஜதந்திரிகளுடன் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளதாக த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

### இலங்கை மீது அனைத்துலக விசாரணைஅவசியம்

இலங்கை மீது அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான தேவையை கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற த.தே.கூட்டமைப்பின் சந்திப்பில் ஏற்றுக்கொண்டுள்ளதாக பிரேமச்சந்திரன் மேலும் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமைகள் பேரவையின் முன்னைய கூட்டத்தொடர்களில் கலந்துகொள்வதற்காக ஜெனீவாவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பிரதிநிதிகளை அனுப்பியிருந்ததாகவும், ஆனால் இந்தத் தடவை இலங்கை மீது அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான அழுத்தத்தை வழங்குவதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு மார்ச்சில் மனித உரிமைகள் பேரவை தனது 25வது கூட்டத்தொடரை நடத்தும் போது, இப்பேரவை இலங்கை மீது தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும் எனத் தான் நம்புவதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீது அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் புலம்பெயர் தமிழ் சமூகம் அழுத்தத்தை வழங்கவுள்ளது. இவ்வாண்டு அனைத்துலக அரங்கில் இலங்கை அரசுக்கு எதிராக அனைத்துலக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என அழுத்தம் கொடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தாமும் குரலெழுப்ப உள்ளதாக லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் முதன்மையான, புலம் பெயர் தமிழ் அமைப்பான உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

தற்போது தேர்தல் மூலம் வடக்கு மாகாண சபை தெரிவு செய்யப்பட்டதானது தமிழ் மக்களின் தேவை களையும் பிரச்சினைகளையும் அனைத்துலக அரங்கில் முன்வைப்பதற்கும் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அழுத்தம் கொடுப்பதற்குமான ஒரு வாய்ப்பாகக் காணப்படுவதாக உலகத் தமிழர் பேரவை அறிவித்துள்ளது.

### ஒன்றிணைந்து வெற்றிக்கு உழைப்போம்

கடந்த செப்ரெம்பரில் இலங்கையின் வடக்கில் இடம்பெற்ற வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்களால் வழங்கப்பட்ட மிகத் தெளிவான அரசியல் அங்கீகாரமானது, எதிர்காலத்துக்கான எமது நம்பிக்கைகளை மேலும் வலுப்படுத்துகிறது. இந்த மாபெரும் வெற்றியானது இலங்கை அரசுக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் ஒரு முக்கிய செய்தியை வழங்கியுள்ளது என உலகத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பையும் உரிமையையும் கொண்டுள்ளது. வடக்கு மாகாண சபைக்கு இதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மாகாண சபை மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றை முன்னுரிமைப்படுத்துவதற்கான வாய்ப்பை மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்றதன் மூலம் பெற்றுக் கொண்டுள்ளது. இலங்கையில் ஜனநாயக வழியில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தலைமைகளுடன் இணைந்து நாங்கள் எமது பணிகளை மேலும் பலப்படுத்தியுள்ளோம். நாங்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பொறுப்புடன் செயலாற்றுவோம். அத்துடன் 2014இல் அனைத்துலக அரங்கில் எமது கருத்துக்களைத் தெளிவாக முன்வைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நாங்கள் பலம் சேர்ப்போம் என உலகத் தமிழர் பேரவையின் மின்னஞ்சல் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அனைத்துலக பொறிமுறை அவசியம்

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் போரால் பாதிக்கப்பட்ட பல பத்தாயிரக்கணக்கான மக்களுக்கு உண்மையும் நீதியும் கிடைப்பதையும், இலங்கைத் தீவில் மிகவுப் பிரகாசமான எதிர்காலம் ஒன்றை உருவாக்குவதை உறுதிப்படுத்துவதற்கும் ஐ.நா கண்காணிப்பின் கீழ் அனைத்துலகப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும் என உலகத் தமிழர் பேரவையின் மின்னஞ்சலில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளையில், 2014 மார்ச்சில் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் பங்குகொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனீவாவில் தங்கியிருக்கும் போது, பேரவையின் உறுப்புநாடுகளு டன் சந்திப்புக்களை மேற்கொண்டு இலங்கை மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் விசாரணை செய்வதற்கான அனைத்துலக விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தாம் விரும்புவதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் ஒபாமாவுக்கான தமிழர்கள்அமைப்பு தெரிவித்துள்ளது.

> இலங்கைக்கு பிஸ்வால் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் போது அவருடன் சந்திப்பொன்றை மேற்கொள்வோம் என கூட்டமைப்பு உறுப்பினர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இலங்கைக்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளும் பிஸ்வால் வடக்கிற்கும் வருகைதருவார் எனவும் மனித உரிமை நிலைவரம் தொடர்பாகவும் செய்திகள் சேகரிப்பார் எனவும் த.தே.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

### மனித உரிமை நிலைவரம் தொடர்பில் நேரில்வருகை

இதேவேளையில் தென்னாசியா மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் நிசா தேசாய் பிஸ்வால் இம்மாதம் இலங்கைக்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளையின் செயலகத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் அடுத்த மாதம் இலங்கைக்கான தனது பயணத்தை மேற் கொள்ளவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு பிஸ்வால் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும்போது அவருடன் சந்திப்பொன்றை மேற்கொள்வோம் என கூட்டமைப்பு உறுப்பினர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இலங்கைக்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளும் பிஸ்வால் வடக்கிற்கும் வருகைதருவார் எனவும் மனித உரிமை நிலைவரம் தொடர்பாகவும் செய்திகள் சேகரிப்பார் எனவும் த.தே.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்ற பின்னான வடக்கின் நிலைவரம் தொடர்பாக இம்மாத முற்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்திருந்த அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துக் கூறியிருந்தது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் அமெரிக்க உயர்மட்டப் பிரதிநிதிகளை இலங்கைக்கான அமெரிக்கத் தூதரின் இல்லத்தில் வைத்து சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர். இந்தச் சந்திப்பின் போது, மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள பேரவையின் கூட்டத் தொடர் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 25ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் ஒன்றை நிறை வேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துதல், மீறல்கள் தொடர்பில் பொறுப்பளித்தல், மனித உரிமை மீறல்கள் மற்றும் நாட்டில் இடம்பெறும் பல்வேறு அரசியற் பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான தேவைகள் தொடர்பில் அனைத்துலக சமூகம் குறைவாக மதிப் பீடு செய்துள்ளதாக கடந்த மாதம் பிஸ்வால் சுட்டிக்காட்டியிருந்தார்.

### இராஜதந்திர பரப்புரைகளில் இலங்கையும் தீவிரம்

இதேவேளையில், அடுத்து வரும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் தனக்கான ஆதரவைப் பலப்படுத்தும் பரப்புரைகளில் இலங்கை அரசும் ஈடுபட்டுள்ளது. பேரவையின் உறுப்பு நாடுகளிடமிருந்து குறிப்பாக ஆபிரிக்கர்களிடமிருந்து தனக்குப் போதியளவு ஆதரவு கிடைக்கும் என இலங்கை நம்புகிறது.

அதற்கான இராஜதந்திரப் பரப்புரைகளை இலங்கை அதன் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிசின் தலைமையில் மேற்கொள்கிறது. பீரிஸ் தற்போது கொழும்பிலும் வெளிநாடுகளிலும் தனது இராஜதந்திரப் பரப்புரையை முன்னெடுத்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதே.

*-நன்றி- புதினப்பலகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ ன் றை ய நா ள் உங்களுக்கு எப்படி?**

தருவது வித்தியா

**மேடம்**: அரச காரியங்கள் இழுபறியாகும். பழைய பிரச் சினைகளுக்கு சுமுகத் தீர்வு காண்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**இடபம்**: அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத் தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் வெற்றியுண்டு. மாணவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.

**மிதுனம்**: சில தினங்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**கடகம்**: மன உளைச்சல் நீங்கும். உத்தியோகத்தில் பணி களை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். முன்கோபம் விலகும்.

**சிங்கம்**: தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கப் பாருங் கள். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன் றாகவும் இருக்கும். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**கன்னி**: வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். சகோதரவகையில் மகிழ்ச்சியுண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**துலாம்**: சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப் படுவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல் வாதிகளின் ஆதரவு கிட்டும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்**: நீண்ட நாள் எண்ணங்களைப் பூர்த்தியாக்க முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**தனுசு**: மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**மகரம்**: புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. பிரியமானவர்களைச் சந்தித்துப் பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**கும்பம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனை வரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறு வீர்கள்.

**மீனம்**: பல வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். அடுத்தவர்களைக் குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

# மாயையின் காரணம்



## விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

இந்தக் கேள்வி– அதாவது மாயையின்காரணம்எது? என்னும் கேள்வி– சென்ற மூவாயிரம் ஆண்டுகளா கவே எழுப்பப்பட்டு வருகிறது. இதற்குரிய விடை ஒன்றே– அதாவது உலகம், என்று தர்க்க முறையில் கேள்வி எழுப்புகிறதோ அன்று விடை கிடைக்கும் என்பதுதான். கேள்வியில் முரண்பாடு உள்ளது. ஒன்றாக நிற்கும் பரம்பொருள் மற்றொன்றைச் சார்ந் தது போலக் காணப்படுவது உண்மை யல்ல. வரையறைக்குட்படாத, வரையறுக் கப்பட முடியாத, பரம்பொருள் வரையறுக் கப்பட்டதாகக் காணப்படுவது மாயையின் தோற்றமே. பரம்பொருள் எல்லையற்றது என்பதை ஏற்றுக்கொள்வதால் வேறு எத னாலும் அது பாதிக்கப்படாது என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம். முதலில், எல்லை யற்ற ஒன்று ஆதலால் எதுவும் அதைப் பாதிக்காது. எல்லையற்ற ஒன்றுக்கு இடம், காலம், காரண காரியம் என்பவை இருக்க முடியாது. மேற்கண்டவற்றை ஒப்புக் கொண் டால், 'இவ்வாறு எதனாலும் மாற்றம் செய்ய முடியாத ஒன்று உண்டாவதற்குக் காரணம் எது?" என்னும் கேள்வி எழும். இந்தக் கேள்வி எல்லைக்கு உட்பட்ட பொருள் பற் றியே எழ முடியும். ஆனால், நீங்களோ அதை விட்டுவிட்டு எல்லைக்கு உட்படாத தனிப் பொருளுடன் தொடர்புபடுத்திக் கேட்க விரும்புகிறீர்கள். எல்லையற்ற பொருள் எல்லைக்கு உட்பட்டதாகி, காலம், இடம், காரண காரியம் முதலியன ஏற்படும் போது தான் இந்தக் கேள்வியே எழும். 'அறியா மையே மாயைக்குக் காரணம்' என்ற ஒரே விடைதான் நாம் அளிக்க இயலும். இந்தக் கேள்வியே பொருத்தமற்றது. பரம்பொரு ளைப் பாதிக்க எதனாலும் இயலாது. அங்கே காரணம் என்பது ஒன்றும் இல்லை. நமக்கு விடை தெரியாது என்பதோ, நாம் அறிவற்ற வர்கள் என்பதோ இதன் முடிவாகாது. விடயம் அறிவுக்கு அப்பாற்பட்டது; அதை அறிவெல்லைக்கு உட்படுத்த முடியாது. 'எனக்குத் தெரியாது' என்பதை இரண்டு பொருளில் நாம் பயன்படுத்தலாம். ஒன்று, அந்த விடய அறிவுக்கு நம் அறிவு தாழ்ந்தது. மற்றொன்று , அது அறிவுக்கே அப்பாற்பட்டது. X – கதிர்கள் (X-rays) என்பது இப்பொழுது தெரிந்த ஒன்றாகி விட்டது. இவற்றுக்கான காரணங்களே இன்னும் விவாதத்தில் இருக்கின்றன. ஆனா லும், இவற்றை நாம் கண்டுபிடித்துவிட முடியும் என்பது நிச்சயம். எனவே, 'இன் னும் X– கதிர்களைப் பற்றி நமக்குத் தெரியவில்லை,' என்று சொல்லாம். ஆனால், தனிப்பொருளாகிய இறைவனைப் பற் றியோ நாம் அறியவே இயலாது. X– கதிர்கள் அறிவு எல்லைக்கு உட்பட்டவை. ஆனால், இன்னும் நமக்கு அவை பற்றித் தெரியாது; அவ்வளவுதான். ஆனால், இறைவனோ அறிவுக்கு மிகவும் தூரத்தில் இருப்பதால் அது அறிவதற்கு உரிய பொருள் என்ற எல்லைக்குள்ளேயே வருவதில்லை. அறிபவனை எதனால் அறிய முடியும்? நாம் எப்பொழுதும் நாமாகவே இருக்கி றோம். நம்மை நாம் அறியும்படி நம்மைப் பிறராக ஆக்கிக் கொள்வது அல்லது நம்மையே நம் அறிவுக்குப் பொருளாக்கிக் கொள்வது எப்படி? அழிவின்மையை நிரூபிக்க நம் முன்னோர்கள் கூறிய வாதங் களுள் இதுவும் ஒன்று. 'நான் இறந்து கிடக்கிறேன்,' என்று நினைக்க முயன்றால், எப்படி நினைப்பது? நான் என்னையே பார்த்துக் கொள்கிறேன்– ஏதோவொரு பிணத்தைப் பார்க்கிறேன் என்பதாகவே நினைக்க முடியும். கருத்துக்குப் பொரு ளான பிணம் நான் ஆக முடியாதல்லவா?

# 3000 ஆண்டு பழைமை வாய்ந்த கல்லறை எகிப்தில் கண்டுபிடிப்பு


உலகின் மிக நீளமான நைல் நதி பாயும் எகிப்தில் மிகப் பழைமையான புராதன சின்னங்கள் அதிகமாக உள்ளன. இங்குள்ள லக்ஸர் நகரில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த 3 ஆம் அமெனோடெப் மற்றும் 2 ஆம் ரமீசெஸ் மன்னர்களால் கட்டப்பட்ட மிகப்பெரிய மற்றும் சிறந்த கோவில்கள் அதிகமாக உள்ளன.

இந்தப்பகுதிகளை ஆராய்ந்த அகழ்வாராய்ச்சியாளர்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு கல்ல றையைக் கண்டுபிடித்துள்ளனர்.

இங்கு பழங்கால எகிப்திய நீதிமன்றங்களுக்கு பீர்கள் தயாரித்து வழங்குவதில் சிறந்து விளங்கிய ஒருவரின் உடல் உள்ளே புதைக்கப்பட்டுள்ளது என்று கூறப் படுகிறது.

இந்தக் கல்லறையின் சுவரில் அக்காலத்து மதச் சடங்குகளுடன் கூடிய தினசரி நடவடிக்கைகளை விளக் கும் பழங்கால ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவை இன்றும் அழியாமல் நன்றாக உள்ளதாக ஆராய்ச் சியாளர்கள் கூறுகின்றனர்.

அகழ்வாராய்ச்சிப் பணிகள் இன்னும் முடிவடையாது உள்ள தால் அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அகழ்வாராய்ச்சிக்குப் பின்னரே, பார்வையாளர்கள் இதைக் கண்டு களிக்கும் வண்ணம் இந்த கல்லறை புதுப்பிக் கப்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.



**நாளை**

மார்கழி-26
வெள்ளிக்கிழமை 10.01.2014
திதி: தசமி பி.இ.03.11 வரை
நட்சத்திரம்:
பரணி பி.இ.03.36 வரை
சுபநேரம்:
06.33- 08.03 வரை
இராகுகாலம்:11.03-12.33 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | 4 | 2 | 8 | |
| | 9 | | | 7 | | | | 3 |
| 2 | | 3 | 1 | | | | | 9 |
| | 1 | 8 | 9 | 4 | | 3 | 5 | |
| | | | | | | | | |
| | 5 | 7 | | 8 | 3 | 1 | 2 | |
| 7 | | | | | 9 | 8 | | 5 |
| 1 | | | | 3 | | | 4 | |
| | 6 | 5 | 8 | | | 9 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 3 | 4 | 9 | 8 | 2 | 1 | 6 |
| 9 | 8 | 6 | 2 | 7 | 1 | 4 | 5 | 3 |
| 2 | 1 | 4 | 6 | 3 | 5 | 7 | 8 | 9 |
| 8 | 2 | 1 | 5 | 6 | 9 | 3 | 4 | 7 |
| 4 | 9 | 5 | 3 | 1 | 8 | 8 | 6 | 2 |
| 3 | 6 | 7 | 9 | 5 | 3 | 5 | 9 | 1 |
| 1 | 4 | 2 | 7 | 8 | 6 | 9 | 3 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 5 | 3 | 1 | 2 | 4 |
| 5 | 3 | 9 | 1 | 2 | 4 | 6 | 7 | 8 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் தமது உயர் கல்வியை தாமாகத் தெரிவு செய்வது தீமையே

மாணவர்கள் உயர்கல்வியை தாமாக தெரிவு செய்வது நன்மையா? தீமையா? என்ற விவாதம் தற்காலத்துக்கு மிக அவசியமானதொன்றாகின்றது. முதற்கண் உதயனின் இளவட்டத்துக்கு நன்றி இந்தத் தலைப்பைத் தெரிவு செய்தமைக்கு. மாணவர்கள் தாமாகவேஉயர்கல்வியைத்தெரிவு செய்வது தீமை என்ற விவாதத்தை நான் முன்வைக்கின்றேன். எந்தவொரு பாடத்தையும் அறிவுசார் நேர்மையான அமைப்பில் எந்தப் பிள்ளைக்கும் எத்தகைய வளர்ச்சிப்படி நிலையிலும் கற்பிக்க முடியும். அவர்கள் தாமாக தமது கவனத்தைச்சிதறவிடாமலிருந்தால். ஒரு குழந்தை பிறந்ததிலிருந்து விருத்திப்படிநிலைகளில்வளர்ந்து வரும் வரைக்கும் பெற்றோருடைய பங்கு அதிகமானதாகும். அதனை யாரும் மறுக்க முடியாது. சில பெற்றோர்கள் சிறு குழந்தைகளாகஇருக்கும்போதே என்னுடைய மகன் வைத்தியனாக வருவான்... என்னுடைய மகள் நடனத்துறையில் சாதிப்பாள்.. என்று பேச்சுக்கும் புகழுக்கும் சொல்வதில்லை.

தமது குழந்தையின் வளர்ச்சிப் படி நிலைகளில் குழந்தையின் திறன்களை முழுமையாக ஒவ்வொரு பெற்றோரும் அறிந்து கொள்கின்றனர். அவர்களிடம் சிறப்பாகஇருக்கின்றதிறன்களை நோக்கித் தமது பிள்ளைகளை நகர்த்துகின்றனர். தமது சிறு வயதில் வெளிப்படுத்தப்பட்ட திறன்களை இருபது வயதில் எந்தவொரு மாணவனாலும் கூற முடியாது பெற்றோர் சொல்லித் தெரியும் வரை.

மாணவர்கள் உயர்கல்வி பற்றி தாமாகவே முடி வெடுப்பதாக இருக்கட்டும். எத்தனை மாணவர்கள் சுயமாக முடிவெடுக் கின்றனர். "அம்மா என்னோட நண்பி பிரியா கலைப்பிரிவில் படிக்கப் போறாளாம். நானும் அதுதான் படிப்பேன்..." இப்படியான சம்பவங்களை நாம் கேள்விப்படுவதில்லையா? அதே நேரம் சேர் சொன்னவர் எனக்கு இந்த துறை தான் சரியா வருமென்று.. நான் அதுதான் படிப்பேன்... இப்படியும் ஒரு சில மாணவர்கள் தமது முடிவைப் பெரியோர் கையில் விட்டு விடுவதுண்டு. பிள்ளைகள் பெற்றோரின் முடிவுகளுக்கு அப்பால் பலரில் தங்கியிருப்பதை இதன் மூலம் உணர முடிகின்றது. ஒரு விவசாயி தனதுபிள்ளைதன்னைப் போல விவசாயம் செய்யாது ஒரு பெரியவைத்தியனாகவர வேண்டும் என்று நினைப்பதில் என்ன தவறு இருக்கின்றது?


பன்னிரண்டு வயதிலிருந்து பதினெட்டு வயது வரையான கட்டிளமைப் பருவம் உண்மையிலேயே குழப்பமான வயதாகும். முடிவுகளை எடுப்பதில் தெளிவற்ற நிலையும், அதிக சுதந்திரத் தன்மையும் அவர்களிடம் காணப்படும். இந்தக் கால கட்டத்திலேயே அவர்களுடைய உயர்கல்வியும் ஆரம்பமாகின்றது. அங்கே அவர்களுக்கு சரியான வழிகாட்டிகளாக பெற்றோர்கள் இருக்கின்றனர். பொதுவாக இந்தப் பருவத்தில் அநேகமான மாணவர்களுக்கு கல்வியைத்தவிர ஏனைய விடயங்களில் ஈடுபாடு அதிகமாகக் காணப் படும். அதுவும் தற்காலத்தில் உள்ள நவீனத்துவத்தின்ஆட்சிஅவற்றுக்குத் தீனியும் போடும். அந்த இடத்தில் சுயமாக நீங்களே முடிவெடுங்கள் என்று அவர்கள் கைகளில் அவர்களது எதிர்காலக் கல்வியை விட்டோமென்றால்அவைசரியான தெரிவுகளாக அமையாது.

அவர்களுக்கு பிடித்த துறையை அவர்களையே தெரிவு செய்ய விட்டுவிடுவது நன்மை என்றால்... அதிகமானோர் தவ றான வழியில் செல்லவும் கூடும்.

ஆகவே மாணவர்களே பெற்றோர்களின்ஆதரவுடன் உயர்கல்வி குறித்த உங்கள் துறைகளை நீங்கள் தெரிவு செய்வதே உங்கள் எதிர்கால வாழ்வு சிறக்க உதவும்

*ச. கந்ததர்சினி,*
*125, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

**தனது குழந்தையின் வளர்ச்சிப் படி நிலைகளில் குழந்தையின் திறன்களை முழுமையாக ஒவ் வொரு பெற்றோரும் அறிந்து கொள்கின் றனர். அவர்களிடம் சிறப்பாக இருக்கின்ற திறன்களை நோக்கித் தமது பிள்ளைகளை நகர்த்துகின்றனர். தமது சிறு வயதில் வெளிப்படுத் தப்பட்ட திறன்களை இருபது வயதில் எந்தவொரு மாணவனாலும் கூற முடியாது, பெற்றோர் சொல்லித் தெரியும் வரை.**



## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

மாணவர்கள் உயர்கல்வித்துறையை தாமாகத் தெரிவு செய்வது

**நன்மையா? தீமையா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.................................................................

முகவரி :- .................................................................

.................................................................

........................ திகதி


........................ கையொப்பம்


**'இளவல்கள் வட்டம்',**
**'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## வலி சுமந்த பூமி

அராஜகங்களின்
அதியுச்சம்
அவலங்களாக
நீடிக்கின்றன.
மானுட சிந்தனைகள்
மனித நேயமின்றியே
மன்றாடுகின்றன.
ஒற்றுமையின்றிய
உலகில்
ஒப்பாரிகள்
மலிந்து கிடக்கின்றன.
ஆன்மிகம்
அமைதி கொள்ள
அதிகாரத்தின் குரல்கள்
ஆர்ப்பரிக்கின்றன.
அறமின்றி
ஆலயங்களும் அல்லல்பட்டு
அகிம்சை கொள்கின்றன
உருவங்கள்
உருமாற
உணவின்றி மரணங்கள்
மறைந்தே கிடக்கின்றன
ஒழுக்க நெறியின்றி
கற்பு காவு கொள்ளப்படுகிறது.
காசுக்கும் களங்கப்படுகிறது.
சுற்றுகின்ற பூமியில்
சூறாவளியாய்
தீமைகளே சூழல்கின்றன
தீயிடவும் முடியவில்லை.
மண்ணுக்குள் தேரையாய்
மகத்துவங்கள் யாவும்
மறைந்தே போகின்றன
ஆனாலும்
மாறுதல் ஏதுமின்றி
மறுபடியும் பூமியும்
வலியுடன் தான்
பிறக்கிறது
புத்தாண்டாய் !

*வைத்திலிங்கம்*
*ரஜனிகாந்தன்*
*முல்லைத்தீவு*





## வெற்றி தேர்வி

வெற்றியைப்
பற்றிப் பிடிக்க
எட்டி நட- தடைகளைத்
தட்டி எறிந்து
நட நடந்து கொண்டேயிரு..

தழல்கள் மீதும்
நிழல்கள் என நினைத்து
பாதத் தடங்களை
பக்குவமாய் வைத்து
தடைகளை கடந்து
நடையை ஆரம்பி
நம்மருகில் தான் வெற்றி

நட, நடந்து செல்
இன்று மட்டுமல்ல நாளையும்
எமது கையில்தான்
நடந்து கொண்டேயிரு

வெற்றித் தேவதை- உன்னை
விசாரிக்கத் தொடங்கும் வரை நட
பாதங்கள் நடக்கத் தயாரானால்
பாதைகள் மறுப்புச் சொல்லப் போவதில்லை
நட, நடந்து கொண்டேயிரு

நெய்யாய், திரியாய்
நீயே மாறினால்
வெற்றியும் உனக்கொரு
தூண்டு கோலாகும், நட

வெற்றியை பற்றிப் பிடிக்க
சற்றும் யோசிக்காமல் நட
கத்தும் கடலும்- நம்
கைக்கெட்டும்
முயற்சி செய்தால்....

உன் இலட்சிய சிகரத்தை
எட்டும் வரை
முட்டுப்படாமல்- வலியை
கட்டுப்படுத்தி நட
நாளை நமதாகும்
குருதி சிந்தாவிட்டாலும்
பரவாயில்லை
உறுதி கொண்டு, நட
இறுதி வரை
அறுதியாய் கிடைக்கும்
உன் இலக்கு.

*த. குணாஜினி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனையுடன் மாற்றலாகியோருக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை

அச்சுவேலி, ஜன.9

வன்னிப் பெரு நிலப்பரப்பு பாடசாலைகளுக்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து சேவைக்காலம் குறிப்பிட்டு நிபந்தனை அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் 60 பேர், குறித்த நிபந்தனையின் பிரகாரம் இந்த வருடம் முதல் தமக்கு யாழ்.மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கவில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

அதேசமயம் அவர்களுடன் காலம் குறிப்பிட்டு நிபந்தனை அடிப்படையில் வன்னிப் பெரு நிலப்பரப்புக்கு இடமாற்றம் வழங்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் கடந்த 2 ஆம் திகதி முதல் யாழ்.மாவட்ட பாடசாலைகளில் கடமையேற்று பணி புரிந்து வருகின்றனர்.

"_"

**ஒரே நிபந்தனை அடிப்படையில் இட மாற்றம் செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சொந்த இடத்தில் கடமை புரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**


இடமாற்றம் கிடைக்காத ஆசிரியர்கள் வலயக்கல்வி அலுவலர்களுடன்தொடர்பு கொள்ளும் போது, விண்ணப்பம் வலயத்தில் இருந்து மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதால், மாகாணக் கல்வித் திணைக்களமே யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்ற மாற்றல் உத்தரவு வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுவதாகக் கூறியுள்ளனர். மாகாணக் கல்வித் திணைக் களம் இடமாற்றம் வழங்காமல் காலம் கடத்தி வருவதால் சட்ட நடவடிக்கை மேற் கொள்ள அவர்கள் தீர்மானித்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இடமாற்றம் தொடர்பாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் அணியைச் சேர்ந்த ஆசிரியர் சிலர் கருத்துத் தெரிவிக்கையில்;

ஒரே நிபந்தனை அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சொந்த இடத்தில் கடமை புரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் எங்களுக்குப் பொருத்தமான பதில் அளிக்காமல் கல்வி வலயமும், மாகாணக் கல்வித் திணைக்களமும் இழுத்தடித்து வருகின்றன. இது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல எனக் கூறினர். (வ-11)

# கௌரவிப்பு நிகழ்வு



தென்மராட்சி, ஜன.9

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஒன்றுகூடலும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் கௌரவிப்பும், சங்கத்தில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்கள் கௌரவிப்பும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சங்க மண்டபத்தில் இடம் பெற்றது.

சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மாவட்ட கூட்டுறவு அலுவலர் திருமதி க.நல்லதம்பி, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளும் சங்கத்தில் கட மையாற்றி ஓய்வு பெற்ற 17 பணியாளர்களும் நிகழ்வில் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். சங்கப் பணியாளர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ந-9)

## வணிக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமையும் திறந்திருக்கும்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினது சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வணிக நிலையங்கள் தைப்பொங்கல் வியாபாரத்துக்காக எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்குமென மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார். (ந-9)


**கட்டார் நாட்டில் உடனடி இலவச வேலை வாய்ப்பு**

*மேசன் *தச்சன்

*மேலும் குறைந்த கட்டணங்களில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தரப்படும்.

தொடர்பு: 077 395 7291 (13588)(12.6)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

2 மாதங்கள் நிரம்பிய Grate dane குட்டி விற்பனைக்குண்டு. (42016)(4.8.3)

தொடர்பு:077 605 3845


## தென்னிலங்கை அச்சகங்களை நாடும் யாழ்.வர்த்தகர்கள்

தென்னிலங்கை வர்த்தகர்களின் வருகையால்தமதுவியாபாரம்குறைந்துள்ளதாக முறையிடும் யாழ். பிரதேச வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்க ளுக்கு கலண்டர்கள் அச்சிடுவதற்கு தென்னிலங்கை அச்சகங்களை நாடியுள்ளமை குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரிபோன்றஇடங்களில்பெரும்முதலீட்டில் அச்சகங்கள் நடத்தப்படுகின்ற போதிலும் அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் தென்னிலங்கையில் உள்ள அச்சகங்களில் கலண்டர் அச்சிடுவித்து யாழ்ப்பாணத் தில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாண மக்களை நம்பி பெரும் முதலீட்டில் அச்சகங்கள் (கொழும்பு அச்சகங்களுக்கு நிகராக) இயங்குகின்ற நிலையில் இவற்றிடம் கலண்டர்களை அச்சிடுவதனால் அங்கு கடமையாற்றும் யாழ். பகுதி ஊழியர்கள் பயன் பெற வாய்ப்பு உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. (வ-9)


**மணமகள் தேவை**

* 77இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 15பாவம் உடைய Computer Science முடித்து சொந்த நிறுவனம் நடத்தும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க் கப்படமாட்டாது)

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை, இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.

077 607 0862 (42092)(17.6)


## புதுக்குடியிருப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் புதுக்குடியிருப்பு (வ.து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானியில் வெளி யிடப்பட்டதுமான வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள் இதற்கு அமைய கிளிநொச்சி மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08 ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதி காரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 28 இற்கு அமைய சங்கத்தின் சகல கிளைக ளுக்குமான கிளைக்குழு தெரிவுக்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்கான இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

கிளைக்குழு தெரிவு நடைபெறும் திகதி-18.01.2014

நேரம்-முற்பகல் 10.00 மணி

கிளைப்பொதுச்சபைக்கூட்டங்கள் தொடர்பான விவரம்

| கிளை இல. | கிளையின் பெயர் | தவிசாளர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. | புதுக்குடியிருப்பு மேற்கு | திரு.நா.நாவேந்தன் | மத்தியகல்லூரி புதுக்குடியிருப்பு |
| 02. | புதுக்குடியிருப்பு கிழக்கு | திரு.அ.சீராளன் | ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் புதுக்குடியிருப்பு |
| 03. | புனிதசூசையப்பர் | திரு.இ.தனுசன் | புதுக்குடியிருப்பு R.C பாடசாலை புதுக்குடியிருப்பு |
| 04. | ஆனந்தபுரம் | திருமதி சி.குலேந்திரன் | ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை ஆனந்தபுரம் |
| 05. | இரணைப்பாலை | திரு.சி.பாலசுந்தரம் | இரணைப்பாலை றோ.க.மகா வித்தியாலயம் இரணைப்பாலை |
| 06. | தேவிபுரம் | திரு.இ.விஜயகுமார் | தேவிபுரம் அ.த.க.பாடசாலை தேவிபுரம் |
| 07. | உடையார்கட்டு | திரு.ச. அருள்நாதன் | உடையார்கட்டு மகாவித்தியாலயம் உடையார்கட்டு |
| 08. | சுதந்திரபுரம் | திருமதி பு.முகுந்தன் | சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை சுதந்திரபுரம் |
| 09. | வள்ளிபுனம் | திரு.ச.பாஸ்கர் | வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் வள்ளிபுனம் |

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் 1998.05.19 ஆம் திகதிய 1028/6இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட் டுள்ளன. கிளைக்குழு தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக்கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம். கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் குறித்த அறிவிப்புகளின் படி கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுக மளித்து தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்திக் கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக அனுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சி.தவராசா

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி

உதவி ஆணையாளர், கிளிநொச்சி.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்

கிளிநொச்சி.

(10987)(3.6.4)

## சிவப்புத் தேள் நடமாட்டம் அதிகரிப்பு அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்.மாவட்டத்தில் சிவப்புத் தேள்களால் கடியுண்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை கடந்த சில வாரங்களாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"_"

**சிவப்பு நிறமுடைய தேளின் நெஞ்சுப் பகுதியில் சாம்பல் நிறத்தில் புள்ளிகள் காணப்படும். இது இரவு நேரத்திலும் அதிகாலை நேரத்திலும் அதிகமாக நடமாடும்.**

சிவப்பு நிறமுடைய தேளின் நெஞ்சுப் பகுதியில் சாம்பல் நிறத்தில் புள்ளிகள் காணப்படும். இது இரவு நேரத்திலும் அதிகாலை நேரத்திலும் அதிகமாக நடமாடும் எனவும் இது மனிதரைத் தீண்டினால் தாங்க முடியாத வலியும் தீண்டிய இடத்தில் வீக்கம் ஏற்பட்டு வாந்தி, இதயத் துடிப்பில் மாற்றம், இரத்த அமுக்க மாற்றம் ஏற்படுவதுடன் சுவாசத்தில் தாக்கம் ஏற்படலாம்.

2012 ஜனவரி தொடக்கம் 2013 பெப்ரவரிமாதம்வரை சிவப்புத் தேளினால் 80 பேர் கடியுண்டுள்ளனர். இவர்களில் 52 வீதமானோர் ஆண்களும், 48 வீதமானோர் பெண்களும் ஆவர். இவர்களில் 30 வீதமானோர் 3 வயதுக் கும் 12 வயதுக்குமிடைப்பட்ட குழந்தைகள்.

இந்திய மகாராஷ்டிரா மாநிலத்தைப் பூர்வீகமாகக் கொண்ட சிவப்புத் தேள் கடந்த 31.07.1987 இல் இந்திய அமைதிப் படையினருடன் இலங்கைக்கு வந்ததாகக் கருதப்படுகிறது. ஆரம்பத்தில் பலாலி, அச்சுவேலி, காரைநகர் ஆகிய இடங்களில் காணப்பட்டு காலப்போக்கில் தென்னிலங்கையில் பல இடங்களிலும் காணப்படுகின்றது. இந்திய அமைதி காக்கும் படையினரால் கொண்டு வரப்பட்டவைகளில் பாதீனியம் செடி, லீஸ்மானியா நுளம்பு, கால்நடை களுக்கான கால்வாய் நோய் மற்றும் சிவப்புத் தேள் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

சிவப்புத் தேளால் தீண்டப்படாதிருக்க இருக்க உடுப்பு, சப்பாத்து போன்றவற்றை கண்ட கண்ட இடங்களில் போடாமலும் குடியிருப்புக்களைச் சுற்றி சுமார் 10 அடி தூரத்தைத் துப்புரவாக வைத்திருத்தல், வளவுகளில் தூங்கும் மரக்கிளைகளை வெட்டித் துப்புரவாக வைத்திருத்தல், மெல்லிய மஞ்சள் நிற பல்புகளைப் பொருத்துதல் போன்றவற்றைச் செய்தல் வேண்டும்.

சிவப்புத் தேள் தீண்டினால் அந்த இடத்தை தூய நீரால் கழுவுதல் வேண்டும். சோப் மற்றும் மதுசாரத்தினாலும் கழுவலாம். சிவப்புத் தேளினால் தீண்டப்பட்டவரைப் பதற்றமடைய விடாமலும் கடித்த இடத்தை அசையவிடாமலும் வைத்திருக்கவேண்டும். வலியிருந்தால் பனடோல் மட்டும் கொடுக்கலாம். மயக்கம் ஏற்பட்டால் இடதுபக்கமாகக் கிடத்தி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுதல் வேண்டும்.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் சிவப்புத் தேள்களின் நடமாட்டம் காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் அவதானமாக இருக்குமாறு மருத்துவ தேசிய நஞ்சு ஔடதவியல் நிறுவனத்தின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவலைகளில்...

24 ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு





**அமரர் கணேசலிங்கம் ஜீவகுமார்**

தோற்றம் : 28.03.1971 திதி:
மறைவு : 03.01.1989 ஏகாதசி தேய்பிறை

பெற்றவர்க்கும் உடன் பிறந்தோர்க்கும்
ஆசைச் செல்வமடா நீ
ஈர்பத்தொடு மூவாண்டின் பின்
அரவணைத்தாயோ அன்னையை
உற்ற துணையோடு நீ அங்கு
மாறாத்துயரோடு நாம் இங்கு

**திருமதி கணேசலிங்கம் லீலாவதி**

தோற்றம் :13.07.1946 மறைவு : 21.12.2012
திதி: நவமி 09.01.2014

ஆண்டொன்று ஆகிற்றே
அன்னையே உமைப் பிரிந்து
அன்புடை மனைவியாய் ஆருயிர் அன்னையாய்
உற்றார்க்கும் உறவுகட்கும்
நற்றாயாய் வாழ்ந்திருந்தீர்
உமது ஆத்மா சாந்திபெற
அரன் பாதம் இறைஞ்சுகிறோம்

ஓம் சாந்தி
ஓம் சாந்தி
ஓம் சாந்தி

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (C10990)(2.6)


என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

# நீங்கா நினைவலைகளில்

9 ஆம் ஆண்டு | 27 ஆம் ஆண்டு



திதி: 09.01.2014



**அமரர் சொக்கலிங்கம் துரைஐயா** | **அமரர் துரைஐயா பாலச்சந்திரன்**

தோற்றம் (உரிமையாளர்கள் கமலாஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ்) தோற்றம்
30.04.1934 12.07.1959
மறைவு மறைவு
20.12.2004 19.10.1987


அகல் விளக்காய் ஒளி தந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பின் வழிகாட்டிய எம் தெய்வங்களிற்கு எம் அஞ்சலிகள்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கமலாஸ்ரோர்ஸ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (42049)(12.6)

உங்கள் நினைவுகளில்:
குடும்பத்தினர்.

ஓம் வீராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 45 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



**அமரர் சண்முகம் தவபாலன் (தவம்)**

தோற்றம் : 1949.12.03 மறைவு : 2013.11.26

எமது குடும்பத்தின் அணையாத அகலாய் அகத்தில் ஒளிவீசி அன்புச் சுடராகத் திகழ்ந்த அமரர் சண்முகம் தவபாலன் (தவம்) அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.01.2014) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் இரங்கல் செய்தி தந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் விருந்தோம்பல் செய்தோருக்கும் தொலை தூரங்களில் இருந்து அன்னாரைத் தேடி வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் பக்கமிருந்து உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விஜயகிரி, நாவலடி வீதி,
திருநெல்வேலி மேற்கு.

குடும்பத்தினர். (42045)(2...)

### சனசமூக நிலையத்தால் மாணவருக்கு வகுப்புகள்

வரணி, ஜன.9

வரணி குடமியன் சன சமூக நிலையத்தால் அந்தப் பிரதேச மாணவர்களின் நலன் கருதி இலவச பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக கணிதம், ஆங்கிலம் போன்ற பாடநெறிகள் மாணவர்களுக்கு போதிக்கப்பட்டுவருவதாகவும் இவை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக இலவசமாக போதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. தற்சமயம் கூடுதலான மாணவர்கள் இந்தப் பாடங்களைக் கற்கமுன்வந்துள்ளதாகவும்கூறப்பட்டது. (ந-122)

### விண்ணப்பம் கோரல்

வளி மண்டலவியல் திணைக்களம் தனது ஆளணியை விருத்தி செய்ய திணைக்களத்தில்சேவையில்இருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இது தொடர்பான விண்ணப்பங்களைவிரைவில்அனுப்புமாறு திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ந-122)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**தானியேல் றெக்சியன்**

பிறப்பு 04.01.1969 இறப்பு 26.11.2013

நல்வாழ்வு வாழ
வழிகாட்டிய தந்தையே!
இணையில்லா வாழ்வை
எமக்களித்து எம்மை
எப்பவும் சிரிக்க வைத்து
கடைசியில் எம் விழிகளில்
கண்ணீர் சிந்த சென்ற
திசை அறியாமல்
எங்கு சென்றீரோ!
எப்போ உமை மீண்டும்
காண்போம்!

என்றும் உம் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்.
3 ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (42044)(3.6.4)

# 7 ஆம் ஆண்டு நினைவில்

பிரம்ம ஸ்ரீ.
**சி.கணேசராஜ சர்மாவின்**
ஸ்ரீ ஐயப்ப நீ மெய்யப்பா
நினைவு நாளி



நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ண மலர் வாசமாக மனதில் நின்றீர்!
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்,
மனம் வெதும்பி வாடுகின்றோம்.
ஏழு ஆண்டுகள் சென்ற பின்னும்
என்றும் அழியா நினைவுகள்.
ஓம் ஐயப்பா சரணம்


கலங்கும்:
மனைவி, பிள்ளைகள்,
சி.கணேசராஜசர்மா
தனுசி,
மகன் - க.ஜெகதீஸ்வரசர்மா,
மகள் - க.துர்க்காஜினி.

பழைய தபாற்கந்தோர் றோட்,
ஜெயதுர்க்கா இல்லம்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தோற்றம் 25.09.1985 மறைவு 18.12.2007 (42048)(12.6.3)

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 ★ 11 ★ 1954



உதிர்வு 28 ★ 12 ★ 2006

**அமரர் பேரானந்தம் சிவானந்தன்**

(ஓய்வுபெற்றபணியாளர், யாழ். மாநகரசபை)

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஏழு ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்.

39/9, மின்சார நிலைய வீதி,
5 ஆம் ...,
யாழ்ப்பாணம்.

சி.சத்தியாதேவி (மனைவி),
உமாநேசன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்லூரிக்கு புதிய அதிபர்

யாழ்ப்பாணம்.ஜன.9

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராக வண.கலாநிதி டேவிட் சதானந்தன் சொலமன் நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார். தென்னிந்திய திருச்சபை பேராயர் அதிவண.கலாநிதி டானியல் செல்வரட்ணம் தியாகராஜா தலைமையில் வழிபாடும் புதிய பதவியேற்பு வைபமும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பேராயர் கலாநிதி எஸ்.தியாகராஜா தெரிவிக்கையில்;

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வரலாற்றில் 1823 முதல் 1836 வரையான காலம் பொற்காலம் ஆகக் கருதப்படுகிறது.

அந்தக் காலத்தில் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய மகான் டானியல் புவர் அதிபராக பொறுப்பேற்றது முதல் இன்று வரை 16 அதிபர் கள் தமது அதிபர் பணிக்கு மகுடம் சூட்டியுள்ளனர்.

புது யுகத்தில் புதிய அதிபராக, 17 ஆவது அதிபராக பதவியேற்கும் வண.கலாநிதி டேவிட் சதானந்தன் சொலமன் தமது பெரும்பணியை அர்ப்பணிப்போடு மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மேல்நாட்டு இசை மற்றும் மங்கல வாத்திய இசைகள் முழங்க பேராயர் கலாநிதி டானியல் செ.தியாகராஜா புதிய அதிபரை அழைத்து வந்து அதிபர் கதிரையில் அமர வைத்து ஆசி வழங்கினார்.

நிகழ்வில் சட்டத்தரணி விஜீலா அருளானந்தம், இந்திரா தவநாயகம், நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், மாகாணசபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், முன்னாள் உப அதிபர் இராஜசிங்கம், முன்னாள் அதிபர் ஜி.இராஜ நாயகம் மற்றும் பழைய மாணவர்கள், கல்லூரிச் சமூகம் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந-50)

# உருளைக்கிழங்குச் செய்கை சாதனை விழா இன்று

யாழ்ப்பாணம்.ஜன.9

யாழ்.மாவட்டத்தின் உருளைக்கிழங்குச் செய்கையின் சாதனை பற்றிய விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏழாலை தெற்கு மயிலங்காடு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் முன்றிலில் நடைபெறும்.

யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வடக்கு மாகாண விவசாயம் கால்நடை சுற்றுச்சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மத்திய விவசாய அமைச்சின் செயலாளர் மீகஸ்வெல றோகான் விஜயக்கோன் மற்றும் விவசாய திணைக்கள உயரதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் மற்றும் விவசாய பெருமக்களை கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# குளங்களின் கீழான நெற்செய்கையை காப்பாற்ற முடியும்

***தெரிவிக்கிறார் கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர்***

கிளிநொச்சிக் குளங்களின் கீழான நெற்செய்கையை மட்டுமே தற்போது பெய்துவரும் மழையினால் காப்பாற்ற முடியும். இவ்வாறு தெரிவித்துள்ளார் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.விகிர்தன்.

தொடர்ந்து மழை பெய்யும்போதுதான் இங்குள்ள குளங்களின் நீர்மட்டம் உயர்ந்து செலலக்கூடிய நிலை உருவாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக 58 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டபோதிலும் மானாவாரியாக மேற்கொள்ளப்பட்ட செய்கைகள் அழிவைச் சந்தித்துள்ளன. குளங்களின் நீர் மட்டம் உயருமேயானால் குளங்களின் கீழான நெற்செய்கைகளை ஓரளவு பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆனால் குளங்களுக்கு நீரின் வரத்துக் குறைவாக இருப்பதால் அவற்றின் நீர் மட்டங்களில் பெரியளவில் உயர்வு காணப் படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

கடும் வறட்சியும், மழை இல்லாமையும் சேர்ந்து இந்தமுறை செய்கை பண்ணப்பட்ட நெற் பயிர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் சமாசத்தின் செயலாளராக கடமையாற்றும் **திருமதி சரோஜினிதேவி பரமானந்தன்** அவர்களின் தந்தையார்

**பொன்னையா ஆசைப்பிள்ளை**

அவர்களின் மறைவையொட்டி அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,

யாழ். மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் சமாசம்.

## மரண அறிவித்தல்கள்



### தேவசகாயம் பாலச்சந்திரன் (கண்ணன்)

உடுவில் தெற்கு, சத்தியபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் பாலச்சந்திரன் நேற்று (08.01.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற தேவசகாயம் மற்றும் இராணிமலர் தம்பதிகளின் அன்பு மகனும், செல்வச்சந்திரன், பிறேமச்சந்திரன, விஜயகுமாரி, அருள்சந்திரன், தேவச்சந்திரன் (பிரதேசவைத்தியசாலை, சங்கானை), வசந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அற்புதலதா, யசோதா (ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி), பத்மலதா, கருணா, தர்சினி, நேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், லோஜனா, கஜானி, சாம்பவி, நிலானி, சதுர்சனா, கோசலா ஆகியோரின் சித்தப்பாவும், தனுசன், தர்சிகா ஆகியோரின் அன்புமாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2014) வியாழக்கிழமை ந.ப. 12. மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,உடுவில். (42042) (4.6) தகவல்: குடும்பத்தினர்.

### பொன்னையா ஆசைப்பிள்ளை



மட்டுவில், சந்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா ஆசைப்பிள்ளை நேற்று (08.01.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - அன்னம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற திருப்பதிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும், சரோஜினிதேவி, விஜயலட்சுமி, விஜயகாந்தி, கதிர்காமநாதன் (கனடா), சிவநாதன், காலஞ்சென்ற இராஜசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமானந்தன், காலஞ்சென்ற சரவணபவானந்தம் மற்றும் தவயோகசெல்வகுலசிங்கம், மனோகரி, சிவநந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இராசையா, நடேசபிள்ளை, சிவசுப்பிரமணியம், பரமேஸ்வரி, நாகம்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2014) வியாழக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் கொட்டையடிதூவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு,
சந்திரபுரம், சாவகச்சேரி. (13063)(12.6)

தகவல்
குடும்பத்தினர்.

## இறைச்சிக்காக சுடப்படும் மாடுகள்

பளை.ஜன.9

ஆனையிறவு கறுக்காய் காட்டினுள் நடமாடும் கட்டாக்காலி மாடுகள் இனந்தெரியாதோரால் துப்பாக்கியால்சுடப்பட்டுஇறைச்சி எடுத்துச் செல்லப்படுவதாக அயல் கிராம மக்கள் தெரிவித்தனர்.

பட்டப்பகல் வேளையில் துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்பதாகவும் சிறிது நேரத்தின் பின்னர் அங்கு சென்று பார்த்தால் மாட்டின் கழிவுகள் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-9)

## வாழ்வு நிலைச் சான்றிதழ் படிவம் அனுப்பி வைப்பு

தென்மராட்சி, ஜன.9

தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கு இந்த வருடத்துக்குரிய வாழ்வுநிலைச் சான்றிதழ் தொடர்பான படிவம் ஜனவரி மாத ஓய்வூதிய வவுச்சர்களுடன் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் படிவத்தினைப் பூர்த்தி செய்து தத் தமது பிரிவு கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறும் குறித்த திகதிக்குள் கையளிக்காத ஓய்வூதியர்களுக்கு பெப்ரவரி மாத ஓய்வூதிய வவுச்சர் அனுப்பி வைக்கப் படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

அமரர்
**நாகம்மா கந்தர்**

மண்ணில் 05★07★1924 விண்ணில் 10★12★2013

திதி: பூர்வபக்க அட்டமி



அன்பிற்கும் பண்பிற்கும்
இலக்கண மாய் வாழ்ந்து
எமை அவனியிலே வாழ்வாங்கு
வாழ வைத்த தெய்வமே!
நித்தமும் உங்களது ஆத்ம
சாந்திக்குப் பிரார்த்திக்கிறோம்.

கடந்த 10.12.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (09.01.2014) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

கைதடி தெற்கு.
கைதடி. (41649)(3.6.4)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு

அமரர் **கைலாயபிள்ளை துரைரத்தினம்** (குட்டித்தம்பி)



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், திக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கைலாயபிள்ளை துரைரத்தினம் (குட்டித்தம்பி) அவர்கள் 10.12.2013 இன்பர்சிட்டி கடற்பரப்பில் காலமானார். அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (09.01.2014) வியாழக்கிழமை நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ந.ப.12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

நாச்சிமார் கோயில்,
அல்வாய் வடமேற்கு, திக்கம்.

பிறப்பு 24.04.1957 இறப்பு 10.12.2013

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சொக்கலிங்கம் துரைஐயா**

(உரிமையாளர்: கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ்)

தோற்றம் : 30.04.1934
மறைவு : 20.12.2004

திதி : மார்கழி பூர்வ பக்க நவமி
(09.01.2014)

அயராது எமக்காக உழைத்த அன்புத் தந்தையே!
ஆண்டுகள் ஒன்பது ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
இங்கு உங்கள் அன்பை நாம் இழந்து தவிக்கின்றோம்
ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய ஈசனை வேண்டுகின்றோம்
உங்களுக்கே புத்திரராய் மீண்டும் பிறந்திடுவோம்
ஊரார் வியக்க வளர்ந்திட்ட பேரமக்களுடன்.
எம் உறவின் புதிய தலைமுறையாய் உங்கள்
முதற்பூட்டன் அட்சயனும்
ஏற்றம் பெற உங்கள் ஆசி வேண்டுகிறான்
ஐயம் எதுவுமில்லை உங்கள் ஆசி எமக்குண்டு.



\- குடும்பத்தினர்.

சந்திரன் பான்சி பலஸ் துரைஐயா திருமண மண்டபம் நாவலி வீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம். (42030)(2.6.3) சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா கால்நடைகளுக்கு கால்வாய் நோய்த் தொற்று

வவுனியா, ஜன.9

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சின்னடம்பன் கிராமத்தில் கால் நடைகளுக்குக் கால்வாய் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கெனவேசிலகால் நடைகளில் இந்த நோய் இனாங் காணப் பட்டிருந்தது. அங்கிருந்து சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட மாடுகளில் இருந்தோ அல்லது எரு ஏற்றுவதற்கு வருகை தரும் லொறிகளிலிருந்தோ இந்த நோய் இங்கும் ஏற்பட்டிருக்கலாம் எனக் கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி தபோதினி தேவநேச்ன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இது ஒரு வகை வைரஸ் கிருமியால் ஏற்படும் தொற்று நோயாகும். இந்த நோய் காலில் குளம்பு உள்ள மிருகங்களான ஆடு, மாடு, பன்றி போன்ற வற்றுக்கு ஏற்படும். காய்ச்ச லும், வாய், நாக்கு, கால் குளம்பு, மூக்கு, முகம் மற்றும் மடி ஆகிய வற்றில் கொப்புளங்கள் ஏற் பட்டு அவை உடைந்து புண் களாக மாறுதல், பசியின்மை, வாயிலிருந்து உமிழ்நீர் வடிதல் போன்றன இந்த நோயின் குணம் குறிகளாகும். இதனால் பால் உற்பத்தி குறையும், கன்றுகளுக்கு இதயம் தாக்கப்பட்டு இறப்பு ஏற்படும், சினைப்பட்ட பசுக்களுக்குக் கருச்சிதைவு ஏற்படும்.

அத்துடன் பால் கறப்பவர்களின் கைவிரல்கள், உள் ளங்கை ஆகியவற்றில் புண் ஏற்பட்டு தோல் கழன்று விடும் நிலை ஏற்படும்.

எனவே இந்த நோய் பரவுவ தைத் தடுக்கும் முகமாக எமது கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. நோய்க்குரிய தடுப்பு மருந்து ஏற்றுதல், நோய் வந்த மாடுகளைத் தனியாக அடைத்து வைத்து உணவூட்டல், தொற்று ஏற்பட்ட இடங்களிலிருந்து மாடுகளைக் கொண்டு வருதலைத் தடுத்தல் என்பவற்றால் இந்த நோய் மேலும் பரவாது தடுக் கலாம்.

இந்த நோயை தடுப்பதற்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கள் கடந்த 2 ஆம் திகதியிலிருந்து வவுனியா மாவட்டம் முழுவதிலும் ஆரம்பிக்கப் பட் டுள்ளது - என்றார். (க-402)

## ஓட்டோ தடம் புரண்டதில் படுகாயமடைந்தார் சாரதி

வவுனியா, ஜன.9

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் ஓட்டோ தடம்புரண்டதில் அதன் சாரதி படுகாய மடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கடந்த மூன்றாம் திகதி வவுனியா மகாறம்பைக்குளம் குளக்கட்டு வீதியூடாகச் சென்ற ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டதில் மகா றம்பைக்குளம் வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த எஸ்.பாலச்சந்திரன் என்பவர் படுகாயம டைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண் டுள்ளனர். வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள குளக்கட்டுக் களில் வாகனங்களைச் செலுத்தும் வாகன சாரதிகள் அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

## பிளாஸ்ரிக் கழிவுகளுக்கு மவுசு


கிளிநொச்சி, ஜன.9

**கிளிநொச்சிக்கு வரும் தென்னி லங்கை வியாபாரிகள் பழைய பிளாஸ்ரிக் பொருள்களுக்குப் பதிலாக புதிய பொருள்களை வழங்கி வருகின்றனர்.**

**கிளிநொச்சியிலுள்ள கிராமங்களுக்கு சிறிய வடிரக வாகனங்களில் வருகின்ற தென்னிலங்கையைச் சேர்ந்த வியாபாரிகள் மக்களிடமிருந்து உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள், இரும்புப் பொருள்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டு அவற்றுக்குப் பதிலாக புதிய பிளாஸ்ரிக் பொருள்களை வழங்கி வருகின்றனர்.**

**இத்தகைய வியாபாரிகள் கிராம வீதிகளில் தமது வாக னங்களில் பூட்டப்பட்ட ஒலி பெருக்கி மூலமாக இது தொடர் பாக விளம்பரம் செய்து வருவதையும் காண முடிகின்றது.**

(க-426)



# இணுவில் திருப்பதி அருள்மிகு
# ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலய
## சுவர்க்க வாசல் ஏகாதசி உற்சவம்

அடியார்களே!

நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ விஜய வருடம் மார்கழி மாதம் 27ஆம் நாள் (11.01.2014) சனிக்கிழமை இணுவில் திருப்பதி என அழைக்கப்படும் பத்மாவதி தாயரூர் கோதை நாச்சியார் உடனுறை ஸ்ரீ வேங்டேஸ்வரர் ஆலயத்தில் சுவர்க்க வாசல் ஏகாதசி உற்சவம் நிகழ்வதற்கு திருவருள் கைகூடியுள்ளது.

காலை 6.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை வேங்கடேஸ்வரப் பெருமானுக்கு பத்து அவதார விசேட பூசை நிகழவுள்ளது.

**மேலும் காலை 7.30 மணிக்கு**

**சுவர்க்க வாசல் திறப்பும் அதனைத் தொடர்ந்து நாராயணதிவ்விய தர்சனமும் தொடர்ந்து சுவாமி வீதியுலா நிகழ்வும் நடைபெறும்.**

குறிப்பு:
எம்பெருமானின் பத்து அவதார ஆராதனையில் பங்குபெற விரும்பும் அடியார்கள் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும். விழித்திருந்து இறைவனை வழிபடவாரீர பலன்பல பெறுவீர்.

**ச. கணேசலிங்கம்.**
ஆதீனகர்த்தா
021 224 2300

(C/10995)(10.6)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



வளாகவீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட சமூக சேவையாளரும் சமயப் பற்றாளருமாகிய

**சின்னத்தம்பி இராஜகோபாலன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய வீரபத்திரரை வேண்டுகின்றோம்

*இ. தேவராசா குடும்பம்*
*வீரபத்திரர் கோயிலடி, சுதுமலை.*

## றோசா பூக்கள் மற்றும் றோசா கன்றுகள் மலிவு விற்பனை

*ஸ்ரீகிருஷ்ணா றோஸ் பாம்*
*தலங்காவல் பிள்ளையார் வீதி,*
*திருநெல்வேலி.*
*தொடர்புகளுக்கு 021 568 5149*

## நாஹா மருத்துவ நிலையம்

* மாதவிடாய் தடைப்படும் பல்வேறு கெற்ப நோய், குழந்தையின்மை அதி அற்புதமான மருந்தியல்.
* கண் திறவாத பாரிசவாதம், கடினமான கை, கால் விறைப்பு, நாரிப் பிடிப்பு, ஆஸ்மா குணப்படல்.

T.P: 0773212740
வங்கியின் முன் லேன்,
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதிவீடு)
மானிப்பாய்.
(42100) (10,6)

## மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்

**பணியாளர் தேவை**
* புகைப்பட தொழில் பழகி வேலை செய்ய விரும்புபவர்கள்.
* உதவியாளர்கள்.
* புத்தகம் கட்டுபவர்கள்.

**விசேட விலைக்கழிவு**
இந்தியன் விசாவுக்கான படம் பிடிக்க
80/- மட்டும்

மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
021 221 9399 (#/10992) (4.6)

CEYLON THEATRES

## நாளை முதல்




(ஹிந்தி) ஆங்கில மொழிபெயர்ப்புடன்

MAJESTIC CINEPLEX - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)
Silver 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சுப்பிரமணியம் நவரத்தினம்
### (முன்னாள் சாந்தி லொறி உரிமையாளர்)

தோற்றம் :
02. 07.1945

மறைவு :
21. 12.2012

திதி: நவமி
09.01.2014



எங்கள் குடும்பத்தின் தெய்வமே
எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
எங்கள் குல விளக்கு அணைந்து
ஓர் ஆண்டு ஆகியும் எங்கள்
குடும்பம் இருளில் தான் மூழ்கி
இருக்கிறது ஐயா!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்கள் எங்களுடன் இருந்த போது
எங்கள் இல்லத்தின் ஒளி விளக்கு
ஒளி விட்டுப் பிரகாசமாக இருந்தது
அப்படி ஒரு பிரகாசத்தை இனி எப்போது
காண்போம் நாம் !
அந்த ஒளிப் பிரகாசத்தை மறக்கவும் முடியாது
மண்ணில் பிறந்த அனைவரும் இறப்பது நியதி
என்ற வகையில் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல நெல்லண்டை பத்திரகாளியை
வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

நிரந்தர முகவரி
பலாலி கிழக்கு,
வசாவிளான்.

தற்காலிக முகவரி
பத்தமேனி,
அச்சுவேலி

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### நாகேந்திரம் சிவபாதம் (சின்ராசு)

கொக்குவில் மேற்கு, கல்த்திட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் சிவபாதம் (சின்ராசு) நேற்று முன்தினம் (07.01.2014) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், ஆறுமுகம் காலஞ்சென்ற குஞ்சம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலரின் அன்புக் கணவரும், சிவசுதன், சிவகரன் (சுவிஸ்), சிவதாசினி (சுவிஸ்), சிவதர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மேனகா, ரதிவதனன், சுபா, பிறிசேஸ்ஆகியோரின் மாமனும், இராசரத்தினம், இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, மகேஸ்வரி, யோகராசா ஆகியோரின் சகோதர னும், பானுஜா, அனோஜி, ரஜீனா, வியூசன், தானியா, சார்விகா, ஹரிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்த்திட்டி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற திறப்பு விழாவுக்கு முதல்வருக்கு அழைப்பில்லை

யாழ். மாவட்டத்தில் மூன்று நீதிமன்றங்கள் இன்று திறந்து வைக்கப்படவுள்ள நிலையில் நீதிமன்றங்கள் அமைந்துள்ள பிரதேச சபைகளின் தவிசாளர்களுக்கு கூட அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆயினும் வடமாகாண முதலமைச்சருக்கு அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை.

சாவகச்சேரி, மல்லாகம், ஊர்காவற்றுறை நீதிமன்றங்கள் இன்று பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸினால் திறந்து வைக்கப்படவுள்ளன. நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உட்பட சிலர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். ஆயினும் வடமாகாணத்தைப் பிரதிபலிக்கும் முதலமைச்சரும், முன்னாள் நீதியரசருமான க.வி. விக்னேஸ்வரனுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை. அழைப்பு விடுக்கப்படாததை அவரின் செயலாளரும் உறுதிப்படுத்தியுள்ளார். (த-4-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 64 ஏக்கரில்

இது தவிர மாவிட்டபுரம் கலட்டிப் பகுதியிலும் 55 ஆவது படைப் பிரிவுக்கான புதிய முகாமை கோத்தபாய நேற்று திறந்தார்.

முதலில் கிளிநொச்சி படைத்தளத்துக்குச் சென்ற பாதுகாப்புச் செயலர் அங்கு உயிரிழந்த படையினரின் நினைவுக் கல்லைத் திரை நீக்கம் செய்து வைத்தார். பின்னர் " சிவப்பு பறவைகள்" எனும் பிரிவையும் இராணுவத்தில் ஆரம்பித்து வைத்தார். இந்தப்பிரிவில் மும்மொழிகளும் பேசுவோர் உள்ளனர். எங்காவது பிரச்சினை ஏற்படின் ஒலியெழுப்பும் கருவி பூட்டப்பட்ட சைக்கிளில் அவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து செல்வர் என்று அதற்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது.

அதன் பின்னர் மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான 64 ஏக்கர் காணியில் நிர்மாணிக்கப்பட்ட 52 ஆவது படைத் தலைமையகத்தை அவர் திறந்து வைத்தார். அங்கு அந்தத் தலைமையகத்தின் வரைபடத்தைப் பார்வையிட்டதோடு தனது வாகனத்தில் தலைமையகத்தைச் சுற்றிப் பார்வையிட்டார்.

குறித்த காணி தனியாருக்குச் சொந்தமானது என்றும் அது படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகிறது.

வரணியில் இயங்கி வரும் 52 ஆவது படைப்பிரிவே மிருசுவிலுக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மாவிட்டபுரம் கலட்டியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மற் றொரு படைமுகாமும் திறந்து வைக்கப்பட்டது.

உடுவிலில் இயங்கிய 55 ஆவது படை முகாம் மாவிட்டபுரத்துக்கு மாற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பலாலிக்குச் சென்ற பாதுகாப்புச் செயலர் அங்கு ஏற்கனவே உள்ள இராணுவ வைத்தியசாலைக்கு அருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மற்றொரு இராணுவ வைத்தியசாலையையும் திறந்துவைத்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் அவரது வாகனத்திலேயே வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும் ஒன்றாகப் பயணித்து சகல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார். இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் தயா ரட்ணாயக்க, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க மற்றும் படை அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர். (த-4-5-9)

### வடக்கு

ளின் வாழ்வாதாரத்துக்குரிய விவசாயக் காணிகள் மீளப்பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவில் விவசாய வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவேண்டும்.

சுகாதாரத் திணைக்களத்தின் தற்காலிக வாகனச் சாரதிகள் நிரந்தர நியமனம் செய்யப்பட வேண்டும்.

ஒட்டுசுட்டானைத் தனிப் பிரதேச சபையாக மாற்றவேண்டும்.

பனை, தென்னை உற்பத்தி மற்றும் சந்தை வாய்ப்பை மேம்படுத்துவதற்காக அதிகார சபை அமைக்கப்படவேண்டும்.

ஆறுமுகநாவலர் மற்றும் தனிநாயகம் அடிகளார் ஆகியோருக்கு மாநாகரசபை எல்லைக்குள் சிலை அமைக்கப்பட வேண்டும்.

புனர்வாழ்வு பெற்றுவரும் தமிழ் அரசியல் கைதிகளை ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும்.

போரில் அவயவங்களை இழந்தவர்களை, மாகாண அரச சேவையில் இணைத்துக்கொள்ளவேண்டும்.

முறிகண்டி கோயிலில் வாகனங்கள் தரித்துச் செல்வதைக் கட்டாயமாக்கல் வேண்டும்.

வடக்கு மாகாணசபையின் உள்ளகக் கணக்காய்வு திணைக்களங்கள் மன்னார், முல்லைத்தீவில் அமைக்கப் பட வேண்டும்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் உருவப்படம் மாகாண அலுவலகங்களில் காட்சிப் படுத்தப்பட வேண்டும்.

மேற்குறித்த பிரேரணைகளே இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளன.

**எதிர்கட்சித் தலைவர் இல்லை**

வடக்கு மாகாணசபையின் எந்தவொரு அமர்வுகளிலும் இதுவரை பங்குபற்றாது விடு முறையிலிருந்த இராமநாதன் அங்கஜன் இன்றைய அமர்வில் பங்கெடுக்கவுள்ளதுடன் அவர் கன்னியுரை நிகழ்த்தவுள்ளார். அத்துடன் வடக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்ட கந்தசாமி கமலேந்திரன் கொலைக் குற்றச் சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையால், சபை அமர்வுகளில் பங்கெடுக்கவில்லை.

இந்த நிலையில் வேறெவரையும் எதிர்க்கட்சித் தலைவராக நியமித்துக் கட்சி செயலாளரினால் கடிதம் எதுவும் பேரவைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

### போர்க்

பான உண்மையை ஆராய்வதற்காக வந்திருப்பதாக ஸ்ரீபன் ராப் எம்மிடம் தெரிவித்தார். அத்துடன் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கு எடுக்கப் பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயவுள்ளதாகவும் ராப் எம்மிடம் கூறினார்.

வடக்கு மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் மாகாணசபைத் தேர்தலில் வாக்களித்தனர். அவர்கள் இதனூடாகத் தமக்கு ஏதாவது தீர்வு வரும் என்று அவர்கள் நம்பியிருந்தார்கள். அவர்களின் எதிர்பார்ப்புக்கள் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை. வடக்கு மாகாண தேர்தல் நடத்தப்பட்டாலும் அமைக்கப்பட்டுள்ள மாகாண சபைக்கான அதிகாரங்கள் குறைவாகவே உள்ளன. இதனையாவது வழங்குவதற்கு அரசு தயாராகவில்லை.

மாகாண அரசுடன், மத்திய அரசு முறுகல் நிலையையே கடைப்பிடிக்கின்றது. இந்த மாகாணசபையினூடாக மக்களின் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்- என்றனர்.

இதேவேளை மன்னார் ஆயர் போர்க்குற்றங்கள் தொடர்பிலான ஆதாரங்கள் சிலவற்றை அமெரிக்க அதிகாரிகளிடம் கையளித்துள்ளார்.

**கொத்துக்குண்டுகள்**

போரின் இறுதிக் கட்டத்தில் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள், இரசாயன ஆயுதம் என்பவற்றைப் படைகள் பயன்படுத்தியுள்ளன. இவர்கள் இதனைச் சண்டையில் எப்போது, எங்கே பாவித்தார்கள் என்பதையும் மக்கள் எங்களுக்கு விவரமாகத் தந்துள்ளனர். அதனை அமெரிக்க தூதுவரிடம் கையளித்துள்ளோம் என்றார் மன்னார் ஆயர்.

ஸ்ரீபன் ராப்பிடம் ஆயர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வைத்தியசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளாகப் பாவிக்கப்பட்ட பாடசாலைகள் மீது ஷெல் வீச்சு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதன் காரணமாக பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. வள்ளிபுனம் பிரதேசத்தில் (செஞ்சோலை சிறுவர் இல்லம்) முதலுதவிப் பயிற்சிக்காகச் சென்றிருந்த மாணவர்கள் மீது விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்டதில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

மருந்தையும், உணவையும் போர் ஆயுதமாகப் படையினர் பயன்படுத்தினர். போர் நடைபெற்ற பகுதிகளுக்கு மருந்து மற்றும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டது.

**போர்தவிர்ப்பு வயைம் மீது தாக்குதல்**

இலங்கை அரசு பிரகடனப்படுத்திய மோதல் தவிர்ப்பு வலயங்களிலும் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது அரச படையினர் ஷெல் வீச்சுத் தாக்குதல் நடத்தினர். இதனால் அதிகளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. இடம்பெயர்ந்து கோயில்களில் தங்கியிருந்த மக் கள் மீது விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்டு ஏராளமானோர் கொல்லப்பட்டனர். தமி ழீழ விடுதலைப் புலிகளைக் கொல்ல வேண்டும் என்பதற்காக மக்களைக் கொல்ல முடியாது.

**ஒவ்வொருவர் தொடர்பிலும் விசாரணைதேவை**

இலங்கையில் காணாமற்போன ஒவ்வொருவர் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். போரின் இறுதி எட்டு மாதங்களிலும் ஒரு லட்சத்து 46 ஆயிரம் பேர் வரையில் காணாமற்போயுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

செம்மணி புதைகுழி தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு 3 எலும்புக் கூடுகள் மீட்கப் பட்டதுடன் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. அதில் ஐநூறுக்கும் அதிகமானோர் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அது கைவிடப் பட்டது. மன்னாரில் மீட்கப்படும் புதைகுழி மற்றும் செம்மணி புதைகுழி தொடர்பில் முழுமையாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

**நல்லிணக்கத்துக்கு அரசே முட்டுக்கட்டை**

தென்னாபிரிக்காவில் ஏற்படுத்தப்பட்டதைப் போன்று இங்கும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டுமாக இருந்தால் அங்கு அதற்கு உரிய புறச் சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தமிழ் அரசியலில் தளம்பல் ஏற்படுத்துவதற்காக அரசு திட்டமிட்ட ரீதியில் சிங்களக் குடியேற்றத்தை முன்னெடுக்கின்றது. அத்துடன் மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்ப முடியாத வகையில் இராணுவக் குவிப்புச் செய்யப்பட்டுள்ளது. இது நல்லிணக்கம் ஏற்படுவதற்குரிய புறச்சூழல் அல்ல.

**பழிவாங்கவில்லை**

நாம் இலங்கை அரசின் போர்க் குற்றங்களை வெளிப்படுத்துவதோ இவற்றை தெரியப்படுத்துவதோ அவர்களைப் பழிவாங்குவதற்கு இல்லை. இந்த நாட்டின் நன்மைக்காகவே அவற்றைச் செய்கின்றோம். இங்கு நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டுமானால் இவை செய்யப்பட்டாக வேண்டும்-என்றனர். (த-5)

### நிறைவேற்றப்பட்ட

சபையை பெரும்பான்மையுடன் கைப்பற்றியுள்ளது. இதுவரை வரவு செலவுக் கூட்டத் தொடர் உள்ளிட்ட மூன்று கூட்டத் தொடர்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று கூட்டத் தொடர்களிலும் பல்வேறு உறுப்பினர்களாலும் 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய திணைக்களங்களுக்கு அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு அனுப்பி வைக்கப் பட்ட தீர்மானங்கள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது தொடர்பில் இதுவரையில் எந்தவொரு திணைக்களத்தினாலும் மாகாணசபைக்குப் பதில் வழங்கப்படவில்லை.

பாடசாலையிலிருந்து இராணுவ வெளியேற்றம், சிவில் ஆளுநர் வடக்குக்கு நியமிக்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### உடைமைகளை

தது. பொதுமக்களின் வீடுகளும் காணிகளும் முகாமுக்குள் முடங்கிக் கிடந்தன.

வரணி படைமுகாம் தற்போது மிருசுவில் ஆசைப் பிள்ளை ஏற்றம் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

இதன் மூலம் வரணியில் படைமுகாம் அமைந்திருந்த காணிகள், வீடுகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை நம்பி அங்கு சென்ற உரிமையாளர்கள் ஏமாற்றி அனுப்பப்பட்டனர். பாதுகாப்பு அமைச்சு செயலர் நேற்று மிருசுவில் பகுதியில் படை முகாம் திறந்து வைக்கும் நிகழ்விலேயே இந்த சம்பவம் இடம்பெற்றது. (ஜ-4-122)

### சர்வதேச

தூதுவர் மிச்செல் ஜே சிசன் மற்றும் அமெரிக்க தூதரக அரசியல் விவகார அதிகாரிகள் ஆகியோரும் வருகை தந்தனர்.

இவர்கள் கிறீன் கிறாஸ் விடுதியில் வடபகுதிச் சிவில் சமூகத்தினரைச் சந்தித்திருந்தனர். இந்தச் சந்திப்பு சுமார் 2 மணி நேரம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நம்பகமான விசாரணையை இலங்கை அரசு செய்யும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. எனவே சர்வதேச விசாரணை அவசியம்என்று அவர்கள் வலியுறுத்தினர்.

**காணமற்போனவர்கள்**

காணமற்போனவர்கள் தொடர்பிலான ஒரு பெயர்ப் பட்டியலும் ஸ் ரீபன் ராப்பிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் நம்பிக்கையில்லை எனவும், வேறு வழியில்லாமலேயே அந்த ஆணைக் குழுவுக்குத் தகவல் வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காணமற்போனவர்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையே தேவை என்றும் இதில் வலியுறுத்தப்பட்டது.

**சூடான் அரசு கேட்டா செய்தீர்கள் ?**

இலங்கை மீது சர்வதேச விசாரணையை முன்வைப்பதற்கும் அதனை நோக்கி நகர்வதற்கும் இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்று ஸ் ரீபன் ராப் இதன்போது தெரிவித்துள்ளார். இதற்குச் சிவில் சமூகப் பிரதிநிதிகள், சூடானிய அரசு கேட்டா அங்கு நீங்கள் போர்க்குற்ற விசாரணை செய்தீர்கள்?ஏனைய நாட்டு அரசுகள் கேட்டா நீங்கள் அங்கு போர்க்குற்ற விசாரணை செய்தீர்கள்? என்று அவரிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த ஸ் ரீபன் ராப், சர்வதேச விசாரணை கொண்டு வருவதில் சில சவால்கள் இருக்கின்றன. ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தும். மேலும் கடுமையான பிரேரணையை முன்வைத்தால் சில நாடுகள் பிரேரணைக்கு ஆதரவளிக்காமல் போய்விடும். அதனால் அது தோல்வியடைந்துவிடும் என்றார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் நேற்று மாலை வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனையும், வடக்கு முதல்வரையும் தனித் தனியாக சந்தித்துக் கலந்துரையாடினார் ஸ்ரீபன் ராப்.

**தெரிவிக்க முடியாது**

ஸ்ரீபன் ராப்புடன் சந்திப்பு மேற்கொண்ட வடக்கு முதல்வரிடம் சந்திப்பு தொடர்பாகக் கேட்டபோது, இது தொடர்பில் எதுவும் தெரிவிக்க முடியாது என்று பதிலளித்ததுடன் அவ்வாறு தெரிவிக்க முடியாமைக்காகப் பத்திரிகையாளரிடம் அவர் மன்னிப்புக் கோரினார். (த-5)

### பூஸா தமிழ்க்

பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார்.

இலங்கை அரச அதிகாரிகளை நேற்றுமுன்தினம் கொழும்பில் ஸ்ரீபன் ராப் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போது அவர் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு அரச அதிகாரிகள் பதிலளிக்கத் திணறியதாகத் தெரியவருகின்றது.

இலங்கை அரசினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று அரசின் இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியானால் அது எந்த அளவில் நடந்து கொண்டிருக்கின்றது. அது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என ஸ்ரீபன் ராப் அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பிய போது அவர்கள் யாரும் சரியான பதிலளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

**பயங்கரவாத தடைச்சட்டம்**

சட்டமா அதிபர் திணைக்களத்துக்குச் சென்ற ஸ்ரீபன் ராப் அங்கு சட்டமா அதிபர் பாலித பெர்ணான்டோவைச் சந்தித்து சுமார் ஒன்றரை மணிநேரம் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு மற்றும் திருகோணமலை அக்ஷன் பார்ம் நிறுவன ஊழியர்கள் 17 பேர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு ஆகியவை தொடர்பில் அவர் கலந்துரையாடியுள்ளார்.


மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பிலும் அவர் ஆராய்ந்துள்ளார். இதன் போது அவர்கள் மீதான வழக்குகள் தொடர்பில் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தினால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக பூஸா தடுப்பு முகாமுக்குச் சென்று தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களையும் அவர் சந்தித்துள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் சேவை மன்ற தேசிய மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜன.9
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் பொலநறுவையில் நடைபெற்றது.
இதன் முன்னோடி நிகழ்வாக இடம்பெற்ற பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் வலி.தென்மேற்கு பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தின் சார்பாகப் பங்கு கொண்டு தேசிய ரீதியில் 10 ஆவது இடத்தைப் பெற்ற பண்டத்தரிப்பு இளைஞர் கழகத்தைச் சேர்ந்த ந.சுமதிக்கு பணப் பரிசிலும் சான்றிதழும் வழங்கப்பட்டன.
கடந்த வெள்ளிக்கிழமை இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவருமான க.உஷாந்தன், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர்சேவை அதிகாரி நவசக்தி ஆகியோர் இணைந்து இதனை வழங்கினார்கள்.
பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் அமைப்பாளர் ஜெபநேசனும் இதில் கலந்து கொண்டார். (த-23)



## மன்னார் லீக்கின் நிர்வாகத் தெரிவு



யாழ்ப்பாணம், ஜன.9
மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு லீக்கின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.
எனவே பதிவு செய்யப்பட்ட சகல கழகங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு லீக்கின் செயலாளர் அறிவித்துள்ளார். (த-23)

## வேலணை பிரதேச செயலகத்தின் மென்பந்து கிரிக்கெட் இறுதியாட்டம்



யாழ்ப்பாணம், ஜன.9
வேலணை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பபட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் புங்குடுதீவு இறுப்பிட்டி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## சதுரங்கப் போட்டி



யாழ்ப்பாணம்,ஜன.9
ஆளுநர் செயலகத்தினால் நடத்தப்படும் ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான சதுரங்க சுற்றுப் போட்டித் தொடரில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கோட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

## செலான் வங்கி உதைபந்தாட்டத்தின் காலிறுதியாட்டங்கள் சனியன்று



யாழ்ப்பாணம், ஜன.9
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெல்லியடி செலான் வங்கி நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டங்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெற வுள்ளன.
இதில் 'ஏ' பிரிவில் பிற்பகல் 3 மணிக்கு டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
பிரிவு 'பி' யில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜன.9
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பூமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

வவுனியா, ஜன.9
வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் வடதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து லயன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## 227 ஓட்டங்களால் யாழ். மத்தி வெற்றி



யாழ்ப்பாணம்.ஜன.9
சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி 227 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
கடந்த வாரம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 61 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் யூலியஸ் கனிஸ்ரன் 77 ஓட்டங்களையும், நிரோஷன் 72 ஓட்டங்களையும், டினோஷன் 22 ஓட்டங்களையும், மதுஷன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.
பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி சார்பில் பாலபிரசாத் 18 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் ஜனக்ஷன் 15 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 58 ஓட்டங் களுக்கு 2 இலக்குகளையும் மிதுஷன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 35 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் ஜனக்ஷன் 34 ஓட்டங்களையும், கயந்தன், துவாரதீசன் ஆகியோர் முறையே 14 ஓட்டங்களைப் பெற்றனர்.
பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் நிருபன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 6 இலக்குகளையும் அலன்ராஜ் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், யூலியஸ் கனிஸ்ரன் 7 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் சௌமிதரன் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.
தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 31 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தினை இடைநிறுத்திக் கொண்டது.
இதில் சௌமிதரன் 37 ஓட்டங்களையும், டினோசன் 28 ஓட்டங்களையும், யூலியஸ், கனிஸ்ரன் 17 ஓட்டங்களை யும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி சார்பில் ஜனக்ஷன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், கேதீசன் 11 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 39 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 51 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.
இதில் கேதீசன் 65 ஓட்டங்களையும், ஜனக்ஷன் 40 ஓட்டங்களையும், சயந்தன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் யூலியஸ், கனிஸ்ரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், நிருபன் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மதுஷன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 9 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சௌமிதரன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும், அலன்ராஜ், 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

## வேலணை பிரதேசத்தின் கபடி, எல்லே போட்டிகள்



யாழ்ப்பாணம், ஜன.9
வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடி, எல்லே போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.
அத்துடன் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி, ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்ட போட்டி என்பன எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன என்று விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் யசிதரன் தெரிவித்தார். (த-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கையுடனான ஆட்டத்தை இலகுவாக நினைத்தது பாகிஸ்தான்

பாகிஸ்தான் அணி இலங்கைக் கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பலமான நிலையில் காணப்பட்ட நிலையில், போட்டியை இலகுவாக எடுத்துக் கொண்டது எனவும், அதன் காரணமாக அப் போட்டியில் ஆதிக்கம் செலுத்த முடியாது போனது எனவும் பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார்.

முதலாவது டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 327 ஓட்டங்களுடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 3ஆம் நாளில் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்து 383 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இந்த இனிங்ஸில் விரைவாக இலக்குகளை இழந்தமை என்பதை விட, முன்னிலையைப் பெற்ற பின்னர் இப்போட்டியை இலகுவாக எடுத்துக் கொண்டமை என்பதே தவறு எனக் குறிப்பிட்ட டேவ் வட்மோர், அதுபற்றிக் கலந்துரையாடியிருந்த போதிலும், மீண்டும் இலகுவாக எடுத்துக் கொண்டதாலேயே இப்போட்டியில் பாகிஸ்தான் பின்தங்க வேண்டியேற்பட்டது எனக் குறிப்பிட்டார்.

3ஆம் நாள் ஆட்டம் ஆரம்பிக்கும் போது மொத்தமாக 9 வேளைகள் காணப்பட்டதாகக் குறிப்பிட்டடேவ் வட்மோர், ஆனால் இலக்குகளை தொடர்ச்சியாக இழந்ததன் காரணமாக இலங்கை அணிக்குவாய்ப்பை வழங்கியதாகக் குறிப்பிட்டார். அபுதாபி ஆடுகளம் ஓரளவு சிறந்த ஆடுகளம் எனக் குறிப்பிட்ட அவர், ஆனால் மூன்றாம் நாள் ஆட்டம் இரு அணிகளுக்கும் திருப்பு முனையானதாக அமைந்ததாகக் குறிப்பிட்டார். பாகிஸ்தான் அணிக்கு சாதகமற்ற திருப்புமுனையாகவும், இலங்கைக்கு சிறப்பான திருப்பு முனையாகவும் மூன்றாம் நாள் அமைந்ததாக அவர் குறிப்பிட்டார். (த)

# 20/20 தொடரிலும் டரன் சமி இல்லை

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், நியூசிலாந்து அணிக்குமிடையிலான 20/20 தொடரில் மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் டரன் சமி பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.


நியூசிலாந்து அணிக்கெதிரான 3ஆவது ஒரு நாள் சர்வதேசப் போட்டிக்கு முன்னதாகக் காயமடைந்த டரன் சமி, ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

தற்போது அவர் 20/20 அணியிலும் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட பின்தொடைத் தசைநார் உபாதை இன்னமும் குணமடையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மேற்கிந்தியத் தீவுகள் 20/20 அணியின் தலைவராக ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் தலைவரானடுவைன் பிராவோ செயற்படவுள்ளார். 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் ஜனவரி 11ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மேற்கிந்தியத் தீவுகள் குழாம்:**
டுவைன் பிராவோ, சாமுவேல் பத்ரி, ரீனோ பெஸ்ற், ஜோன்சன் சார்ள்ஸ், நர்சிங் டியோநரைன், அன்ட்ரே பிளெற்சர், ஜெஸன் ஹோல்டர், நிக்கித்தா மில்லர், சுனில் நரைன், கெரான் பவல், டினேஷ் ராம்டின், ரவி ராம் போல், அன்ட்ரே றசல், லென்டில் சிமன்ஸ், சட்விக் வோல்ற்றன். (த)

# ஆவலுடன் கெவின் பீற்றர்சன்




2015ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள அடுத்த ஆஷஸ் கிரிக்கெட் தொடரில் பங்குபற்றும் எண்ணத்துடன் உள்ளதாக இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

ஆஷஸ் தொடருக்காக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்த இங்கிலாந்து அணி, அங்கு வைத்து ஆஷஸ் தொடரை 0-5 என்ற கணக்கில் மோசமாகத் தோற்றிருந்தது. இதன் காரணமாக இங்கிலாந்து அணியின் வீரர்கள் மீது அதிகமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக இங்கிலாந்து அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான கெவின் பீற்றர்சனின் அர்ப்பணிப்புக் குறித்தும், அவரது ஆர்வம் குறித்தும் அதிகளவிலான கேள்விகள் எழுப்பப் பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்றுக் கருத்துத் தெரிவித்துள்ள கெவின் பீற்றர்சன், நடைபெற்று முடிந்த ஆஷஸ் தொடரில் 0-5 என்ற கணக்கில் தோல்விய டைந்தமை குறித்து ஏமாற்றமடைவதாக வும், தனிப்பட்ட ரீதியில் ஓட்டங்களைப் பெற முடியாமையும் ஏமாற்றம் தருவதாகவும் தெரிவித்ததோடு, மிகக் கடினமானதொரு அணிக்கெதிராக மிகக் கடினமானதொரு தொடராக இத்தொடர் அமைந்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தொடரில் ஆதரவு தெரிவித்தமைக்காக அனைத்து ரசிகர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்ட கெவின் பீற்றர்சன்; 2015ஆம் ஆண்டு ஆஷஸ் தொடரில் பங்குபற்றுவதற்கு ஆர்வத்துடன் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (த)





# ஆஸியிடம் தோற்றது வெட்கக்கேடானது

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரை இங்கிலாந்து முற்றிலுமாக இழந்துள்ளதால் பல்வேறு விமர்சனங்கள் வந்து குவிகின்றன. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணி 5-0 என்ற கணக்கில் இழந்தது.

இதனையடுத்து இங்கிலாந்து அணி வீரர்கள் மீது அந்நாட்டு முன்னாள் தொடக்க வீரரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான ஜெப்ரி பாய்காட் கடுமையாகப் பாய்ந்துள்ளார்.


இது குறித்து அவர் கூறுகையில், ஒரு நாள் ஆட்டத்தில் விளையாடும் முட்டாள்கள் போல் இங்கிலாந்து வீரர்கள் ஆடுகிறார்கள். தற்போதைய ஆஸ்திரேலிய அணி தலை சிறந்தது இல்லை என்பதால் இங்கிலாந்து தோற்கடிக்கப்பட்டதை ஜீரணிக்க முடியவில்லை. இங்கிலாந்து அணி 2006-07 இல் ஆஷஸ் தொடரை முழுமையாக இழந்ததற்கும், தற்போது தோற்றமைக்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. அப்போதைய ஆஸ்திரேலிய அணியில் வோர்ன், மக்ராத், கில் கிறிஸ்ட் போன்ற தலைசிறந்த வீரர்கள் இருந்தனர். அப்போது தோல்வி அடைந்ததில் அவமானம் இல்லை. ஆனால், தற்போதைய தோல்வி மிகவும் அவமானமானது என்று தெரிவித்துள்ளார். இதேவேளை முன்னாள் அணித் தலைவரான இயன் பொத்தமும் இங்கிலாந்து அணியைக் கடுமையாக சாடியுள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் தொடரை முழு மையாக இழந்தது மிகவும் வெட்கக்கேடானது என்றும் இங்கிலாந்து அணிக்கு முதுகெலும்பு இல்லாததை இந்தத் தோல்வி எடுத்துக் காட்டுகிறது என்றும் தெரிவித்துள்ளார். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வு முடிவில் சேவாக்



இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் வீரேந்தர் ஷேவாக். மோசமான ஆட்டம் காரணமாக கடந்த 9 மாதங்களுக்கு முன்பு இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டார். அதன் பிறகு ஷேவாக்கால் அணிக்கு திரும்ப இயல வில்லை. நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் விளை யாடும் இந்திய அணி சமீபத் தில் அறிவிக்கப்பட்டது. அதி லும் அவருக்கு வாய்ப்பு வழங் கப்படவில்லை.


உள்ளூர் போட்டியான ரஞ்சி போட்டியிலும் அவரால் சிறப்பாக விளையாட முடிய வில்லை. இதனால் தான் தேர்வு குழு அவரை தொடர்ந்து ஒரம் கட்டி வருகிறது. கடந்த மார்ச் மாதம் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டிக்கு பிறகு ஷேவாக் நீக்கப்பட்டார். கடந்த ஜனவரி மாதமே ஒருநாள் போட்டியில் இருந்து கழற்றி விடப்பட்டார்.

ஒருநாள் போட்டியில் வாய்ப்பு கிடைப்பது கடினம் என்று கருதி இருந்த ஷேவாக்குக்கு தற்போது டெஸ்ட் அணியிலும் அதே நிலை தான் உள்ளது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா இழந்தாலும் தொடக்க வீரர்களில் முரளி விஜய் நன்றாக ஆடினார். ஷிகார் தவானும் நன்றாக ஆடக்கூடி யவர்.

உள்ளூர் போட்டியில் நன்றாக ஆடியும் காம்பீர் கூட 3ஆவது தொடக்க வீரராக தேர்வு செய்யப்படவில்லை. இதனால் ஷேவாக் இந்திய அணிக்கு மீண்டும் திரும்புவது என்பது அவ்வளவு எளிதல்ல.

இதனால் ஷேவாக் ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான மன நிலையிலும் அவர் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. யாரும் கட்டாயப்படுத்தி அவர் ஓய்வு முடிவை எடுக்க மாட்டார். அதற்கான மன நிலையில் இருப்பதால் விரைவில் ஷேவாக் ஓய்வு முடிவை அறிவிக்கலாம் என்று தெரிகிறது. (த)

## விலகமாட்டேன்




இங்கிலாந்து அணி ஆஷஸ் டெஸ்ட் தொடரை முற்றாக இழந்த நிலையில், அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர் பதவி விலகப் பேவதில்லை என்று அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் இந்தத் தோல்வியை அடுத்து பயிற்றுவிப்பாளர் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இந்த நிலையிலேயே, அன்டி பிளவர் தமது அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இங்கிலாந்து அணி, இவ்வாறு தொடர் ஒன்றை முற்றாக இழப்பது இது மூன்றாவது முறையாகும்.

இதனிடையே, டெஸ்ட் தொடரை இழந்த போதிலும் ஒரு நாள் தொடரில் தமது அணி சிறப்பாக செயற்படும் என்று அன்டி பிளவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (த)

## இலங்கையின் பந்துவீச்சில் சுருண்டது பாகிஸ்தான்




இலங்கை அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 165 ஓட்டங்களில் சகல .இலக்குகளையும் இழந்துள்ளது.

டுபாய் சர்வதேச மைதானத்தில் நேற்று ஆரம்பமான இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது இதனை அடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் அனைத்து இலக்குகளையும் இழந்து 165 ஓட்டங்களை மட்டுமே பெற்றது .அவ்வணி சார்பாக கம் மன்கூர் 73 ஓட்டங்களையும் பாற்றி 24 ஓட்டங்களையும் முகமட் ஹபீஸ் 21 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீப், ஹெரத் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் லக்மால் எரங்க இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர் அடுத்து களமிறங்கிய இலங்கை ஒரு இலக்கை இழந்து 57 ஓட்டங்களை பெற்றுள்ளது சில்வா, சங்ககார ஆகியோர் தலா 12 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும் .

(த-400)

# லக்மால், ஷமின்டவை புகழ்கிறார் மஹேல



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான சுரங்க லக்மால், ஷமின்ட எரங்க இருவரையும் இலங்கை அணியின் சிரேஷ்ட வீரரான மஹேல ஜெயவர்த்தன புகழ்ந்துள்ளார். அத்தோடு எதிர்காலத்தில் இவர்களிருவரும் முக்கியமான வீரர்களாக அமைவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான். இலங்கை அணிகளுக்கிடையில் அபுதாபியில் இடம்பெற்ற போட்டி வெற்றி தோல்வியற்ற நிலையில் முடிவடைந்திருந்தது. ஆனால் அப்போட்டியில் சுரங்க லக்மால், ஷமின்ட எரங்க இருவரும் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தியிருந்தனர். இருவரும் முறையே 46,41 பந்துப்பரிமாற்றங்களை இப்போட்டியில் வீசியிருந்தனர்.

முதலாவது போட்டியில் பின்னிலையில் காணப்பட்டு, அதன் பின்னர் அதிலிருந்து மீண்டு வந்தமை குறித்து மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்ட மஹேல, முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடும் போது இலங்கை அணி விரைவாக ஆட்டமிழந்த பின்னர் இலங்கையின் பந்துவீச்சாளர்கள் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தியிருந்ததாகக் குறிப்பிட்டார்.

இலங்கைக்காக இரண்டு வேகப்பந்து வீச்சாளர்கள் ஒரு போட்டியில் மிகச்சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தியிருந்தமை நீண்ட காலத்திற்குப் பின்னர் இப்போட்டியிலேயே எனக் குறிப்பிட்ட மஹேல ஜெயவர்த்தன, இவர்கள் இருவரையும் மேலும் மெருகூட்டினால் வெளிநாடுகளில் வைத்து இவர்கள்போட்டிகளைவென்றுகொடுப்பார்கள்எனக்குறிப்பிட்டார்.

முதலாவது போட்டியில் கிடைக்கப்பெற்ற வெற்றி தோல்வியற்ற முடிவு குறித்து மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்ட மஹேல, ஆனால் அடுத்த போட்டியில் சிறப்பாக ஆடி வெற்றிபெற முயற்சிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (த)

கங்காரு தேசத்தில் 'குடும்பம் குட்டியுடன்'
கணப்பொழுதில்
பறக்க எம்மிடம்
வாருங்கள்



55 வயதுக்குட்பட்டவரா நீங்கள், ஆம் ஆஸ்திரேலியாவுக்கு குடும்பமாக சென்று வணிகம், படிக்க உழைக்க நாம் வழிசமைக்கின்றோம். நம்பிவாருங்கள்

முன்னர் வேறுவகை விசாக்களுக்கு ஆலோசனை பெற்றவர்கள் நிபந்தனைகளுடன் இலவசமாகப் பெறலாம்

திசைகாட்டி (பிறை) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

சிங்கப்பூரில் படிக்க
பகுதி நேரமாக
80,000/= வரை உழைக்க

அபூர்வ - பொன்னான - அரிய - அதிசயமான
அதிரடியான வாய்ப்பு - 14.01.2014 வரை மட்டுமே
எந்தக் காலநிலையிலும் உங்களுக்கு சேவை புரியவென திசைகாட்டி காத்திருக்கும்.
7 நாள்களும் காலை 8 - மாலை 6 வரை

திசைகாட்டி (பிறை) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 021 221 9016, 021 568 9090
(42098) (10.8)
www.thisaivisa.com

A/L தொழில்நுட்பத்துறை
சனி, ஞாயிறு வகுப்புக்கள்

| நேரம் | 2016 | 2015 |
|---|---|---|
| 10-11 | Bio/Eng Tec | - |
| 11-12 | Sci-Tec | Bio/Eng - Tec |
| 12-01 | - | Sci - Tec |

ஏனைய அனைத்து பாடங்களுக்குமான நேர அட்டவணை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
D.M.I - ஆரியகுளம் சந்தி.

FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH
FRENCH CLASSES
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium, Swiss திருமணம் முடித்து செல்வோர், வேலை தேடுவோர் இலகுவாக பெறலாம்.
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007)
இது வரைக்கும் 750 க்கும் மேற்பட்டோர் French கற்றுள்ளனர்..
கடந்த International French Diploma exam இல் வடமாகாணத்தில் எமது மாணவர்கள் மட்டுமே சித்தி.....
Deutsch & Sinhala Classes உம் நடை பெறுகிறது...
No. 40, Palaly Road, ஆரியகுளம்.
No.181, 1st Floor, Main Street, Nelliady.
0779 789 456

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர் இணைய முடியும்.
"எமது 3 மாத பயிற்சி நிறைவில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 11.01.2014 சனிக்கிழமை
1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. காலை 11.30-01.00
4. மாலை இடமில்லை
ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்கள் கூட இப் பயிற்சிநெறியில் இணைந்து தமிழ்போல சரளமாக ஆங்கிலத்திலும் பேச முடியும்.
குறிப்பு : இட நெருக்கடியை தவிர்க்க முன்பதிவு செய்தல் மிக அவசியமாகும்
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
A1 B1
இலவச ஆலோசனைகளுக்கு 0777240707
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 0212224403 | நெல்லியடி 0212262470 | சாவகச்சேரி 0212270775 | சுன்னாகம் 0212241970

A/L 2016, DAY CLASS ஆரம்பம்
கணக்கீடு திரு. S. தவா
பொருளியல் திரு. P. சண்
வணிகக்கல்வி திரு. S.பிரதீபன்
A/L 2014, 2015 நடைபெறுகின்றது

A/L 2016 DAY CLASS ஆரம்பம்
தமிழ். T.S. நக்கீ
இந். நாக/ இந். சம S. ஜெயக்குமார்.
அரசியல் .N. பாபு
புவியியல் . S.P. சுதன்
வரலாறு .S. பிரபா
நா.க. L.காள்
A/L 2014, 2015 நடைபெறுகின்றது.

DCM யாழ் நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
பிரிவு 2 A/L 2016
கணக்கீடு AP.பகீரதன் B.B.A (FM.Spl.)
தொடர்பரீட்சையும் கருத்தரங்கும்
• A/L 2014 Day Class மாணவர்களுக்கான தொடர்பரீட்சையும் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.
• அனைத்துப் பரீட்சைகளும் மாதிரிப்பரீட்சைகளாகவே நடைபெறும்.
• உடனுக்குடன் கருத்தரங்குகள் நடைபெறும்
• வெளிமாணவர்களும் பங்குகொள்ளலாம்.
• 1ஆம் பரீட்சை 15.01.2014 புதன் 9.00-11.00 நடைபெறும்.
• அனுமதிகளையும், நேரஅட்டவணையையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
வர்த்தக பிரிவு
பொருளியல் S.வரதராஜன்
கணக்கீடு AP.பகீரதன்
வணிகக்கல்வி V.முரளி
ஆரம்பம் : 11.01.2014 சனி காலை 9.00 மணி
A/L 2014 Day Class வகுப்புகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.